உ

ஸ்ரீவேல்முருகன் துணை.

பஞ்சமூர்த்தி ஆரூடமென்னும்

# பலகறை சாஸ்திரம்

இதனுடன்

**கிரக இராசி யோக பலா பலன்களும்**

அடங்கியுள்ளது.

சென்னை, முத்தியாலுப்பேட்டை

V. A. தியாகராஜ செட்டியாரவர்களால்

எழுதப்பெற்றது

பிரசுரித்தவர்

**T. R. பாலகிருஷ்ண முதலியார்**

உரிமை பெற்றது] 1957 [விலை ரூபா 1-8-0

A:864
N57

# உரிமை அறிவிப்பு

உலகில் பலநூல்களை வெளியிடும் பதிப்பாசிரியர்களுக்கு பகிரங்கமாக தெரிவித்துக் கொள்ளுவது யாதெனில் இந்த **பலகறை சாஸ்திரம்** என்னும் இந்நூலை சென்னை முத்தியாலு பேட்டை **V. A. தியாகராஜ செட்டியார்** அவர்களால் எழுதப் பெற்று அடியிற்கண்டுள்ள யான் இந்நூலின் பதிப்புரிமையை பெற்று அச்சிட்டிருக்கின்றேன் ஆதலால் இந்நூலை எனது உத்திரவின்றி இதை யாவது இதின் பெயரை யாவது இதிலுள்ள பாடல்களையாவது இதின் உள்ளடங்கியிருக்கும் பாகங்களைப் பிரித்தாவது அச்சிடுவாரேல் இதனல் யான் கோரும் சகல நஷ்ட ஈடுகளுக்கும் பாத்திரர்களாவார்களென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

**டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்**

நெ-2, எழுத்துக்காரன் தெரு காலடிப்பேட்டை

சென்னை 19.

102324

ஸ்ரீவேல்முருகன் துணை.

# பஞ்சமூர்த்தி ஆரூடமென்னும்

# பலகறை சாஸ்திரம்

## காப்பு துதிவெண்பா

ஐங்கரா அறுமுகா ஆலமுண்டசிவ
சங்கரா கலைவாணி சாமுண்டி-சிங்கமுகா
எல்லோரும் ஒன்ருய் என்கவிக்கு துணைபுரிந்து
நல்லாசி கூறுவீரின் நாள்.

## நூல் விருத்தம்

ஆதியிலே வேல்முருக னிவ்வாரூடத்தை
அறிவித்தான் செவியதனில் பரமனுக்கு
நீதியாய் பரமனெனும் பஞ்சமூர்த்தி
நிதானமாய் இதனுடைய மகுத்துவத்தை
ஓதினர் உலகிலுள்ளோர் நன்மைதீமை
உணர்ந்திடவே கிரகநிலை தனையுணர்ந்து
சாதித்தார் பலகறையின் சாஸ்திரத்தை
சாற்றினேன் தியாகராஜன் போற்றினேனே.

ஆதியில் சிவஷண்முகக்கடவுளாகிய வேல்முருகன், தனது தந்தையாகிய பஞ்சமூர்த்திக்கு இந்த ஆரூடத்தை செவியினிட மாக உபதேசித்தார், பரமன் இதின் மகுத்துவத்தை யுணர்ந்து இதை பலகறையின் எண்ணிக்கைப்படி நியமித்து பலகறை சாஸ் திரமென்று இந்நூலிற்கு பெயரமைத்தார்,

தனது யோகதிசையை அறிந்துக் கொள்ளவோ, அல்லது ஓர் காரியத்தை உத்தேசித்தோ நன்மைத் தீமையை அறிந்துக் கொள்ளவேண்டுமானுல், மிகுந்த பயபக்தியுடன் தனது குலதெய் வத்தை மனதில் நினைத்து ஐந்து பலகறையை எடுத்து எறிந்து அதில்வரும் எண்களைக்குறித்துக் கொள்ளவும், இதுபோல் மும் முறை எறிந்து அந்த மூன்று எண்களையும் ஓர்காகிதத்தில் குறித்

துக்கொண்டு, இப்புத்தகத்தில் அந்தலக்கமுள்ள பாடலை வாசித்து நன்மைத்தீமை அறியவும். ஐந்துப் பலகறையின் எண் 1, 2, 3, 4, 5, 10, அதாவது பத்து என்பது ஐந்து பலகறையும் கவிழ்ந்துக் கொண்டால் 10-எண் ஆகும் என தெரிந்துக்கொள்ளவும்.

## 1—1—1

*மும்முறை ஒன்றே வீழ்ந்தால் மூஷிகனருளினலே*
*அம்புவி தனிலுன்னெண்ணம் ஆதரவுடனே கூடும்*
*வம்புடன் வழக்குவெல்லும் வெளிதேச லாபங்கிட்டும்*
*கும்பிட்டுன் குலதெய்வத்தை கோரிட நன்மையாமே.*

உரை:- உனக்கு 1-1-1 விழுந்ததால் ஐங்கரன் அருளால் உன் எண்ணம் அனுகூலமாகும், குடும்பவழக்குகளும் நியாயஸ்தல வியாஜ்யங்களும் ஜெயமடையும். வெளிதேச லாபமுண்டு ஆனல் உன் குலதெய்வத்தை கும்பிட்டுவர நன்மையடைவாய் இது உத்தமம்.

## 1—1—2

*ஆமப்பா உந்தனுக்கு ஐந்திலே கேதுநின்றுன்*
*க்ஷேமத்தை கெடுக்கவேண சத்ராதி கூட்டமுண்டு*
*காமினியான மங்கை கன்னிகை கலகம் செய்வாள்*
*தாமத மாகயெண்ணம் தட்டாமல் கூடும்பாரே.*

உரை:- 5-ல் கேது நின்றதால் உனக்கு 1-1-2 விழுந்தது உனை கெடுத்து செல்வாக்கை யழிக்க சிலசத்ராதிகள் கூட்டமேற்படும். குடும்பத்திலும் ஓர் கருத்த கன்னிகையால் கலகம் உண்டாகும் மனநோக்கமும்மாறும், கோரிய எண்ணம் தாமதத்தில் தட்டாமல் கூடும் இது மத்திபம்

## 1—1—3

*பாரப்பா ஒன்றுமொன்றும் பதராமல் மூன்றும் வீழ்ந்தால்*
*யாரப்பா உந்தனைப்போல் அதிர்ஷ்டசாலிகள் தான் யாரு*
*போரப்பா விலகும்பெண்டீர் புத்திர கெர்ப்பமாவாள்*
*தேரப்பா உனதுயெண்ணம் தீவிரமாககூடும்.*

உரை:- 1-1-3 விழுந்ததால் நல்ல அதிர்ஷ்டவசமான வாழ்க்கையுண்டாகும் மனையில் பெண் குழந்தைதரிக்கும் உன் ஆயுள் காலத்தில்வரும் கெண்டங்களும் பாதிக்காது சகலதோஷங்களும் விலகும் கோரிய எண்ணமும் கூடும் இது உத்தமம்.

## 1—1—4

*கூடுமென் றெண்ணிவீனில் கைப்பொருளைப் போக்காதே*
*நாடுமுன் எண்ணமெல்லாம் நம்பிக்கை மோசமாகும்*
*பாடுபட்டேநீசேர்த்த பணமது விறையமாகும்*
*மாடுகன்றுடனே சேதம் மக்களும் விலகுவாரே.*

உரை:- 1-1-4 விழுந்ததால் நீநாடிய எண்ணத்திற்கு மோசமாகும் கைப்பொருள் விரையமாகும் நீபாடுபட்டு தேடியபொருளை நம்பிக்கை துரோகம் செய்து அபகரிப்பார்கள் உன்கெட்ட கிரகத்தின் கோளாறினால் வாகனதிகள் சேதமாகும் மனைவிமக்களும் உனைவிட்டு விலகுவார்கள் அதனால் மனசஞ்சலத்தை யளிக்கும் இது மத்திபம்.

## 1—1—5

*விலகினான் ஜென்மசெவ்வாய் ஒன்றுடன் ஒன்றுமைந்தும்*
*கலக்கமில்லாது கூட கருதிய எண்ணம் கூடும்*
*நிலத்துடன் மனையும்வாங்க நீதியாய் வழக்குவெல்லும்*
*துலக்கமாய் பெரியோராலே துணையுண்டு நம்புவாயே.*

உரை:- 1-1-5 விழுந்ததால் உன்மனதில் கோரிய எண்ணம் உறுதியாக முடியும், நிலபலமும் மாடுமனையும்சேரும் நியாஸ்தலத்தில் உனது வழக்குகெலிக்கும் பெரியோர்களால் துணையான லாபங்களுண்டாகும் இதுவரையில் உனைவருத்திய ஜென்மசெவ்வாய் விலகிவிட்டான் இது உத்தமம்.

## 1—1—10

*நம்பினால் மோசம்செய்வார் நாடிய சினேகரப்பா*
*வம்பினில் சிக்கவைப்பார் வகைதப்பி கலங்கச்செய்வார்*
*கொம்பனையாள் தன்னாலே கொடுமைகள் நேரலாகும்*
*அம்புவிதனிலுனக்கு அலைச்சலும் திரிச்சலுண்டாம்.*

உரை:- 1-1-10 விழுந்ததால் சிநேகிதர்களால் நம்பிக்கை துரோகமேற்படும், துஷ்டர்களின் சவகாசத்தினுல் வம்புவழக்கு களிலும் சிக்கநேரிடும், உனது அபிமானதாரத்தினுல் சில அபா யங்களும் நேரக்கூடும் தவிர பாதத்தில் சனியாதலால் அலைச்சல் திரிச்சல் அதிகமாகும் மனதில் நினைத்த எண்ணம் இப்பொழுது முடியாது மத்திபம்.

## 1—2—1

*உண்டுகாண் கெடுதியுண்டு ஒன்றுரெண் டொன்றுமானுல்*
*சண்டைகள் மிகவேநேரும் சஞ்சல மடையலாகும்*
*கெண்டமும் நோயும்காட்டும் கெடுசெய்தி காதில்வீழும்*
*தண்டமும் பொருளும்சேதம் தவரிடும் எண்ணந்தானே.*

உரை:- 1-2-1 விழ பலவித கெடுதலுண்டு குடும்பசஞ் சலம் சண்டை பலவிதமான தண்டச்சிலவுகள் ஏற்படும் நாளுக் கொரு நோய்காட்டி நலிவினுல் வருந்தச்செய்யும் கெடுதலான செய்திகளை கேட்டு கலக்கமுறுவாய் எண்ணங்களுக்கு இடைஞ்ச லேற்படும் இது மத்திபம்.

## 1—2—2

*தானென நல்லயோகம் தழைத்திட எண்ணங்கூடும்*
*கோனென உனைகொண்டாட குடும்பமும்செழித்துஓங்கும்*
*வானென மழையும்பெய்யும் வழக்கு உன்பக்கமாகும்*
*மானெனும் மாதினுக்கு பாலனும் பிறப்பானன்ருே.*

உரை:- 1-2-2 விழவும் உன் எண்ணம் இடஞ்சலின்றிகூடும் நல்லவனென நானிலம்புகழும் சீரும் சிறம்பெருக குடும்பம் தழைக் கும் மழைபொழிந்து மானிலம்செழிக்கும் வழக்குகெலிக்கும் மனை யில் ஆண்குழந்தை தரிக்கும் அதனுல் க்ஷேமமேற்படும் இது உத்தமம்.

## 1—2—3

*அன்றுநீ செய்தபாவம் ஆறிலே குருவமர்ந்தார்*
*நன்றிநீ செய்தபோதும் நிந்தனை வசைச்சொல்லாகும்*
*கொன்றிட சதியும்செய்வார் குலக்கேடு நேரலாகும்*
*இன்றுமுதல் நவக்கிரகத்தை இதமுடன் பூஜைசெய்யே.*

உரை:– 1–2–3 விழ உனக்கு ஆருவதுவீட்டில் குருஅமர்ந்த தால் அலேச்சல் திரிச்சல் மேலிடுமேயன்றி உனது எண்ணங்கள் அபலமாக முடியும் ஒருவருக்கு நன்மையைச் செய்யினும் துன்மையும் வசைபேச்சுகளும் வம்புவழக்குகளும் உயிருக்கே ஆபத்தான அவகேடுகளேயும் விளேவிப்பார்கள் நீகெடுதலானபெயருமெடுக்க நேரிடும் இருந்தாலும் இன்றுமுதல் நவக்கிரகத்தை பூஜைசெய்வாய் மத்திபம்.

## 1—2—4

*செய்யவே ஒன்றும்ரெண்டும் சீருடன் நான்குமாகில்*
*வையகம் தனிலுனக்கு வந்திடும் ராஜயோகம்*
*ஐயுரவேண்டாமப்பா ஆன்ருேர்கள் பொருளும்சேரும்*
*கைவிட்டு போனஜீவன் கடுகியே கிட்டும்காணே.*

உரை:– 1–2–4 விழுந்ததால் அரசனேப்போல் அம்சம் பொருந்திய வாழ்க்கையுண்டாம் மூதோர்களின் பொருள்சேரும் கைவிட்டுப்போன தொழிலோ, பொருளோ, ஜீவனே இன்னும் மூன்றுநாள் 3-மணிநேரத்தில் கிடைக்கும் கூட்டுவியாபாரம் செய்ய தாட்டிகமான லாபகரத்தை யளிக்கும் மனதில் கோரிய எண்ணமும் கூடும் இது உத்தமம்.

## 1—2—5

*காணப்பா கிரகமெல்லாம் கொடூரமாய் நிற்பதாலே*
*வேணவே துயரமுண்டு ஊரைவிட் டோட்டிவைக்கும்*
*ஊனமாய் பீடைகாட்டும் உனேயின்ருேர்களும் வெறுப்பார்*
*தோணவே உனதுஎண்ணம் தொல்லேயே வந்துநேரும்,*

உரை:– 1–2–5 விழுந்ததாலும் உன்கிரகங்கள் கொடூரமாக இருப்பதாலும் பலவித இன்னல்களேத்தரும், மனக்கவலேயை யளிக்கும் இடம்விட்டு மாற்றியும்வைக்கும் பலவிதமான நோயும் காட்டும் பந்துக்களுக்கும் பகையைமூட்டும் மனதில்நீ திடமாக கொண்டுள்ள எண்ணம் தடங்கலாகும் இது மத்திபம்.

## 1—2—10

*சேருமே சீரும்செல்வம் செய்தொழில் விருத்தியாகும்*
*யாருமே உன்னேக்கண்டால் அன்புகொண் டுபசரிப்பார்*

ஏருடன் மாடுவாங்க எழிலுடன் பயிர்செழிக்கும்
கோருமுன் எண்ணம்கூடும் குலதெய்வம் துணையிருக்கும்

உரை:– 1–2–10 விழுந்ததால் செல்வச்சிறப்புடன் குடும்பம் செழிக்கும் உனைக்கண்டவர்யாரும் அச்சப்படுவார்கள் சபையோர் மெச்சும் ஓர்சாமர்த்திய பேச்சாளனாக நியமிக்கப்படுவாய் வாகனாதிகள் சேரும் பயிர்செழித்து வளமையுண்டாகும் உன்மனையில் மடிந்த குலதெய்வங்கள் உனக்குத்துணையாக இருக்கும் எண்ணமும் கூடும் உத்தமம்.

## 1—3—1

இருக்கவே உனக்குசேரும் எழில்மனை மாடுகன்றும்
உருக்கமாய் கூடிச்செய்யும் வியாபாரம் வலுத்தமாகும்
பெருக்கவே கல்வியோங்கும்பெரியோர்கள்பொருள்கிடைக்கும்
சுருக்கினில்நினைத்தஎண்ணம்ஜெயமாகும்நோயும்போமே

உரை:– 1–3–1 விழுந்தபோது உனது எண்ணம் ஏதுவாயினும் இடைஞ்சலின்றி கூடும் மாடுமனைவாங்க பால்பாக்கிய முண்டாகும் கூட்டுவியாபாரம் செய்ய ஒற்றுமையுடன் நீடித்து ஓங்கும் சிறுவர்களுக்கு ஞானம் கல்வி அதிகரிக்கும் பிற்காலத்தில் பெரியோர்களின் பொருள்சேரும் நோயும் கெண்டமும் நீங்கும் இது உத்தமம்.

## 1—3—2

போமப்பாபொருளும்போகும் பொல்லாதோர்சினேகத்தாலே
நாமப்பாஒன்றுமூன்றும் நலமில்லை இரண்டும் வீழ்ந்தால்
ஆமப்பா அலைச்சலுண்டாம் அபாயங்கள் மிகவுமுண்டாம்
தாமப்பா தரித்திரத்தால் தவரிடும் எண்ணந்தானே

உரை:– 1–3–2 விழ சில வீணர்களின் சினேகத்தால் பல விதத்தில் விறையமுண்டு அலைச்சல் திரிச்சல் அகாலபோஜனம் அரசர்பகை அபாயகரமான ஆபத்துகளும் ஆன்றோர்களின் பொருள் அழிவும் அண்டியிருக்கும் இடத்திலும் அதிக நிந்தையான வசைச்சொற்களும் இடம்விட்டு இடம்மாறுதலும் காரியத்தில் அபஜெயமாகுமாம் இது மத்திபம்.

## 1—3—3

எண்ணமும் கூடுமப்பா எடுத்ததோர் தொழிலில்லாபம்
மண்ணதைஎடுத்தபோதும்பொன்னெனமதிப்புண்டாகும்
ஓர்-பெண்ணினு லுனக்குவேண பொருளது வந்துசேரும்
பண்ணுளாய் பட்டகஷ்டம் பறந்திடும் தயங்கிடாதே

உரை:– 1–3–3 உதயமாகியதால் சுமார் 5-வருடங்களாக நீயடைந்த கவலைகள் இந்த வாரத்துடன் நீங்கிப்போகிறது அதன் பிறகு ஓர் பெண்மணியால் பொருள்வரும் பொன்பூஷணச் சிறப்புண்டாகும் குடும்பம் சிறப்புற்றேங்கும் உன்மனதில் எண்ணிய எண்ணமும் இன்றுபொழுதிற்குள் தடையின்றி ஜெயமாகும் இது உத்தமம்.

## 1—3—4

தயங்கியே நீயும்வாட சனிராகு பகையுமானுர்
பயங்கர நோயுண்டாகும் வழிபறிகொள்ளைநேரும்
நயம்பேசி துரோகம் செய்வார் நம்பிய வழக்குதோர்க்கும்
செயலானதொழிலும்நஷ்டம் ஜெயமாகாதுன துநோக்கம்

உரை:– 1–3–4 விழ உனக்குசனிராகு பகையுண்டு அதனுல் உன் எண்ணத்திற்கு இடைஞ்சலுண்டு நோய்காட்டும் வழிபறி கொள்ளை ஏற்படும் நம்பிய பந்துக்களும் சிநேகிதர்களும் நய வஞ்சகம் செய்வார்கள் வழக்குதோர்க்கும் தொழிலில் மேலுக்கு மேல் நஷ்டத்தையே யுண்டாக்கும் இது மத்திபம்.

## 1—3—5

நோக்கமாய் செய்யும்வேலை நீடித்து நிலைத்துஓங்கும்
வாக்கினுல் கேட்டதெல்லாம் வலுத்தமாய் கிட்டலாகும்
போக்காக போனபேர்கள் புகழுடன் திரும்புவார்கள்
பாக்கியம் பெற்றுவாழ்வாய் பரம்பொருள்கிருபையாலே

உரை:– 1–3–5 விழவும் மனநோக்கத்திற்கு மாறுதலுண்டாகாது எத்தொழிலாயினும் எக்காலத்திலும் நீடித்து ஓங்கும் யாரை எப்பொருள் கேட்கினும் அப்பொருள் அட்டியின்றி கிடைக்கும்

மனக்கவலையுடன் குடும்பத்தைவெறுத்து சென்றவராயினும் ஒரு திங்களுக்குள் வந்து சேர்வார்கள் உனக்கு பாக்கியத்தில் சிறந்த யோக்கியதாம்சம் உண்டாகும் இது உத்தமம்.

## 1—3—10

*கிருபையும் உனக்குயில்லை கிரகங்கள் நல்லதில்லை*
*வருமையால் குடும்பமின்று வாடுதுக்ஷேமமில்லை*
*தருணமே வாய்த்தநோய்தான் திரவும்வழியுமில்லை*
*சிறுமைகள் விலகவென்றால் செய்வாயே தெய்வபூஜை*

உரை:- 1–3–10 உதயமானதால் நல்லகிரகங்களெல்லாம் நீச்சம்பெற்றிருப்பதால். உனக்கு தெய்வசகாயமில்லை வருமையினால் உன்குடும்பம் வாடுகின்றது நோயின்கவலையும் ஒருபுரம் வருத்துகின்றது அல்லாமலும் மனதிலும் பலவிதமான கவலைகளும் பாதிக்கின்றது இவ்வளவு கொடுமையில் எண்ணம் எப்படிமுடியும் மத்திபம்

## 1—4—1

*தெய்வத்தை நிந்திக்காதே தீதாச்சு கிரகமெல்லாம்*
*வையகத்திலுன் வாழ்க்கை வகைதப்பி கலங்கிநிற்கும்*
*ஐயுற நினைத்தவேலை அபஜெயமாகப்போகும்*
*கையுள காசும்நஷ்டம் கடுஞ்செயலாகும்தானே*

உரை:- 1–4–1 விழவும் உனது கெட்டகாலத்தினால் குடும்பத்தில் சதா மனக்கவலையே அதிகரிக்கும் முன்பின் கவனியாமல் பலவிதமான செய்கைகளில் லீடுபட்டு பொருள்விறையமாகும் நினைத்த எண்ணமும் முடியாது இது உன் கிரகசேஷ்டையாதலால் வினில் தெய்வத்தை நிந்திக்காதே இது மத்திபம்.

## 1—4—2

*செயலாக ஒன்றும் நான்கும் சீருடன் ரெண்டும் வீழ்ந்தால்*
*மயிலாளுன் மனைவியாலே மாடாடு மனைகிடைக்கும்*
*அயலார்களுதவியாலே அரசன்போல் வாழலாகும்*
*துயராலே வருந்தவேண்டாம் துலைந்ததுன் கஷ்டமாமே*

உரை:– 1–4–2 உதயமாகியதால் மனதில் நினைத்த எண்ணம் மகிழ்வுடன்கூடும் கொண்டபெண்ணினால் மாடுமனை கிடைக்கும் குடும்பமும் செழிக்கும் அடுத்தபேர்களின் உதவியால் எதிரின்றி வாழ்வாய் உன்கெட்டகிரகங்கள் விலகி 2-வாரமாகின்றது இன்னும் 5-நாளில் உனது கவலைகள் நீங்கும் இது உத்தமம்.

## 1—4—3

*கஷ்டத்தின் மிகுதியாலே கலக்கமுற் றேங்குகின்றாய்*
*துஷ்டர்கள் சகவாசத்தால் தொந்தரை நேரக்கூடும்*
*உஷ்ணத்தின் சேர்க்கையான வியாதிகள் சேர்க்கையாகும்*
*இஷ்டத்தில் நஷ்டமாகும் இடர்பல காட்டும்பாரே*

உரை:– 1–4–3 விழுந்ததால் துஷ்டர்களின் சவகாசங்களுண்டாகும் அதனால் இடர்பல ஏற்படும் கலக்கமிகுதியால் கலங்கலாகும் உஷ்ண சம்பந்தமான வியாதிகளால் பாதிக்கப்படுவாய். இஷ்டங்கொண்டு பலநாட்களாக செய்யும் கூட்டுவியாபாரம் பிரிவினையாகும் அதனால் நஷ்டமும் கஷ்டமும் உண்டாம் எண்ணமும் முடியாது மத்திபம்.

## 1—4—4

*காட்டுமே லாபமப்பா கங்கண ப்ராப்தம்கூடும்*
*வாட்டிடும் வருமைபோகும் வஞ்சகருறவு நீங்கும்*
*சேட்டைக ளெதுவானாலும் தெய்வத்தினருளால்மாறும்*
*நாட்டமாய் நினைத்தஎண்ணம் நாளேழில் ஜெயமதாமே*

உரை:– 1–4–4 விழவும் உனக்கு நற்கால மேற்பட்டது இனி உன் வருமைகள் நீங்கும் சத்ராதிகள் கூட்டம் விலகும் மனையில் விவாகம் ஒன்று நடக்கும் பேய்பிசாசு பில்லிசூனியமாயினும் தெய்வ பிரார்த்தனையினால் போகும் மனதில் கோரியிருக்கும் எண்ணம் தடையின்றி கூடும் இது உத்தமம்.

## 1—4—5

*ஜெயமாகு மென்றயெண்ணம் பயமாகமுடியலாச்சு*
*துயரான செய்தியாலே தியங்கியே கலங்கலாச்சு*
*நயமாக பேசுவோரை நம்பினால் மோசமாச்சு*
*பயலான புத்ரனாலே பலவித சேதமாமே.*

உரை:– 1-4-5 உதயமானதால் மனதில் நினைத்த எண்ணம் கவலையில்வந்து முடியும் நயமாகபேசுபவர்களின் சினேகத்தினுல் நம்பிக்கை துரோகம் நேரும் கெடுதலான செய்தியின் கேள்வியால் கலங்கிடலாகும் உன்புத்திரன் ஒருவனுல் மனையில் பலவிதமான சேதமேற்படும் இது மத்திபம்.

## 1—4—10

*சேதமே யில்லைகாண்பாய் சீரொன்று நான்குபத்தும்*
*நீதமாய் விழுந்ததாலே நீடிக்கும் தொழில்தானப்பா*
*மாதமும் மூன்றுக்குள்ளே மனையாளும் கெர்ப்பமாவாள்*
*கோதையர் கலகமுண்டு குணமுடன் நீக்குவாயே*

உரை:– 1-4-10 விழுந்ததால் வியாபாரத்திலும் கொடுக்கல் வாங்கலிலும் ஒருசேதமு மில்லை தொழில் நீடித்திருக்கும் இன்னும் மூன்று மாதத்திற்குள் மனையாள் கர்ப்பமாவாள் கர்ப்பமேற்பட்டமாதம் ஒற்றைப்படையானுல் ஆணும் இரட்டைப்படையானுல் பெண்ணுமாபிறக்கும் ஆனுல் உன் குடும்பத்தில் சேர்ந்த ஒரு சிவந்தபெண்ணினுல் கலகமுண்டு அதை பொருட் படுத்தாதே எண்ணம் கூடும் உத்தமம்

## 1—5—1

*நீக்குவாய் கவலையெல்லாம் நின்றது ஒன்றைந்தொன்றும்*
*பாக்கியம் பெற்றுவாழ்வாய் பலதொழில் லாபத்தாலே*
*நோக்கிய நோயும்நீங்கும் நெடுந்தூரம் சென்றோர்மீள்வார்*
*வாக்கியம் பொய்யாகாது வடிவேலன் துணையிருப்பார்.*

உரை:– 1-5-1 உதயமாகில் இனி ஒன்றுக்கும் கவலை வையாதே மேன்மையான தொழிலும் மிகுந்தலாபகரமுமேற்படும் நோயும் கெண்டமும் நீங்கும் திசைமாறிய பேர்களும் வந்துசேர்வார்கள் இதுபஞ்சமூர்த்தியாகிய பரமேஸ்வரனின் வாக்கானதால் பஞ்சமில்லாமல் சஞ்சலமகற்றி வாழ்வாய் எண்ணம் கூடும் உத்தமம்.

## 1—5—2

*துணையது யாருமில்லை தெய்வத்தின் சகாயமில்லை*
*வினையதின் பயனுல்நீயும் வெகுதுன்ப மடையலானுய்*

*மனைமாடு கன்றும் நஷ்டம் மக்களும் பெண்டீர் மற்றும்*
*துணைவரும் உனைவெருப்பார் தோஷமும் சிலநாளுண்டு*

உரை:- 1–5–2 விழுந்திட இதுவரையில் வினைப்பயனால் வெருதுன்பமடைந்தாய் உனக்கு பந்துக்களின் துணையுமில்லை தெய்வத்தின் கருணையுமில்லை சிலநாட்களாக பலவிதத்திலும் பொன்பொருள் மாடுகன்று முதலியன நஷ்டமேற்பட்டிருக்கலாம் பந்துக்களுக்கும் உனைக்கண்டால் விஷம்போல் தெரியும் கிரகக் கோளாறினால் எண்ணமும் முடியாது மத்திபம்

## 1—5—3

*சிலநாளாய் வருத்தும்நோயும் சிறுமையு மொழிந்துபோகும்*
*பலவாராய் நினைத்ததெல்லாம் பலித்திடும் பயப்படாதே*
*நலமான காரியம்தான் நடந்திடும் சிலநாள்போனால்*
*நலமீது தவரிபோன தனமது கிட்டும்பாரே*

உரை:- 1–5–3 உதயமாகியது அதனால் நினைத்த எண்ணம் பலிக்கும் காணாமற்போன பிள்ளைகளாயினும் ஜீவனாயினும் இருக்கும் இடம் தெரியும் குடும்பத்தில் கலியாணமாகும் சிலநாளில் உன்சிறுமைகளெல்லாம் ஒழிந்து பெருமையடைவாய் உத்தமம்

## 1—5—4

*கிட்டுமென் றெண்ணிநீதான் கினவது காணவேண்டாம்*
*திட்டமாய் ஒன்றுமைந்தும் நான்கது விழுந்ததாலே*
*சட்டென மறையும்ஜீவன் சாதித்த பொருளும்நஷ்டம்*
*பொட்டென கோபம்மீறும் புத்தியை நிலைகொள்ளாயே*

உரை:- 1–5–4 விழுந்ததால் நீ எண்ணிய காரியம் பகற்கினவாக முடியும் வைத்தபொருளும் ஜீவனும் மாயமாய் மறையும் கோபத்தினால் குடும்பத்தில் பலவித கொடுமைகள் நேரக்கூடும் புத்தியை நிலையாகக்கொண்டு உன்காலத்தைக் கழித்து வந்தால் கவலைகள் எதுவாயினும் சற்றுவிலகலாகும் மத்திபம்.

## 1—5—5

*நிலையில்லா வெண்ணமெல்லாம் நிலைபடும் நிந்தைநீங்கும்*
*சிலபேர்க ளுதவியாலே சிக்கணமாக வாழ்வாய்*

*கலக்க மில்லாமல்நீயும் கருதிய பெண்ணேகிட்டும்*
*தொலைந்ததோர்பொருளும்தோகைதன்னுலேவெளியதாமே*

உரை:– 1–5–5 விழுந்ததால் இதுவரை வருமையால் வந்த உன்கெட்டபெயர் நீங்கும் சிக்கணமாக வாழ்வாய்நீ குரித்துள்ள பெண்ணே உனக்கு கிடைக்கும் அதனுல் வெகுசம்பத்தை யடைவாய் களவுபோனபொருள் ஓர் கன்னிகையினுல் வெளியாகும் கருத்தில் நினைத்த எண்ணமும் முடியும் இது உத்தமம்.

## 1—5—10

*வெளிதாண்டி போனபேரை வீணிலே தேடவேண்டாம்*
*களிப்புட னிருந்தபோதும் கவலைதானதிகரிக்கும்*
*பளிச்சென கபடம்பேசி பறிப்பாருன் பொருளதனை*
*சலிக்கவே உனைவருத்தும் சண்டாள நோய்தானே*

உரை:– 1–5–10 விழ கலங்காத மனதாயினும் சற்று கலக்க முறவே செய்யும், வெளிதாண்டிய பொருளாயினும், ஜீவனுயினும் தேடினுல் பயன்படாது, நயமாகபேசி பொருள்பரித்து உன்னை நாசம் செய்வார்கள் வாய்த்தநோயானது மனம் சலிக்கச் செய்யும் மனதில் கோரிய கொள்கையானது நேர்மாறாகவே முடியும் அபஜெயமுண்டாகும் மத்திபம்

## 1—10—1

*நோயது உன்னைவிட்டு நீங்கிட வெகுநாளாகும்*
*காயமே யழித்திடாது கவலைகள் சிலதுதோணும்*
*சேயர்களாலே உந்தன் செல்வமும் அழியலாகும்*
*உபாயமாய் நடந்திட்டாலே ஒன்றுமே அணுகிடாது*

உரை:– 1–10–1 உதயமானதால் உன்மனதிலே கவலைகளை வைத்திருக்கின்ருய் அந்த கவலைகள் மூன்றுமாதம் வரையில்தீராது உனைவேதனைக்குட்படுத்தும் நோய்நீங்க சிலநாள் போகவேணும், ஆனுல் ஆயுளை அற்பமெனச் சொல்லமுடியாது குடும்பத்திலும் சற்று கவலையாகவே இருக்கும், மைந்தர்கள் பொருள் விரையப்படும் ஆனுல் கிரகங்கள் பொல்லாததாக இருந்தாலும் உபாயமாக நடந்துக்கொள் இது மத்திபம்.

## 1—10—2

*அனுகிய துன்பமெல்லாம் அனல்கண்ட குளிர்போல் நீங்கும்*
*உனதெண்ணம் பலிதமாகும் உடந்தையாய் தாரஞ்சேரும்*
*மனோகோல லாபமுண்டு மூதோர்கள் பொருள்கிடைக்கும்*
*தினந்தினம் ஏழைகட்கு செய்திடாய் தருமமன்றோ*

உரை:– 1–10–2 விழவும் உன் வருமையும் துன்பமும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும் சொந்தத்தில் அபிமான தாரம் சேரும் மனோகோல லாபமும் மூதோர்கள் பொருள்சேரும் மனதில் கோரிய எண்ணமும் இடைஞ்சலில்லாமல் ஜெயமாகும் ஆனால் வாரத்திற்கொருநாள் சோமவாரந்தோறும் ஏழைகட்கு தருமஞ்செய் இது உத்தமம்.

## 1—10—3

*தர்மமே செய்தபோதும் அதர்மமாய் நேருமப்பா*
*மர்மமாய் யுவனோர்மங்கை மயக்கியேபொருள்பரிப்பாள்*
*சர்வமும் விறையமாகும் சாதித்த எண்ணம்நஷ்டம்*
*கர்விகள் கூட்டத்தாலே கவலையும் நேரலாமே*

உரை:– 1–10–3 விழ நீ எவ்வளவுதான் நன்மையைச் செய்யினும் துன்மையே விளையும் திடீரென ஓர் மங்கையின் உறவால் வேண பொருள் நஷ்டப்படுவாய், கெட்ட கிரகத்தின் கோளாறினால் சகலமான வஸ்துக்களும் தொழிலிலும் கொடுக்கல் வாங்கலிலும் நஷ்டம் சிலபேர்களின் கலகத்தினால் சஞ்சலமும் நேரக்கூடும் எண்ணிய எண்ணத்திற்கும் இடைஞ்சலுண்டாகும் இது மத்திபம்.

## 1—10—4

நேரவே ஒன்றும் பத்தும் நான்கது விழுந்ததாலே
சோரமே போனஜீவன் சிறுவனால் வெளியதாகும்
தேரவே நோயும்நீங்கும் தென்மேற்கு திசையில்லாபம்
கோரவே குலதெய்வத்தை குடும்பமே செழிக்குமப்பா

உரை:– 1–10–4 விழ களவுபோன பொருளாயினும் ஜீவனாயினும் ஒருசிறுவனால் புலன்கிடைக்கும், தென்மேற்கு திசையில் இன்னும் ஒருவாரத்திற்குள் லாபம் கிடைக்கும் வெகு நாட்களாக

உனை வருத்தியநோய் மருந்தினுல் நீங்கும் இருந்தாலும் உன் குல தெய்வங்களை பூஜைசெய்துவர குடும்பம் க்ஷேமமாக இருக்கும் இப்பொழுது கோரியிருக்கும் எண்ணமும் முடியும் இது உத்தமம்

## 1—10—5

*அப்பனே வருடமொன்ருய் அளவிளா கஷ்டமுண்டு*
*ஒப்பவே நினைத்தயெண்ணம் உந்தனை கெடுக்குமப்பா*
*தப்பிதம் மிகவேநேரும் தகத்தான பெயர்கெடுக்கும்*
*செப்பவே நவக்கிரகத்தை சீர்பெற துதித்திடாயே.*

உரை:— 1–10–5 விழுந்ததால் உனக்கு குடும்ப கஷ்டமுண்டு எதைச்செய்தாலும் கெடுதலாக முடியும், பலவித குற்றங்களால் உன்பெயர்கெடும், எண்ணத்திற்கு இடைஞ்சலேற்படும் ஆனுல் 27-நாளைக்கு நவக்கிரகத்தை நம்பிக்கையுடன் கும்பிட்டுவர நாளுக்குநாள் நன்மையுண்டு மத்திமம்

## 1—10—10

*துதித்திடும் தெய்வத்தன்மை துணையுனக் கிருப்பதாலே*
*மதித்திட மன்னவன்போல் மாபொருள் மணையும்சேரும்*
*உதித்ததோர் மைந்தராலே உதவியும் தொழிலுமோங்கும்*
*சதியுள நோயும்நீங்கும் சாதித்தல் பலிதமாமே.*

உரை:— 1–10–10 உதயமானதால் உனக்கு தெய்வத்தன்மை யுண்டு அதனுல் சிலநாளில் மாடுமனை பொன்பொருள் வந்துசேரும் அதனுல் சீமான்போல் வாழ்வாய், புத்திரர்களால் உதவியும் தொழில்விர்த்தியும் நோய்நீங்களும் கவலைகளும்விலகும் சாதித்த எண்ணமும் தடையின்றி முடியும் இது உத்தமம்.

## 2—1—1

*பலிக்காது உனதுயெண்ணம் பகையுண்டு கேதுசெவ்வாய்*
*துளிர்க்காது குடும்பமப்பா தொல்லைக ளதிகமாக்கும்*
*கலக்காது செய்யும்வேலை சதியினுல் நஷ்டமாகும்*
*நலிகாட்டி துயரமூட்டும் நம்பிக்கை துரோகமாமே.*

உரை:— 2–1–1 விழ உனது எண்ணம் அபலமாகும் உன் குடும்பம் ஓங்காது தொல்லைகளதிகரிக்கும் தொழிலில் நஷ்டம்

குடும்ப கஷ்டம் நோயினல் அதிக துயரத்தையுண்டாக்கும் சில பேர்களால் நம்பிக்கை துரோகமேற்படும் தவிர கேது செவ்வாய் உனக்கு பகையாக இருப்பதால் கொஞ்சம் ஜாக்கிரதையுடனே இருக்கவும் இது மத்திபம்.

## 2—1—2

*துரோகமே யார்செய்தாலும் தொந்தரை ஏற்படாது*
*விரோதமே விலகிப்போகும் வியாபாரம் வலுத்தமாகும்*
*பரோபகாரம் செழிக்கும் பாக்கிய சாலியாவாய்*
*குரோதமே வைத்தபேர்கள் குடும்பத்தோ டழிகுவாரே*

உரை:– 2–1–2 விழவும் யாரும் உன்னை துரோகமோ கெடுதலோ செய்யமுடியாது பலவிதமான விரோதங்களும் விலகும் வியாபாரவிர்த்தியும் பரோபகாரத்தன்மையும், பாக்கியம் பொருந்திய சிலாக்கியமான வாழ்க்கையும் உண்டாதும் உனைகெடுக்க மோசக்கருத்து கொண்டபேர்கள் நாசமாவார்கள் எண்ணம் முடியும் இது உத்தமம்.

## 2—1—3

*அழிவுண்டு பொருளுனக்கு அபலமாய் போகுமெண்ணம்*
*பழிப்புள பெயருண்டாகும் பதிவிட்டுபேரநேரும்*
*வழிபறி கொள்ளையாகும் வல்லமைக் கல்லலுண்டாம்*
*கழித்திடாய் மாதம்மூன்று கவலையும் தீர்ந்துபோமே*

உரை:– 2–1–3 உதயமாகவும் வீண்சிலவும் விகர்ப்பமான கலகமும் எண்ணத்திற்கு பின்னமும் இடம்விட்டு மாறலும் கெடுதலான பெயரும் வழிபறிக்கொள்ளையும் கவலை கஷ்டம் நஷ்டம் பலவும் உண்டாகும், உனது திடமான நெஞ்சமும் கலங்கும் இருப்பினும் 3-மாதம்போக உன்கஷ்டங்கள் விலகும் மத்திபம்.

## 2—1—4

*தீர்ந்திடும் வழக்குன்பக்கம் ஜெயமது உனதேயாகும்*
*சேர்ந்திடும் அதிகலாபம் சீர்மனை கோலலாகும்*
*பேர்ந்திடும் கஷ்டமப்பா பிணிநீங்கும் கடனும்தீரும்*
*சார்ந்திடும் குலதெய்வத்தை தியானித்தால் நன்மையாமே*

**உரை:-** 2-1-4 விழவும் இனிவுனக்கு அனுகூலமானயோக முண்டு, வழக்கு உன்பக்கம் கெலிக்கும் கூட்டு வியாபாரத்தில் நல்லலாபமுண்டு மனோகோல மகிழ்வுபெரும் நோய்நீங்கும் குடும்ப கஷ்டம் தீரும் இருப்பினும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வீட்டில் மடிந்த குலதெய்வத்தை பூஜித்துவர நன்மையுண்டு உத்தமம்

## 2-1-5

*நன்மையே நினைத்தபோதும் துன்மையே நேருமப்பா*
*அன்பிலார் உறவைவைத்து அலைகிறாய் சிலதுநாளாய்*
*துன்பத்திற் காளாய்செய்வார் தொழிலது நிந்தையாகும்*
*இன்னலு மகலுதற்கு ஈரைந்து வாரம்செல்லும்*

உரை:- 2-1-5 உதயமாகியதால் யாருக்கு நன்மையைச் செய்யினும் துன்மையே உண்டாகும் இன்னும் பத்துவாரம் வரையில் உனக்கு கெட்டகிரக மிருக்கின்றது சில நாட்களாக சில துஷ்டர்களின் சவகாசத்தினால் துன்பமுறுகின்றாய் அவர்களை நம்பினால் வீண் கவலைகளுண்டாகும் தொழிலில் நிந்தை ஏற்படும் எண்ணிய எண்ணத்திற்கும் இடைஞ்சலுண்டாகும் மத்திபம்.

## 2-1-10

*வாரத்தில் உந்தனுக்கு வந்திடும் நல்லயோகம்*
*தீரமே அதிகமாகும் திக்கெட்டும் விஜயம்செய்வாய்*
*கோரமாய் வாட்டும்நோயும் குலதெய்வத் தருளால்நீங்கும்*
*பேரவே இடத்தைவிட்டு பலவித லாபமுண்டாம்*

உரை:- 2-1-10 விழ மனதில் கோரிய எண்ணம் கூடும் உன் நல்லயோகத்தின் அதிர்ஷ்ட வசத்தினால் திக்விஜயம் செய்வாய் நோய்நீங்கும், குலதெய்வம் சகாயமிருக்கும் ஆனால் நீ இருக்கும் இடைத்தைவிட்டு தெற்கு திசைமாறினால் நல்ல க்ஷேமத்தை யடைவாய் இன்னும் ஒருவாரத்தில் உனக்கு நல்லயோக முண்டாகும் இது உத்தமம்.

## 2-2-1

*பலவித யெண்ணம்வேண்டாம் பலித்திடும் வடக்கேலாபம்*
*குலமது செழிக்கபுத்ரர் குடும்பத்தில் பெற்றுவாழ்வாய்*

*நலம்பெற நான்கில்சுக்ரன் நாடினன் கவலைநீக்க*
*கலகலவெனவே மேற்கே கெவுளியும் கூறும்பாரே*

உரை:– 2–2–1 விழவும் மனநோக்கம் மறுப்பில்லாமல் முடியும், வடக்கு திசையில் லாபமுண்டாம் மனையில் ஆண் குழந்தைகள் பிறக்கும், உனக்கு சுக்கிரன் நான்காவது வீட்டிலிருப்பதால் கவலைநீங்கும் குடும்பத்தில் உள்ள சண்டை சச்சரவு நீங்கும் பல வழியிலும் நல்லலாபம் கிடைக்கும் இதற்கு அடையாளம் மேற்கு திசையில் கெவுளியானது சொல்லும் உத்தமம்.

## 2–2–2

*கூறுவார் கோளதனை குடிகேடர் சிலபேரப்பா*
*சீறுவார்மனை விமக்கள்சினங்கொள்வாருன்னைக்கண்டால்*
*மீறுமே நோய்தானுன்னை மனமது கலங்கச்செய்யும்*
*தேறுவா யின்னுமைந்து திங்களும் கழியபின்னே*

உரை:– 2–2–2 உதயமானதால் சில குரும்பர்களால் உன் குடும்பத்தில் கோள்வார்த்தை ஏற்படும் அதனால் மனைவி மக்களும் உன்னை வெறுப்பார்கள் நோயானது நாளுக்குநாள் அதிகமாக வாட்டும் அதனால் மனது கலங்கும் ஆனால் 5-மாதம் கழிய சுகமேற்படும் இது மத்திபம்.

## 2–2–3

*பின்னங்க ளணுகிடாது பயிரோங்கும் நிலஞ்செழிக்கும்*
*உன்னத பொருளுஞ்சேரும் உடன்பிறந்தோரால் நன்மை*
*தன்னலஞ் செழிக்கவாழ்வாய் தாரமே ஒன்றுகூடும்*
*இன்னலு மணுகிடாது ஈராண்டு குறைவேயில்லை*

உரை:– 2–2–3 விழவும் குடும்பத்திலே ஒருவிதமான குறைகளு மேற்படாது நிலஞ்செழித்து பயிரோங்கும் பொன்பொருள் சேரும் சகோதரர்களால் உதவியுண்டு சுகஜீவியமான வாழ்க்கை ஏற்படும் சிலநாளில் ஓர் அபிமானதாரமும் சேர்க்கையாகும் இரண்டு வருஷத்திற்கு நல்ல அதிர்ஷ்ட வசமாக வாழ்வாய் இது உத்தமம்.

## 2—2—4

*குறையினுல் குடும்பந்தன்னை குணங்கெட்டு வெருத்திடாதே*
*மறைமுகமாய் சிலபேர் மர்மமாய் கபடம்செய்வார்*
*நிறைவுள்ள வியாபாரத்தில் நஷ்டத்தி வீடுகாட்டும்*
*இறைவனை நம்பிவாழ்வாய் ஏதொன்றும் வந்திடாதே*

உரை:— 2–2–4 விழுந்ததால் உன்கிரகங்கள் கெட்டதாக இருக்கின்றது ஆனதால் நீ குடும்பத்தை வெறுத்து வெளிதேசம் போகவும் நேரிடும் சிலபேர்கள் உனக்கு மறைமுகமாக இருந்து குடும்பத்தில் கலசம் செய்வார்கள் தொழில் நஷ்டம் மனக்கஷ்டம் கவலை அதிகரிக்கும் உன்வாக்கு பிறருக்கு விஷம்போல் தோன் றும் ஆனுல் ஆண்டவனை நம்பி நாளைக்கழித்துவர நாளுக்குநாள் நன்மையுண்டாகும் இது மத்திபம்.

## 2—2—5

*வந்ததோர் ரெண்டும்ரெண்டும் வலுத்திடும் ஐந்தினுலே*
*சந்ததி உற்பவிக்கும் சந்தோஷ செய்திதோன்றும்*
*சொந்தமாய் மனைகிடைக்கும் சொகுசுள்ள நகைகள்சேரும்*
*விந்தையாய் பயிர்செழிக்கும் உலகில்நீ தழைக்கத்தானே*

உரை:— 2–2–5 உதயமாகியதால் மனையாளுக்கு கற்பமுற் பவிக்கும் மேற்கு திக்கிலிருந்து மேன்மையான சந்தோஷச்செய்தி கேள்விப்படுவாய் இன்னும் ஒரு வருஷத்தில் சொந்தமான வீடு ஒன்றுகிடைக்கும் அற்புதமான பொன்பூஷணுதிகள் சேரும் பயிர் செழிக்கும் உன்மனநோக்கமான எண்ணம் கூடும் இது உத்தமம்.

## 2—2—10

*தழைக்கவே வழிதானில்லை சனியவன் வக்கரித்தான்*
*இழைப்பாளே இடருனக்குஇனத்திலோர்கன்னிகைதான்*
*உழைப்புகள் மிகவானுலும் பிழைப்புக்கு வழியிராது*
*அழைத்துவர தாண்டிகட்கு அரஞ்செய்து ஜீவிப்பாயே*

உரை:— 2–2–10 விழுந்ததால் நீ எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் உன்குடும்பம் செழிப்புடன் வாழ வழிஏற்படாது உனக்கு சொந்தமான கன்னிகையினுல் உனக்குசில இடயூருகள்

ஏற்படலாம் அலைச்சல் திரிச்சலுண்டாம் வேலைகிடைத்தாலும் தகுந்த கூலி கிடைக்காது குடும்பத்தில் பாம்புகீரிபோல் இருக்கும் ஆனால் வாரத்திற்கு ஒரு திங்கட்கிழமைகளில் ஒருபரதேசிக்கு அன்னமிடவும் இது மத்திபம்.

## 2—3—1

*ஜீவிய காலமெல்லாம் சிறுமையால் வாடுகின்றாய்*
*காவியு முடுத்தநேரும் கிரகத்தின் கோளாராலே*
*ஆவியும் துடிக்கும்பொல்லா அலகைகள் சேஷ்டையாலே*
*தேவியாம் வாலைதன்னை திரமுடன் பூஜிப்பாயே.*

உரை:– 2–3–1 உதயமானதால் நீ உன்கால முழுவதையும் சிறுமையிலேயே கழித்துவருகின்றாய் காவியுடுத்தி பரதேசியாகவும் சில நாளைக்குமுன் மனம் தோன்றியிருக்கலாம் பேய் பிசாசுகளின் கோளாறினாலும் பீடிக்கப்பட்டு சிலர் மந்திரத்தின் மகிமையால் நிவர்த்தியாகியுமிருக்கலாம் கடன் தொல்லையும் உன்மனம் கவலைக்கிடமாகயிருக்கிறது இருந்தாலும் தேவிபூஜை செய்துவர நாளுக்குநாள் நன்மையுண்டு மத்திபம்.

## 2—3—2

*பூஜித்தால் பிழைவராது பழியொன்றும் நேர்ந்திடாது*
*வியாஜியத்தில் ஜெயிப்பாய் வகையுள்ளோர் உதவியாலே*
*ராஜியம் ஆள்பவன்போல் நாடெங்கும் கீர்த்தியோங்கும்*
*தேஜசு மிகவுண்டாகும் திடமாகும் எண்ணந்தானே*

உரை:– 2–3–2 உதயமானதால் உன்எண்ணம் முடியும் வழக்கு செலிக்கும் அரசன்போன்ற வாழ்க்கையுண்டாகும் உலகமெங்கிலும் எவ்வழியிலாவது கீர்த்தியுண்டாகும் செல்வச் சிறப்பினால் தேகம் அழகு தரும் தவிர நீ உன்குலதெய்வத்தை வாரம் தவராமல் பூஜித்துவர நன்மையுண்டாகும் இது உத்தமம்.

## 2—3—3

*திடமாக சொல்வதற்கு தீதாச்சு வந்தவேளை*
*கடன்பட்ட நெஞ்சம்போல கலக்கமுற் றேங்குகின்றாய்*
*உடந்தையா யுள்ளோராலே உனக்கொரு தீங்குண்டாகும்*
*இடதான பக்கந்தன்னில் இருக்குதோர் மச்சம்பாராய்*

உரை:– 2–3–3 உதயமானதால் நீ ஆருடம் கேட்டவேளை நல்லதல்ல சொந்த பந்துக்களாலே சில தீங்குகளேற்பட்டிருக்கின்றது அதுவுமல்லாமலும் சிலநாட்களாக ஒரு கவலையும் பாதிக்கின்றது அதின் பொருட்டு கடன்பட்ட நெஞ்சம்போல் கலங்குகின்றாய் இவ்வித கஷ்டங்கள் உனக்கு ஏற்படவே தெய்வாதினமாக இடது பககத்தில் மச்சமும் ஒன்று இருக்கின்றது இன்னும் 1-மாதம் போகவேணும் மத்திபம்.

## 2—3—4

*மச்சமும் வலதுபக்கம் மைந்தனே இருப்பதாலே*

*அச்சமும் விட்டுப்போச்சு அநுகூல மிகவுண்டாச்சு*

*மெச்சவே புகழுண்டாச்சு மேதாவியாக வாழ்வாய்*

*தக்ஷணம் செயும் வியாபாரம் தழைத்தது ஓங்குந்தானே*

உரை:– 2–3–4 உதயமானதாலும் உன் வலதுபக்கத்தில் மச்சம் இருப்பதாலும் உன்னுடைய கஷ்டங்களனைத்தும் இன்று முதல் விலகியது பெரியோர்களின் அனுகூலமும் யாரும் புகழும் வாழ்க்கையும் வியாபார விர்த்திகரமும் வெளிநாட்டில் லாபகரமும் குடும்பத்தில் மேன்மையும் கோரிய எண்ணம் கைகூடுதலும் உண்டாம் இது உத்தமம்.

## 2—3—5

*ஓங்கவே உனது எண்ணம் உருபடவழியுமில்லை*

*மாங்கல்ய ஸ்திரீஒருத்தி மர்மமாய்விளைப்பாள் தொல்லை*

*பாங்குடன் பந்துவர்க்கம் பகைமிக வந்தேதீரும்*

*சாங்கிய மாகநீயும் சாதிப்பாய் நவக்கிரகத்தை*

உரை:– 2–3–5 உதயமாகியதால் உனது எண்ணம் முடியாது உன் குடும்பத்தில் ஒரு மாங்கல்ய ஸ்திரீயினல் சில தொல்லைகள் விளையக்கூடும் அதின்காரணத்தினல் பந்துக்களுக்கும் உனக்கும் பகைமேலிடும் சினேகிதர்களும் உனைவெறுப்பார்கள் பலவிதத்திலும் கெடுதலாகவே இருக்கும் இது மத்திபம்.

## 2—3—10

நவக்கிரக தோஷமெல்லாம் நாட்டமாய் விலகிப்போச்சு
குவலயந் தனிலேயுந்தன் கோரிக்கை ஜெயமுண்டாச்சு
தவமது மிகவேகூடும் தழைத்திடும் புத்ரலாபம்
கவனியா திருந்தசொத்தும் கடுகியே கிடைக்கும்பாரே

உரை:- 2–3–10 உதயமாகியதால் உன்கெட்ட கிரகங்களின் கோளாறுகளெல்லாம் விலகிவிட்டது எண்ணமும் இடஞ்சலின்றி கூடும் புத்திர சம்பத்துண்டாகும் மூதாதைகளின் பொருளோ அல்லது புதைத்து வைத்துள்ள புதையலோ கிடைக்கும் வந்த நோய் வழிவிலகும் ஒருவருடன் கண்டு கலந்து பேசியபேச்சு உருதியாக முடியும் இது உத்தமம்.

## 2—4—1

கிடைக்குமே பெரியோர்நேசம் கீர்த்தியும் மிகவுண்டாகும்
தடையின்றி ஜெயமுண்டாகும் தாரமே புதிதாய்சேரும்
புடைசூழ புத்ரபாக்யம் பந்துக்கள் உதவியுண்டாம்
இடையிலே வந்தநோய்தான் இனியுனே வருத்திடாதே

உரை:- 2–4–1 விழ உலகில் நல்லவிதமான வாழ்க்கையும் பெரியோர்களின் சினேகமும் மதிப்பு வாய்ந்த கீர்த்தியும் புத்ர பாக்கியமும் பந்துக்களின் உதவியும் உண்டாகும் நோய்நீங்கும் புதிதாக ஓர் அபிமான தாரம் சேர்க்கையாகும் மனக்கவலை நீங்கும் மனதில் கோரிய எண்ணம் பலிதமாகும் இது உத்தமம்.

## 2—4—2

வருத்தமே மிகவுண்டாகும் வையக முனேபழிக்கும்
பொருத்தமா யுதவிசெய்ய பெருந்துய ருணக்குண்டாகும்
கருத்தினே மாற்றிவைக்கும் கடன்காரர் தொல்லைமூட்டும்
ஒருத்தரும் உனேக்காணுமல் ஓடியே மறைகுவாயே

உரை:- 2–4–2 உதயமானதால் படமுடியாத கவலையை யளிக்கும் உலகில் உனேகண்டவர்களுக்கு விஷம்போல் கொடூரமாகத்தெரியும் நன்மையைச் செய்ய துன்மை ஏற்படும் புத்தியை பேதனமாக்கும் கடன்தொல்லையுண்டாகும் அதின் காரணத்தால்

ஒருவருக்குந் தெரியாமல் தலைமறைவாகவுமிருக்கநேரிடும் கோரிய எண்ணமும் தடங்கலாகும் இது மத்திபம்.

## 2—4—3

*மறைந்திட்ட பொருளும்சேரும் மக்களால் பெருகும்யோகம்*
*அறைநொடிதனிலுன்னெண்ணம் அப்பனேபலிதமாகும்*
*உறைமொழி உருதியாகும் உதவியுண் டடுத்தோராலே*
*குறையுண்டுன் குடும்பத்தில் குலதெய்வந் தனக்குதானே*

உரை:– 2-4-3 உதயமாகியதால் ஆதியில் பெரியோர்கள் மறைத்து வைத்த புதையல் கிடைக்கும் புத்திரர்களால் நல்ல அதிர்ஷ்டமுண்டு ஒருவருடன் கண்டுகலந்த பேச்சுருதியும் அடுத்த பேர்களின் உதவியும் எண்ணமும் பலிதமாகும் ஆனால் உன்குல தெய்வத்தின் குறையுண்டு அதை மறவாமல் வாரந்தோரும் பூஜை செய்துவரவும் உத்தமம்

## 2—4—4

*தனக்குளே பெருமைகொண்டு தடமாட்ட மாக்கிவைக்கும்*
*மனக்குறைமிகவுண்டாகும் மனைவிமக்களும்வெறுப்பார்*
*இனத்தினுள் சண்டைநேரும் இடரது சம்பவிக்கும்*
*சினத்தினுல் இடத்தைமாற்றும் சீருவாய் நாகம்போலே*

உரை:– 2-4-4 உதயமானதால் உன்கெட்ட கிரகத்தின் கொரேத்தினுல் மனத்தடுமாற்றத்தை யுண்டுபண்ணும் மனக் கவலையுண்டாகும் மனைவிமக்கள் சுற்றமும் உனைவெறுப்பார்கள் குடும்பத்தில் வழக்கும் சண்டையுமுண்டாக்கும் அதனுல் பலவித மான இடையூறுகளை ஏற்படுத்தும் இடத்தைவிட்டும் மாற்றும் யாரிடமும் பாம்புபோல் சீருவாய் எண்ணமும் முடியாது மத்திபம்.

## 2—4—5

*நாகத்தின் தோஷத்தாலே நலம்பெற காலமில்லை*
*யோகத்தின் திசையினுலே உலகினில் பெறுமையுண்டு*
*சோகமே விலகும் நோய்தான் சுகமாகும் மருந்தினுலே*
*பாகமும் பிரிவதாகும் பணக்கார னுகுவாயே*

உரை:– 2-4-5 உதயமானதால் உனக்கு நாகதோஷமிருக் கின்றது அதின் பொருட்டு நீ எதை செய்யினும் தடங்கலும் பல

வழியிலும் குடும்ப விஷயத்தில் கவலையுண்டாம் அதற்கு நாகச் சிலைக்கு பூஜைசெய்துவந்தால் குடும்பத்தில் கருந்தரிக்கும் மருந் தினால் நோய்நீங்கும் குடும்பத்தில் பாகம் பிரியும் அதனால் நீபெரிய தனவந்தனாக வாழ்வாய் எண்ணமும் கூடும் இது உத்தமம்.

## 2—4—10

*ஆகுமே மோசமாகும் அன்பரால் துன்பம்நேரும்*
*போகுமேபொருளும்போகும்பொல்லாப்புதொழிலிலுண்டு*
*சாகுமே நாற்கால்ஜீவன் சஞ்சலசெய்தி தோன்றும்*
*ஏகினோர் வந்துசேர ஏகநாளாகும் பாரே*

உரை:– 2–4–10 உதயமாகியதால் சினேகிதரால் துன்பமுண் டாகும் கைப்பொருள் விரையம் வியாபாரத்தில் பொல்லாப்பு நாற்கால் ஜீவன்களுக்கு உயிர்ச்சேத முண்டாகும் வெளியிலிருந்து துயரமான சங்கதிகள்வரும் வீட்டைவிட்டு தாண்டிய பேர்களும் வருவதற்கு நாளாகும் குடும்பமும் நாளுக்குநாள் மோசமாகும் காரியத்திற்கு தடையாம் மத்திபம்.

## 2—5—1

*நாளது வெகுவானாலும் நலியது நீங்கிடாது*
*கோளதுசிலரா லுண்டாம்கொடுக்கல்வாங்களிலேநஷ்டம்*
*சாலவே கஷ்டமுண்டு சங்கடம் மிகவேதோணும்*
*மீளவே மாதமைந்து மைந்தனே கழித்திடாயே*

உரை:– 2–5–1 உதயமாகியதால் நோய் நீடிக்கும் வறுமை பாதிக்கும் சிலபேர்களால் கோள்வார்த்தையுண்டு · கொடுக்கல் வாங்கல் நஷ்டம் கடன்தொல்லை கபடமானவர்களின் கலகம் தொழிலில் நஷ்டம் சதாமனக்கவலையுண்டு கோரிய காரியத்திற்கு மாறுதலுண்டு ஆனால் 5-மாதம்போக சற்றுகஷ்டங்கள் விலகும் மத்திபம்.

## 2—5—2

*கழித்திடி லிந்தவாரம் களிப்புண்டு செல்வாக்குண்டு*
*வழிதப்பி போனஜீவன் வந்திடுமிப் பொழுதிற்குள்ளே*

*பழித்திட்டபேர்கள் வாழ்க்கை பலவித இடைஞ்சலாகும்*
*அழிந்திட்ட பொருளும்சேரும் அப்பனே பயப்படாதே*

உரை:– 2–5–2 உதயமாகியதால் இந்தவாரம் போனபிறகு உன்கஷ்டங்கள் விலகும் தவறிப்போனவர்கள் இன்றுபொழுதிற்குள் கிடைப்பார்கள் உனைகெடுக்க உத்தேசித்த சத்ராதிகள் கூட்டம் பூண்டோடழியும் கைவிட்டுப்போன பொருள்வரும் கோரிய எண்ணம் கைகூடும் இது மத்திபம்.

## 2—5—3

*பயந்தாலும் உனைவிடாது பாழான கிரகமப்பா*
*நயம்பேசி கெடுக்கவீணர் நாட்டினில் உனக்கேயுண்டு*
*துயராக்க மனையில்மைந்தர் தோன்றுவார் சிலதுநாளில்*
*செயலாக ஈசன்தன்னை சேவிப்பாய் சேவிப்பாயே*

உரை:- 2–5–3 உதயமாகியதால் நீபயங்கொண்டு ஒடிஒளிந்தபோதிலும் உன்கிரகங்கள் உனைபகையாளிகளிடம் காட்டிக்கொடுத்தேதீரும் தவிர உன் குடும்பத்தையே கெடுக்க சில விரோதிகளுண்டு உன்பொருளையழிக்கவும் மனக்கவலையைத்தரவும் பிள்ளைகளேற்படுவார்கள் ஆனல் ஆலமுண்ட ஈசனை அனுதினமும் துதித்துவர உன்கவலைகள் நீங்கலாம் இது மத்திபம்,

## 2—5—4

*சேவித்தால் லாபமுண்டு சீருள குலதெய்வத்தை*
*தேவியால் குடிவிளங்கும் சேர்ந்திடும் புத்ரலாபம்*
*ஓவிய தொழிலுமோங்கும் உடல்நலி நீங்கலாகும்*
*பாவியாம் கெட்டகிரகம் பற்றற காலமாச்சே*

உரை:– 2–5–4 உதயமானதால் மனதில் கோரிய எண்ணம் கைகூடும் நோய்நீங்கும் தொழில்ஓங்கும் பலவிதத்தில் நல்ல லாபங்கள் கிடைக்கும் கொண்ட பெண்ணினல் குடும்பம் செழிக்கும் ஆனல் உன்வீட்டில் மடிந்த குலதெய்வங்களை வாரத்திற்கொரு நாள் வெள்ளிக்கிழமைகளில் பூஜைசெய்துவரவும் இது உத்தமம்.

## 2—5—5

காலமும் கெட்டதாச்சு கேதுனக் கேழிலாச்சு
பாலகன் கருவும்போச்சு பலவித நஷ்டமாச்சு
சாலவே சினேகராலே சிற்சில இடருண்டாகும்
கோலமாய் வந்தநோயும் கொடுமையே படுத்தும்பாரே.

உரை:– 2–5–5 உதயமானதாலும் கேது ஏழாமிடத்திலிருப்பதாலும் பலவிதமான மனக்கவலைகளை யுண்டுபண்ணும் மனையில் கருக்குலைந்துபோகும் சினேகிதர்களால் இடையூருகளை ஏற்படுத்தும் சொற்பமாக வந்த நோயும் பற்றருமல் பாதிக்கும் குடும்பத்திலும் மனது நிம்மதியிராது எண்ணமும் தடைப்படும் மத்திபம்.

## 2—5—10

கொடுமைகள் இனியொன்றில்லை குடும்பத்தில் வதுவையாகும்
அடுமையாய் இருந்தபோதும் அரசன்போல் வாழலாகும்
படுமோசம் செய்தபேரும் பலதுன்ப மனுபவிப்பார்
நடும்பயிர் லாபமுண்டாம் நன்மனை கோலலாமே

உரை:– 2–5–10 உதயமாகியதால் இனி உன்கவலைகள் விலகும் மனையில் திருமணகாரியம் நடக்கும் ஒருவருக்கு அடிமைத்தொழில் செய்திருந்த போதிலும் சிலநாளைக்குள்ளாக அரசனைப் போன்ற அம்சமுண்டாகும் உனைகெடுக்கயோசிக்கும் சத்ராதிகள் துன்பத்தை யனுபவிப்பார்கள் நாட்டில் மழைபொழியும் நடும்பயிர் செழிக்கும் வீடுகட்ட விகசிதமான வாழ்க்கையுண்டாகும் இது உத்தமம்.

## 2—10—1

கோலமாய் ரெண்டும்பத்தும் கூடவேஒன்றும் வீழ்ந்தால்
பாலர்க்கு தோஷம்நீங்கும் பயணமே கொள்ளநன்ரும்
ஆலயம் போகலாகும் ஆன்ரோர்கள் பொருளும்சேரும்
மாலையும் கூடலாகும் மகப்பேறு தரிக்குமின்றே

உரை:– 2–10–1 உதயமாகியதால் கோரிய எண்ணம் தடையின்றி முடியும் வெளியூர் பிரயாணம்போக லாபமுண்டாகும் சிறுவர்களுக்கு தோஷம் மாந்தம் நோய் முதலியன நீங்கும் தேவா

லயத்திற்கு யாத்திரைபோகலாம் பெரியோர்களின் பொருளானது சேரும் மனையில் மணம்கூடும் புத்திரப்பேருண்டாகும் உத்தமம்

## 2—10—2

*இன்றுநீ ஏக்கங்கொள்ள இறைவனின் செயல்தானப்பா*
*நன்றுதான் கிரகமெல்லாம் நாடுமுன் காலசேஷ்டை*
*அன்றுகாண் தொழிலில் நஷ்டம் அலகையால் குற்றமுண்டு*
*ஒன்றறை திங்கள்செல்லும் உன்குறை நீங்கத்தானே*

உரை:– 2–10–2 உதயமானதால் நீகவலைமிகுதியால் கலங்கி வாடுகின்றாய் உனக்கு கிரகங்கள் நன்மையானதாக இருந்தாலும் உனது விதிப்பயனின் வேதனை உனைவாட்டுகின்றது தொழிலில் நஷ்டம் பேய் பிசாசுகளின் சேஷ்டை குடும்பக்கோளாறு முதலியன ஏற்படும் எண்ணிய எண்ணத்திற்கும்: இடைஞ்சலுண்டாகும் இது மத்திபம்.

## 2—10—3

*நீங்கிற்றுன் கெட்டகாலம் நிதானித்து எதையும்செய்வாய்*
*ஓங்கிடும் புத்ரலாபம் வியாபாரம் விர்த்தியாகும்*
*பூங்கொடி மனைவியாலே புகழுற மனைசெழிக்கும்*
*தீங்குகள்விலகிப்போகும் தியானிப்பாய் குலதெய்வத்தை*

உரை:– 2–10–3 உதயமாகியதால் இதுவரையில் உனைவருத்திய கெட்டகிரகம் நீங்கிற்று அஞ்சாதே எதையும் நிதானித்துச் செய் உன்காரியத்தில் ஜெயமே கிடைக்கும் தொழில் விர்த்தியாகும் புத்ரலாப முண்டாகும் கொண்ட மனைவியால் குடும்பம் செழிக்கும் தீமைகள் விலகிப்போகும் இருந்தாலும் உன்குலதெய்வத்தை மறவாமல் பூஜை செய்யவும் இது உத்தமம்.

## 2—10—4

*குலதெய்வ குற்றத்தாலே குடும்பத்தில் கவலையுண்டு*
*கலகமும் கஷ்டமுண்டு கைப்பொருள் விரையமுண்டு*
*சிலசில காரியத்தில் சினேகித நிந்தையுண்டு*
*நலம்பெற உந்தனுக்கு நாள்சில போகவேண்டும்*

உரை:- 2-10-4 உதயமானதால் உன்மனையில் மடிந்த குல தெய்வங்களின் குற்றமிருப்பதால் குடும்பத்தில் அளவிலாத கவலைகளை ஏற்படுத்தும் கலகமும் கஷ்டமும் கைப்பொருள் விரையமும் காரியத்தில் தாமதமும் சினேகிதர்களின் விரோதமும் தொழில் மந்தமும் நோயின் உபத்திரவமுண்டாம் ஆனால் சிலநாள்போக நன்மையுண்டாம் மத்திபம்.

## 2-10-5

*போகவே வெளியூர்மார்க்கம் புகமுண்டு லாபமுண்டு*
*சாகவே வாய்த்தகெண்டம் சமாளிக்க வழியுமுண்டு*
*ஏகமாய் தொழிலில்லாபம் இனத்தினர் உதவியுண்டு*
*சோகமேகொள்ளவேண்டாம்சிரசில்முன்சுழியுமுண்டாம்*

உரை:- 2-10-5 உதயமாகியதால் தொழில் முகாந்திரமாக வெளியூர்போக நன்மையுண்டாம் நோய் கெண்டம் நீங்கும் தொழிலில் லாபமும் மிகமேன்மையும் பந்துக்களின் உதவியும் உண்டாகும் ஆனால் முன்சுழியிருப்பதால் சில காரியத்தில் தாமதமுண்டாம் உத்தமம்.

## 2-10-10

*சுழியது விழுந்ததாலே துறப்பாயுன் முன்தாரத்தை*
*வழியேகீ போனபோதும் வம்பான சண்டைநேரும்*
*பழிசொல்வார் பந்துவர்க்கம் பாழான பிணியுண்டாகும்*
*கழித்திடில்இரண்டுதிங்கள் களிப்புண்டுசொல்லக்கேளே*

உரை:- 2-10-10 உதயமாகியதாலும் உனக்கு முன் சுழி ஏற்பட்டிருப்பதாலும் முன்தாரமாவது அல்லது அபிமான தாரமாவது தவறிப்போயிருக்கவேண்டும் உன்கெட்ட கிரக சேஷ்டையால் வம்பு சண்டைகள் நேரும் பந்துக்களால் பழிசொல் நேரிடும் நோயுண்டாம் ஆனால் இரண்டுமாதம் கழிக்க சுகமுண்டு மத்திபம்

## 3-1-1

*கேளப்பா மூன்றீரொன்றும் கிருபையாய் விழுந்ததாலே*
*தாளப்பா பொருளுஞ்சேரும் தழைத்திடமணமேயாகும்*

*கோளப்பா உரைத்தபேர்கள் கொடுமையை யனுபவிப்பார்*
*மீளப்பா நன்மையுண்டு மிகலாபம் தொழிலில்தானே*

உரை:– 3–1–1 உதயமானதால் மனையில் பிறந்த பிள்ளைகளுக்கு மாங்கல்யம் கூடும் உன்மீது பொறாமை கொண்டபேர்கள் கவலையை யனுபவிப்பார்கள் தொழில் முறையில் நல்ல லாபமும் காரியசித்தியு முண்டாம் இது உத்தமம்.

## 3—1—2

*தொழிலது விர்த்தியில்லை துன்பமும் நீங்கவில்லை*
*பழிமிக விளையும்தொல்லை பகையாளர் அதிகமாவார்*
*அழிவுள நோயினாலும் ஆபத்து நேரலாகும்*
*கழித்திடாய் ஐந்துதிங்கள் கவலையும் தீர்ந்துப்போமே*

உரை:– 3–1–2 உதயமானதால் தொழில் ஓங்காது துன்பங்கள் நீங்காது குடும்பத்தில் பலதொல்லைகள் விளையும் சினேகித விரோதமுண்டு நோய்பாதிக்கும் ஆனால் ஆயுளைக் கெடுக்காது இருந்தாலும் நோய் மருந்தினால் நீங்கலாம் குறித்த எண்ணமும் முடியாது இது மத்திபம்.

## 3—1—3

*போமப்பா கவலையெல்லாம் பிணிநீங்கு மருந்தினாலே*
*க்ஷேமத்தா லுன்குடும்பம் சீர்பெற்று செழித்துஓங்கும்*
*ஆமப்பா அடுத்தோராலே ஆறுதலுனக்குண்டாகும்*
*நாமப்பா தொழிலுமோங்கும் நலம்பெற்று வாழ்குவாயே*

உரை:– 3–1–3 உதயமானதால் இனிமேல் உன்கவலைகள் விலகும் குடும்பம் க்ஷேமமாக இருக்கும் சீரும் சிறப்பும் பெருகும் அடுத்த பேர்களால் ஆதரவுண்டு தொழில் விர்த்தியாகும் நோய் நீங்கும் குறித்த எண்ணம் கைகூடும் இது உத்தமம்.

## 3—1—4

*வாழவே வழியுமில்லை வக்கரித்தானே ராகு*
*தாழவே உனக்குகாலம் தடைப்படும் எண்ணமெல்லாம்*
*கோழையாய் இருக்கச்செய்யும் கொடுமைக ளதிகமாக்கும்*
*ஏழையா யானபோதும் ஏதுக்குமஞ்சிடாதே*

உரை:– 3–1–4 உதயமானதால் உன்மனதில் எண்ணிய எண்ணம் முடியாது நிம்மதியான வாழ்க்கையுமில்லே ராகு உனக்கு பகையாக இருப்பதால் பலவித கேடுகளே விளேவிக்கும் கவலேகள் அதிகமாக இருக்கும் பரமஏழையாக்குவிக்கும் இருந்தாலும் தைரியத்தை விடாதே மத்திபம்.

## 3—1—5

*அஞ்சிட வேண்டாமப்பா ஆயுளின் பலன்தானுண்டு*
*வஞ்சிய ராலேநல்ல வாழ்க்கையும் உண்டுகண்டாய்*
*சஞ்சலம் நீங்கலாகும் சாதித்த எண்ணங்கூடும்*
*கொஞ்சநாள் கழித்ததானல் குபேந்திர வாழ்க்கையாமே*

உரை:– 3–1–5 உதயமானதால் நீண்ட ஆயுள் பலத்தைதரும் கொண்ட மனேவியால் குபேந்திரனை வாழ்க்கை யுண்டாகும் குடும்ப சஞ்சலம் நீங்கும் எண்ணமும் கைகூடும் கொஞ்சநாள் கழித்தபிறகு குடும்பம் செழிக்கும் உத்தமம்.

## 3—1—10

*வாழ்க்கையில் வருடம் மூன்ருய் வருந்தியே வாடுகின்ருய்*
*வீழ்த்திய நோயினுலும் வீணர்கள் வஞ்சத்தாலும்*
*தாழ்த்திய தொழிலினுலும் தடமாட்ட குணத்தினுலும்*
*பாழ்செய்தாய்பொருளனேத்தும் பதராதேபலனுண்டாகும்*

உரை:– 3–1–10 உதயமானதால் நீஎண்ணிய எண்ணத்திற்கு இடைஞ்சலுண்டு தவிர சுமார் 3-வருடகாலமாக மிகவும் கவலேப் படுகிருய்நோயினுலும் பலபேர்களின் நயவஞ்சகத்தாலும் தொழில் முறையிலும் துஷ்ட சேஷ்டையான குணத்தினுலும் பொருள்விரையப்பட்டிருக்கலாம் இருந்தாலும் பதராதே நவக்கிரக பூஜைசெய் மத்திபம்.

## 3—2—1

*பதரினல் சிதரும்புத்தி பாலரால் மனதுகஷ்டம்*
*இதம்பெற எண்ணினுலும் இடருகள் மிகவுண்டாகும்*
*சதமென யாரையும்நீ சார்ந்திட லாகாதப்பா*
*மிதமிலா நஷ்டமுண்டு மாதமே போக்கிடாயே*

உரை:– 3–2–1 உதயமானதால் மனதில் எண்ணிய எண்ணங்கள் முடியாது பலவிதமான இடையூறுகள் ஏற்படும் குடும்பத்தில் பிள்ளைகளால் மனக்கஷ்டம் யாரையும் நம்பாதே தொழில் நஷ்டம் ஆயினும் பதரவேண்டாம் மாதமொன்று போக நன்மையுண்டாகும் இது மத்திபம்.

## 3—2—2

*போக்குவாய் கவலையெல்லாம் புதனுனக் காக்ஷியப்பா*
*வாக்கியம் உருதியாகும் வல்லவர் சினேகமாவார்*
*யோக்கியா தாம்சம்கூடும் யோகமாம் தொழில்சிலாக்யம்*
*பாக்கியம் பெற்றுவாழ்வாய் பலநாளும் அறிகுவாயே*

உரை:– 3–2–2 உதயமானதால் இனி உனது கவலைகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும் வாய்ச்சொல் உருதியாகும் பலசாமர்த்தியர்கள் சினேகருண்டாகும் தொழிலில் நல்ல யோகமும் யோக்யாதாம்சமும் முண்டாம் புதன் உனக்கு ஆக்ஷியானதால் பாக்கியச்சிரப்புண்டாம் உன் எண்ணம் முடியும் உத்தமம்.

## 3—2—3

*அறியவே வந்தகஷ்டம் ஆபத்தில் முடியுமப்பா*
*தெரியவே மறைந்தஜீவன் தேடினும் சிக்கிடாது*
*உரியபேர் பகையுமாவார் உன்வாக்கு விஷம்போலாகும்*
*பரிவுள தொழிலும்போகும் பயனற்று வருந்துவாயே*

உரை:– 3–2–3 உதயமானதால் இப்பொழுது வந்திருக்கும் கவலை சற்று ஆபத்தாகவே முடியும் காணமற்போன ஜீவன் தேடினும் கிடைக்காது பந்துமித்ரர்களும் பகையாவார்கள் உன்வாக்கு விஷம்போல் தோன்றும் தொழிலிலும் நிந்தையும் நஷ்டமும் ஏற்படும் பலவிதக் கவலையால் வருந்தவும் நேரிடும் மத்திபம்.

## 3—2—4

*வருந்தாதே கேளுமப்பா வகைபல லாபமுண்டு*
*பொருந்தாதுன்கவலையெல்லாம்புழுதிபோல்பறந்துபோகும்*
*மருந்தாலே நோயும்நீங்கும் மணங்கூடும் மைந்தருக்கு*
*குருபார்வை யுனக்கேயுண்டு குடும்பமும் செழிக்கும்பாரே*

உரை:– 3-2-4 உதயமானதால் உனக்கு குருபார்வை யாதலாலும் பலவித லாபமுண்டாகும் கவலைவிலகும் பல நாட்களாக வருத்தும் நோயானது மருந்தினால் நீங்கும் மனையில் மைந்தர்களுக்கு மணம்கூடும் குடும்பமும் செழித்தோங்கும் கோரிய எண்ணமும் ஜெயமடையும் இது உத்தமம்.

## 3—2—5

*செழிக்கவே நினைத்திட்டாலும் அழிக்குமுன் கெட்டகாலம்*
*பழித்திடும் பந்துவர்க்கம் பலவிதமான நஷ்டம்*
*இழிச்சொல்லும் உனக்கேநேரும் இக்கட்டில் சிக்கவைக்கும்*
*கழித்திடி லிந்தமாதம் கஷ்டமும் பறந்துபோமே*

உரை:– 3–2–5 உதயமானதால் நீமேன்மையடைய நினைத்தாலும் கீழ்த்தரமாக்குவிக்கும் பந்துக்களால் பழிப்பும் சினேகிதர் விரோதமும் தொழிலில் நஷ்டமும் இழிவான வசைச்சொற்களும் பலவிதமான இக்கட்டுகளிலும் சிக்கவைக்கும் ஆனால் இம்மாதம் கழிய கஷ்டம் விலகும் மத்திபம்.

## 3—2—10

*பறக்குமுன்வினைகளெல்லாம் பலித்திடும்நினைத்தயெண்ணம்*
*புறத்தினில் பேசுமீனர் பூண்டுடனழிந்துபோவார்*
*சிறப்புடன் எடுத்தவேலை சீக்கிரம் முடியக்கூடும்*
*இறந்திட்ட மங்கையுந்தன் இடர்தீர்த்து ரக்ஷிப்பாளே*

உரை:– 3–2–10 உதயமானதால் பூர்வத்தில் செய்த வினைகளாயினும் பறந்துபோகும் நினைத்தயெண்ணம் முடியும் புறம்பேசுவோரின் நேசம் விலகும் உன்மனையில் மடிந்த மாங்கல்ய ஸ்திரீயினால் உன்குடும்பம் தழைக்கும் உத்தமம்.

## 3—3—1

*ரக்ஷிக்க தெய்வமுண்டு நன்மையே உனக்குண்டாகும்*
*கச்சித முள்ளமங்கை கன்னியின் உதவியுண்டு*
*இச்சித்த எண்ணங்கூடும் இடரிலா வாழ்க்கையாகும்*
*உச்சித தொழிலில் மேன்மை வெளிநாட்டில் லாபமாமே*

உரை:– 3–3–1 உதயமானதால் எப்பொழுதும் உனக்கு நன்மையே யுண்டாகும் குடும்பத்தில் ஓர் மங்கையினுல் உதவி யுண்டாகும் கலங்காத மனமும் கச்சிதமான வாழ்க்கையும் கன மான தொழில் மேன்மையும் வெளிநாட்டில் கைகண்டலாபமும் கோரிய காரியம் சித்தியாம் இது உத்தமம்.

## 3—3—2

*லாபமே அடையவென்ருல் நாளது அதிகமாகும்*
*கோபமே குடிகெடுக்கும் கொடுமையும் உனக்குநேரும்*
*ஆபத்தும் விளையக்கூடும் அபஜெய முனக்குண்டாகும்*
*சாபமுமுனக்குயில்லே சனியிட சேட்டைதானே*

உரை:– 3–3–2 உதயமாகியதால் உனக்கு சனியனின்தோஷ முண்டு அதனுல் எக்காரியத்திலும்மேன்மையடைய அதிகநாளாக வேண்டும் உன்முன் கோபமே குடும்பத்தில் பொல்லாப்பு ஏற் படும் அதனுல் அபாயமும் நேரிடும் காரியத்தில் அபஜெயமுமுண் டாம் மத்திபம்.

## 3—3—3

*சேட்டைகள் சிலர்செய்தாலும் செல்லாது செல்லாதப்பா*
*தாட்டிகமாயுன்னெண்ணம் தான்கூடும்தொழிலும்விர்த்தி*
*நாட்டினில் க்ஷேமமுண்டு நடுபயிர் லாபமாகும்*
*காட்டியே கொடுக்கும்வீணர் கலங்கியே தவிப்பர்தானே*

உரை:– 3–3–3 உதயமானதால் உனேகெடுக்க பலபேர் பல விதமான இடையூறுகளே விளேத்தாலும் ஒன்றும் செல்லாது தொழில் விர்த்தியாகும் நாடு செழிக்கும் தானியம் விளேயும் புத் திரர்களால் க்ஷேமமுண்டாகும் எண்ணிய எண்ணமும் கூடும் இது மகா உத்தமம்.

## 3—3—4

*தவித்திட செய்யும்வினில் தடைப்படும் காரியங்கள்*
*புவிதனில் பொருளிழந்து பேதன மாக்கிவைக்கும்*
*செவிபட வென்சொன்னுலும் செல்லாது கொடுமைகாட்டும்*
*கவித்திடமாக சொன்னேன் கழித்திடாய் இரண்டுமாதம்*

உரை:- 3-3-4 உதயமாகியதால் எக்காரியத்திலும் தவிப் புண்டாக்கும் கோரியகாரியத்திற்கும் தடைஏற்படும் கைப்பொருள் விறையப்பட்டு குணம்மாறியலேயச் செய்யும் எவ்வளவு தான் நன் மையையுறைத்தாலும் அச்சொல் உன்செவிக்கு ஏற்காது பலவித மான தொந்தார்த்தங்களேயும் உண்டுபண்ணும் இது மத்திபம்.

## 3—3—5

*மாதமொன்ருக உந்தன் மனதிலோர் கவலேயுண்டு*
*பாதகமில்லே யொன்றும் பலித்திடும் பயப்படாதே*
*காதலியொருத்திசேர்வாள் கடன்தீரும் கனநோய்நீங்கும்*
*சாதகத் தொழிலுமோங்கும் சகலமும் முடியும்பாரே*

உரை:- 3-3-5 உதயமானதால் உன்மனதில் ஒருமாதமாக இருக்கும் கவலேநீங்கும் எண்ணம் இடையூரில்லாமல் ஜெயமாகும் சிலநாளில் ஒரு கன்னிகைவசமாவாள் அன்னவளால் உனக்கு வேண்டிய உதவிகளுண்டாகும் குடும்பத்தின் கடன்தீரும் கொடி தான நோய் நீங்கும் தொழில் மேன்மையும் உண்டாம் உத்தமம்.

## 3—3—10

*முடியாத காரியத்தை முடித்திட எண்ணங்கொண்டால்*
*படியாது படியாதப்பா பலபொருள் நஷ்டமுண்டு*
*கொடியவ ரூரவினுலே குடிகேடு விளேயலாகும்*
*கடினமாய் இருந்தபோதும் கடவுளே மறந்திடாதே*

உரை:- 3-3-10 உதயமானதால் முடியாத காரியத்தை முடிக் களாமென கருதுகிருய் அது எக்காரணம் பற்றியும் முடியாது கைப் பொருள் விரையமுண்டு பலபேர்களின் சதிநினேவினுல் குடும்பத் திற்கே கேடுவிளேவிக்கலாம் எது எப்படியாளுலும் ஈசனே மறவா மல் தியானித்துவர நன்மையுண்டாகும் மத்திபம்.

## 3—4—1

*மறந்திட மதிகெடுக்கும் மனேவிமக்களே வெறுக்கும்*
*சிறந்திடஇருந்தவாழ்க்கை சிதரிப்போம்பிணியுண்டாக்கும்*
*துறந்துமே வீட்டைவிட்டு துறவரம் போகச்செய்யும்*
*அறஞ்செய்வாய் ஆதிவாரம் அன்புடன் ஏழைகட்கே*

உரை:– 3-4-1 உதயமானதால் மனதில் எண்ணிய எண்ணம் முடியாது பந்துக்களையும் மனைவி மக்களையும் வெறுக்கும் வாயாரக்கூரிய வாக்கை மறக்கும் குடும்பம் சிதருதலுண்டாகும் நோயுண்டாகும் பரதேசிபோல் அலையச்செய்யும் இருந்தாலும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏழைகட்கு உன்னாலியன்றளவு தர்மம் செய்துவர இது மத்திபம்.

## 3—4—2

*ஏழையா யிருந்தபோதும் இவ்வாரம் கழிந்ததானல்*
*வாழ்வும் வழியுமுண்டு வதுவையும் மனையிலாகும்*
*பேழையில் பணமும்சேரும் பெருமையும் மிகவுண்டாகும்*
*தாழவே காலமில்லை தைரியம் விட்டிடாதே*

உரை:– 3-4-2 உதயமானதால் இந்த வாரம் போனபிறகு உனக்கு நல்லயோக திசை ஏற்படும் செல்வாக்காக வாழ்வாய் மனையில் சுபகாரியம் நடக்கும் பொருள்சேரும் பெருமையுண்டாகும் இனி எக்காரணத்தைக் கொண்டும் ஒரு விதமான கவலையும் ஏற்படாது கோரிய எண்ணமும் கூடும் இது உத்தமம்.

## 3—4—3

*விட்டிடு நினைத்தயெண்ணம் வீணிலே நஷ்டமுண்டாம்*
*கட்டியமனையும் பாழாம் கடன்காரர் தொல்லையுண்டாம்*
*திட்டமாய்தொழிலில்நிந்தை திருடன்போல்பதுங்கச்செய்யும்*
*கிட்டிய பந்துகட்கும் கேவலமாக்குமாமே*

உரை:– 3-4-3 உதயமானதால் உனது எண்ணம் முடியாது வீண் நஷ்டம் கோரியமனையும் கட்டிமுடியாது குறைவாகவே நிற்கும் தொழிலில் நிந்தையும் கடன்காரர்களுக்கு பயந்து பதுங்கவும் செய்யும் பந்துக்களும் உன்னை கேவலமாக நினைப்பார்கள் இது மத்திபம்.

## 3—4—4

*ஆக்குமே சீமானக ஆதர வதிகமுண்டு*
*போக்குமேதுயரந்தன்னை பொருந்திடும் தொழிலும்விர்த்தி*
*தேக்குமே ஞானம்கல்வி திமையால் பிரிந்தோர்மீள்வார்*
*நோக்குமே கிரகமெல்லாம் நீடிக்கும் ஆயுள்தானே*

உரை:- 3-4-4 உதயமானதால் உன்னல்ல கிரகத்தின் அதி கார திசையினல் தனவந்தனுகவும் செய்யும் பலபேர்களால் ஆதர வுண்டாகும் கவலைநீங்கும் தொழில்ஓங்கும் பாலர்களுக்கு ஞானம் கல்வி அதிகரிக்கும் குடும்பத்தில் மறைந்தபேர்களும் வந்து சேர் வார்கள் நல் ஆயுளைத்தரும் உத்தமம்.

## 3—4—5

*ஆயுள்தா னற்பமில்லை ஆண்டவன் துணையுமில்லை*
*நோயினுல் மிகவும்தொல்லை நிகழ்பந்து சகாய்மில்லை*
*வாயினுல் சொன்ன வார்த்தை வகையின்றி கலங்கவைக்கும்*
*சேயினுல் கவலையுண்டாம் சீர்பெற சிலநாள்செல்லும்*

உரை:- 3-4-5 உதயமானதால் எத்தகைய நோய் கெண்டங் கள் ஏற்பட்டாலும் ஆயுளைக்கெடுக்காது ஆனுல் உனக்கு ஆண்ட வன் சகாயமில்லை பந்துக்களாலும் உதவியில்லை வாய்ச்குரும்பு பேசி வகைதப்பி கலங்கச்செய்யும் மைந்தர்களால் மனக்கவலை யதிகரிக்கும் சிலநாள்போக நன்மையுண்டாம் மத்திபம்.

## 3—4—10

*செல்லவே இந்தவாரம் சீர்பெற தகுதியுண்டு*
*பல்லோர்கள் உதவிகூடும் பயிர்தொழில் சிறந்துஓங்கும்*
*அல்லலும் தோஷம்நீங்கும் ஆன்ருேர்கள் பொருள்கிடைக்கும்*
*வெல்லவே வழக்குதரும் வியாபாரம் வலுமையாமே.*

உரை:- 3-4-10 உதயமானதால் இந்த வாரத்திற்குப்பிறகு எவ்விதமான கவலைகளாயினும் நீங்கும் பலர் உதவியும் பந்துக் கள் ஒற்றுமையும் பயிர்தொழில் சிறப்புறும் தோஷமும் நோயும் துலையும் பெரியோர் பொருள்சேரும் வழக்குஜெலிக்கும் வியாபாரம் வலுக்கும் கோரிய எண்ணமும் கூடும் உத்தமம்

## 3—5—1

*வலுமையாய் கிரகமெல்லாம் வலுத்ததா லுனக்கேலாப்ம்*
*சலுகையே காட்டுவார்கள் சஞ்சலம் நீங்கலாகும்*
*குலுங்கிட தெய்வத்தன்மை குடும்பமும் செழித்துஓங்கும்*
*அலுவலும் ஜெயமுண்டாகும் ஆருடம் பொய்யாகாதே*

உரை:– 3–5–1 உதயமானதாலும் கிரகங்கள் லாபஸ்தானத்தில் அமர்ந்திருப்பதாலும் வியாபாரம் வலுத்தமுண்டு குடும்பசஞ்சலம் நீங்கும் தெய்வத்தன்மையுண்டாம் கோரிய எண்ணமும் பலிதமாகும் பஞ்சமூர்த்தியின் ஆருடம் பொய்யாகாது உத்தமம்.

## 3—5—2

*பொய்யாகாது பரமன்வாக்கு புவிதனில் உனக்கேதுன்பம்*
*நொய்யாதே விரையமுண்டு நான்மறை பழிக்கநேரும்*
*வையக மீதுன்வாக்கு வலுக்காது பொய்யதாகும்*
*செய்யுமோர்தொழிலும்போகும் திகைப்புடன்பகைப்புமாமே*

உரை:– 3–5–2 உதயமானதால் நாளுக்குநாள் துன்பமதிகரிக்கும் பலவித விரையங்களேற்படும் பலபேர்கள் பழிக்க பெயருண்டாகும் உன்னுடைய வாக்கு ஒருவருக்கும் ஏற்காது பொய்ப்புறட்டாக தெரியும் தொழில் நஷ்டம் அதனுல் மனக்கஷ்டமுமேற்படும் கோரிய எண்ணங்களும் முடியாது இது மத்திபம்.

## 3—5—3

*பகைத்தவர் உறவேகூடும் பாலரால் லாபமாகும்*
*நகைத்தவர் நாசமாவார் நன்மையும் மனையிலாகும்*
*வகைதப்பி சென்றோர்மீள்வார் வறுமையு மகன்றுபோகும்*
*தகைமையாய்குலதெய்வத்தை தப்பாமல்வசியஞ்செய்யே*

உரை:– 3–5–3 உதயமானதால் கோரியிருக்கும் எண்ணம் கூடும் பகையாளிகளும் உறவாக சேருவார்கள் பாலர்களால் லாபமுண்டாகும் பழித்தவர்களும் இழித்தவர்களும் பாழாவார்கள் மனையில் திருமணம் கூடும் தேசாந்திரம் சென்றோர்கள் சீக்கிரத்தில் வருவார்கள் கஷ்டங்கள் விலகும் ஆனுல் குலதெய்வத்தை சுக்ரவாரந்தோரும் பூஜைசெய் உத்தமம்.

## 3—5—4

*வசியமா யிருந்தபேரும் வாதுகள் செய்வாரப்பா*
*உசிதமுமாகாதப்பா உன்னிட வார்த்தையாலே*
*கசியவே துன்பமாகும் கைப்பொருள் சேதமாக்கும்*
*பசியதின் கொடுமையாலே பலபொருள் விரையமாமே*

உரை:– 3–5–4 உதயமானதால் அன்புடன் உனை ஆதரித்த பேர்களும் பகைப்பார்கள் உன்னுடைய வார்த்தை உனக்கு டல வினைகளை விளைவிக்கும் அதனுல் கவலையதிகரிக்கும் கைப்பொருள் சேதமாக்கும் தரித்திரத்தின்தன்மையால் பசிபிணியால் பலபொருள் களும் அழியும் எண்ணத்திற்கும் இடைஞ்சலாகும் மத்திபம்.

## 3—5—5

*விறையமு மாகாதப்பா விரைவினில் ஜெயமுண்டாகும்*
*குறைவின்றிவாழ்வதற்கேகுடும்பத்தில்செல்வமோங்கும்*
*உரைசொலும் முருதியாகும் உடன்பிறந்தோரால் நன்மை*
*திறைகடல் தாண்டினேரும் திரும்புவார் லாபம்பெற்றே*

உரை:– 3–5–5 உதயமானதால் எதைச் செய்யினும் விறைய மேற்படாது குடும்பத்தில் குறைவின்றி செல்வமானது செழிக்கும் வாக்குருதியேற்படும் சகோதரர்களால் சகல சுகங்களும் பெறு கும் கப்பல்யாத்திரைச் சென்றபேர்கள் வேண்டிய லாபத்துடனே சீக்கிரத்தில் வந்து சேருவார்கள் எண்ணமும் கூடும் உத்தமம்.

## 3—5—10

*பெற்றுனே ராகுநீச்சம் பலிக்காது உனதுயெண்ணம்*
*உற்றாரும் உதாசினிப்பார் உலகிலுள்ளோர் பகைப்பார்*
*மற்றுறை கேட்டரொக்கம் மறுப்பார்கள் கொடுக்கமாட்டார்*
*அற்றுலே ஐந்துவாரம் ஆனந்த மடைகுவாயே*

உரை:– 3–5–10 உதயமானதாலும் உனக்கு ராகு நீச்சம் பெற்றதாலும் எண்ணங்களெதுவும் பலிதமாகாது பந்துக்களும் பகைப்பார்கள் பாரிலுள்ளோர்களும் ஏசுவார்கள் பிறறைக்கேட்ட பொருள் கிட்டாது ஆனல் 5-வாரம்போக அனுகூல முண்டாகும் மத்திபம்,

## 3—10—1

*அடைகுவாய் கவலைமெத்த அபலமாய் போகும்யெண்ணம்*
*நடைவாகனுதி நஷ்டம் நல்வழி ஏற்படாது*
*இடையிலே கொஞ்சம்நன்மை இருந்தாலும் சுகமிராது*
*தடையின்றிநவக்கிரகத்தை துதித்திடில் சுகமுண்டாமே*

உரை:- 3–10–1 உதயமானதால் எண்ணங்கள் எதுவும் முடியாது வாகனுதிகள் நஷ்டமுண்டாகும் ஆனுல் இடைநடுவில் கொஞ்சம் சுகத்தைத்தரும் அதனுல் ஒருபலனுமேற்படாது ஆனுல் நவக்கிரகத்தை பூஜைசெய்துவர நாளுக்குநாள் நன்மையுண்டாகும் இது மத்திபம்.

## 3–10–2

*சுகமுண்டு சம்பத்துண்டு சுக்கிரன் திசையுமுண்டு*
*புகழுண்டு புண்யமுண்டு புத்திரபாக்கியமுண்டு*
*மகிழுண்டு மேன்மையுண்டு மற்றவர் வுதவியுண்டு*
*ஜெகத்தினில் சீமான்போல சிறப்புற்று விளங்குவாயே*

உரை:- 3–10–2 உதயமானதால் உனக்கு தற்போது சுக்கிர திசை ஏற்பட்டிருக்கின்றது அதனுல் புகழுடன் புவியில் வாழ்வாய் புத்திர சம்பத்துண்டாகும் மேன்மை ஏற்படும் அடுத்த பேர்களின் உதவியும் ஆதரவும் பிரசித்திப்பெற்ற வாழ்க்கையும் உண்டாகும் நோய் நீங்கும் கோரிய எண்ணம் முடியும் இது உத்தமம்.

## 3–10–3

*விளங்கவே மூன்றில் செவ்வாய் வீணுனகவலையுண்டாம்*
*களங்கமும் நெஞ்சிலுண்டு கபடர்கள் உறவுகூடும்*
*உளவது உனைகெடுக்க உற்றுரும் நினைவுகொள்வார்*
*களவது மனையில்போகும் கலகமாம் கன்னியாலே*

உரை:- 3–10–3 உதயமானதால் 3-வது வீட்டில் அங்காரகன் அமர்ந்தார் ஆதலால் வீண்கவலை அலைச்சல் திரிச்சலுண்டு பொல்லாதவர்களின் உறவுகூடும் பந்துக்களும் உனைகெடுக்க நினைப்பார்கள் மனையில் களவு ஏற்படும் ஒருகன்னிகையின் கலகமேற்பட்டு குடும்பம் இருபாகமாய் பிரியும் எண்ணிய எண்ணம் முடியாது மத்திபம்.

## 3–10–4

*கன்னியராலேலாபம் கைத்தொழில் விர்த்தியாகும்*
*பின்னமாகாதுயெண்ணம் பெரியோர்கள்பொருளும்கூடும்*
*அன்னிய ராலுனக்கு ஆதரவதிகமாகும்*
*இன்னமும் ஐந்துநாளில் இடர்நீங்கும் அறிகுவாயே*

உரை:– 3–10–4 உதயமானதால் எண்ணம் கைகூடும் ஓர் கன்னிகையினல் லாபமுண்டாம் தொழில்விர்த்தி குடும்பமேன்மை அன்னியர்களுதவி அனேகசம்பத்துகள் மூதாதைகளின் பொருள் சேர்க்கையு முண்டாகும் தவிர குடும்பக்கவலைகளிருப்பினும் இன்னும் 5-நாளில் நீங்கும் உத்தமம்.

## 3—10—5

*இடரது வாய்க்கலாகும் எட்டிலே குருஅமர்ந்தார்*
*படமுடியாத கஷ்டம் பாரினிலனேகமாகும்*
*தடங்கலு மதிகமாகும் தடமாட்டம் தொழிலும்நஷ்டம்*
*திடர்தப்பி இடமும்விட்டு மாற்றிடும் கலங்கிடாதே*

உரை:– 3–10–5 உதயமானதால் பலவிதமான ஆபத்துகள் ஏற்படலாம் அதிலும் எட்டில் குரு அமர்ந்ததால் இடைஞ்சலான பல கஷ்டங்களும் எண்ணத்திற்கு இடையூறும் தொழிலில் நஷ்டமும் இடம்விட்டு வேறிடம் மாறவும் தொட்டதிளெல்லாம் மட்டடங்காத கவலையும் உண்டாம் மத்திபம்.

## 3—10—10

*கலங்கிட வேண்டாமப்பா காணாத பொருளும்கிட்டும்*
*நலம்பெற மார்க்கமுண்டு நடுபயிர் செழிக்கும்லாபம்*
*துலங்கிடும் குடும்பம்நன்றாய் தொழிலது நீடித்தோங்கும்*
*குலதெய்வம் தன்னைவேண்டி கும்பிட்டு வணங்குவாயே*

உரை:– 3–10–10 உதயமானதால் ஒன்றுக்கும் அஞ்சாதே உனக்கே ஜெயகாலம் நெருங்கியது வெகுநாட்களாக காணாதவர்களை காணக்கூடிய பாக்கியமுண்டாகும் நிலஞ்செழித்து தானிய விளைவுகளுண்டாகும் தொழில் நீடிக்கும் குடும்பம் தழைக்கும் ஆனல் குலதெய்வத்தை மறவாதே இது உத்தமம்.

## 4—1—1

*வணங்குவாய் நவக்கிரகத்தை வழக்குக ளதிகமுண்டு*
*மணமது தவறிப்போகும் மாற்றானுக் கிடங்கொடுக்கும்*
*குணமது பேதவிக்கும் குடும்பத்தை கலைத்துவைக்கும்*
*துணையென யாரையும்நீ தொண்டனே எண்ணிடாதே*

உரை:- 4–1–1 உதயமானதால் குடும்பத்திலும் தொழில் முகாந்திரத்திலும் மற்றும் பல விஷயத்திலும் தொடுவழக்குகளுண் டாகும் மணகாரியம் தவறும் பகையாளிகளிடம் காட்டிக் கொடுக் கும் குணம் மாறும் குடும்பம் கலையும் அதனுல் கபடமானவர் களின் உறவை வையாதே தற்போது எண்ணிய எண்ணம் முடி யாது இது மத்திபம்.

## 4—1—2

*எண்ணிய எண்ணந்தன்னில் இடையூறு ஏற்படாது*
*கன்னிய மணையதன்னில் கருவது உற்பவிக்கும்*
*திண்ணமாய் லாபமுண்டு தீதில்லை தொழிலும் மேன்மை*
*பண்ணுளாய்வருத்தும்நோயும்பறந்துபோம்மருந்தினுலே*

உரை:- 4-1-2 உதயமானதால் புதிதாக ஆரம்பித்த தொழில் பொருத்தமாக ஓங்கும் அதனுல் மேன்மையாக்கும் மனையில் கருத் தரிக்கும் மனதில் கோரிய எண்ணம் தடங்கலில்லாமல் முடியும் கவலைக்குள்ளாக்கும் நோயும் மணிமந்திர ஔடதத்தினுல் மாய மாய் மறையும் குடும்பக்கவலை நீங்கும் உத்தமம்.

## 4—1—3

*மருந்தினுல் மயங்கிநீதான் மனைவிமக்களை வெறுத்தாய்*
*குருமூன்றில் நின்றதாலே குடிகேடர் சினேகமானுர்*
*பொருளதின் செருக்கினுலே பொல்லாங்கி லீடுபட்டாய்*
*அருளுண்டு ஆண்டவன்தன் ஆணையை மீறிடாதே*

உரை:- 4–3–1 உதயமாகியதால் குருபகவான் 3-ல் பிர வேசிக்கப்பட்டார் அதின் கோளாரினுல் பல போக்கிரிகள் சவ காசம் ஏற்பட்டு பொல்லாங்கி லீடுபட்டிருக்கலாம் கைப்பொருள் விரையப் பட்டிருக்கலாம் மாயமருந்தினுல் மனைவிமக்களை மறந்து மமதையுடன் சிலநாட்கள் திரிந்தாய் ஆயினும் ஆண்டவனை மற வாம லிருந்தால் நாளுக்குநாள் நன்மையுண்டாகும் மத்திபம்.

## 4—1—4

*மீறியே நடந்தபேரும் மிரட்டியே திரிந்தபேரும்*
*சீரியே சினந்தபேரும் சித்தமே கலைத்தபேரும்*

*பாரினில் பகைத்தபேரும் பழிப்புற செய்தபேரும்*
*காரிருள்போலேமாய்வார் கதிரோன்போல் துலங்குவாயே*

உரை:- 4-1-4 உதயமானதால் உன்வார்த்தைகளைத்தட்டினவர்களும் ஏமாற்றி பொருள் பரித்தவர்களும் தவிர அவர்களின் கோபத்திற்குள்ளாக்கும் உனை பல குரும்பு செய்யும் உலகம் பழிக்க செய்தவர்களும் பற்றருத்துப் போவார்கள் உன்னுடைய கவலைகளும் சூரியனைக்கண்ட இருள்போல் விலகிப்போம் கோரிய எண்ணமும் முடியும் இந்த யோகம் வெகுநாளைக்கு இருக்கும் உத்தமம்.

## 4—1—5

*துலங்கவே ராசியில்லை தொந்தார்த்தம் நீங்கவில்லை*
*நலம்பெற வழியுமில்லை நாட்டினில் சுகமுமில்லை*
*குலமதுகெடுக்க மற்றோர் குரும்பனால் விளையும்தொல்லை*
*கலகமும் நீங்குதற்கு கழித்திடாய் வருடம் ஒன்றே*

உரை:- 4-1-5 உதயமானதால் உனக்கு நல்ல காலமில்லை அதனால் உன் குடும்ப கஷ்டம் நீங்க வழியில்லை சரீரசுகமில்லை பந்துக்களின் உதவியில்லை தொழிலும் விர்த்தியில்லை சில குடிகேடர்களின் சவகாசத்தினால் பலவிதமான இடையூறுகள்நேரும் இந்த கவலைகளெல்லாம் இன்னும் 1-வருடத்திற்கு இருக்கின்றது எண்ணத்திற்கும் இடைஞ்சல் விளையக்கூடும் எதுவும் சற்று தாமதமாகவே நடக்கும் மத்திபம்.

## 4—1—10

*ஒன்றுபட்டிருக்கயோகம் வந்தது அஞ்சிடாதே*
*இன்றுநீ செய்வியாபாரம் இனியோங்கும் நோயும்நீங்கும்*
*நன்றுள செய்திமேற்கில் நலமான லாபமுண்டு*
*கன்றுடன் நிலமும்வாங்க கேணியும் அமைத்தல் நன்றே*

உரை:- 4-1-10 உதயமானதால் உனக்கு இப்பொழுது நல்ல யோக மேற்பட்டிருக்கின்றது தொழில் விர்த்தி தரித்திர நிவர்த்தியும் மேற்குதிசையில் லாபமும் நிலபலமும் கன்றுகாலி கொள்ளவும் கிணறு தோண்டவும் லாபமுண்டாம் நோய் நீங்கும் கோரிய எண்ணம் முடியும் இது உத்தமம்.

## 4—2—1

*நன்றேயாம் நான்கும்ரெண்டும் நலமுடன் ஒன்றும்விழ*
*கன்றேடு மாடும்சேரும் காணியும் பூமியுண்டு*
*இன்றேஉன் னெண்ணங்கூடும் எதிரிகள் அஞ்சுவார்கள்*
*சென்றோரும் மீள்வார்வேண சிறப்புடன் சீருண்டாமே*

உரை:- 4-2-1 உதயமானதால் காணியும் பூமியும் சேரும் மனைகோலவும் வாகனதிகள் கொள்ளவும் விர்த்திகரமாகும் பகையாளிகளும் அஞ்சுவார்கள் திசைமாறினபேர்களும் வசமான லாபத்துடன் வந்துசேருவார்கள் குடும்பத்தில் சீரும் சிரப்பும் பெருகும் கோரிய எண்ணம் கைகூடும் இது உத்தமம்.

## 4—2—2

*சீருள்ள உன்குடும்பம் சிதைந்திட காலமாச்சு*
*யாருக்கும் உந்தன்வார்த்தை அரவம்போல் சிரலாச்சு*
*பாருக்குள் மனைவிமக்கள் பந்துக்கள் பகையுண்டாச்சு*
*ஊருக்குள்உனைவெறுப்பார் உயிர்த்திங்கும் நேரும்பாரே*

உரை:- 4-2-2 உதயமானதால் மனக்கவலை அதிகரிக்கும் நாளுக்குநாள் உன்குடும்பம் க்ஷீணிக்கும் வார்த்தை விஷம்போல் தெரியும் மனைவிமக்களும் வெறுப்பார்கள் பந்துகளில் பகையுண்டு உலகில் உனை பொல்லாதவனென்பார்கள் சதிசெய்யவும் சினேகிதர்கள் நினைப்பார்கள் எண்ணமும் முடியாது மத்திபம்.

## 4—2—3

*நேருமோர் கவலையெல்லாம் நீங்கிடும் பயப்படாதே*
*போருக்கு நின்றபோதும் புகழது உன்னதாகும்*
*பாருக்குள் தனம்கிடைக்கும் பாக்யவானுகதோணும்*
*கோருமோர் குலதெய்வத்தை குறைவின்றி கும்பிடாயே*

உரை:- 4-2-3 உதயமானதால் எவ்விதமான எண்ணமும் இடைஞ்சலின்றி கூடும் கவலை நீங்கும் புகழ் ஏற்படும் பழைய தனம் கிடைக்கும் தனவந்தனெனும் பெயர் சிறக்கும் ஆனல் உன்வீட்டில் மடிந்த குலதெய்வங்களை மறவாமல் வெள்ளிக்கிழமைகளில் பூஜை செய்துவர நாளுக்குநாள் மேன்மையுண்டாகும் இது உத்தமம்.

## 4—2—4

*கும்பிடா குறையினலே குடும்பத்தில் கவலையாச்சு*
*நம்பின பேர்களெல்லாம் நாசமே செய்யலாச்சு*
*வெம்பியே வாடுகின்ருய் வியாபாரம் சுகமில்லாமல்*
*அம்புவி தன்னிலேநீ அறுதிங்கள் பொருத்திடாயே*

உரை:- 4-2-4 உதயமானதாலும் உன் குலதெய்வங்களை பூஜிக்காத தவரினலும் குடும்பக்கவலை யதிகரிக்கும் நம்பினபேர்கள் நாசம் செய்வார்கள் வியாபாரத்திலும் சுகமில்லாமல் மனது வாடுகின்ருய் கோரிக்கை முடியாது ஆனல் ஆறுமாதம் போக கொஞ்சம் நன்மையுண்டாக்கும் மத்திபம்.

## 4—2—5

*பொருத்திடில் புகழ்ஜொலிக்கும் புத்திரப் பேருண்டாகும்*
*கருத்தினில் நினைத்தயெண்ணம் கவலையில்லாமல்கூடும்*
*வருத்தமும் விலகிப்போகும் வந்தநோய் மருந்தால்நீங்கும்*
*திருத்தமாய் தொழிலுமோங்கும் தீதில்லை க்ஷேமமாமே*

உரை:- 4-2-5 உதயமானதால் அஞ்சாதே கொஞ்சம் நாள் பொருத்தால் மனையில் புத்திரப்பேருண்டாகும் மேன்மைதரும் வருத்தம் விலகும் வந்தநோய் மருந்தால் நீங்கும் தொழில் ஓங்கும் க்ஷேமமானது பெருகும் கோரிய எண்ணம் இன்னும் 3-நாளைக்குள் முடியும் இது உத்தமம்.

## 4—2—10

*க்ஷேமமா யிருந்தவாழ்க்கை க்ஷீணித்துமனதை மாற்றும்*
*நேமத்தைக் குலைத்துப்பாரில் நிஷ்டூர னுக்கிவைக்கும்*
*காமத்தால் சேர்ந்தமங்கை கன்னியால் பொருளும்சேதம்*
*தாமதமாக சற்று தயங்காம லிருந்திடாயே*

உரை:- 4-2-10 உதயமானதால் சுகஜீவியாக இருந்த உன் வாழ்க்கை நாளுக்குநாள் க்ஷீணமடையும் மனதை பேதனப்படுத்தும் ஓர் கன்னிகையின் ஆசையால் கணக்கற்ற பொருள் அழியும் எண்ணத்திற்கு இடைஞ்சலுண்டாகும் அஞ்சாதே கொஞ்சநாளை அதிஜாக்கிரதையுடன் கழித்துவர உன்கவலைகள் படிப்படியாக நிவர்த்தியாகும் மத்திபம்,

## 4—3—1

*இருந்திட்ட பொருள்கள்முற்றும் இழந்துநீ தவிக்கலாச்சு*
*குரும்பர்கள் சிலராலுந்தன் குடும்பமே அழியலாச்சு*
*வருமையும் வழக்கும்வம்பும் வந்துன்னை வருத்தலாச்சு*
*திருந்திட பத்துவாரம் திரமுடனகற்றிடாயே*

உரை:- 4-3-1 உதயமானதால் சில குரும்பர்கள் பொருமைப்பட்டு உன்குடும்பத்தையே கெடுக்க உத்தேசிக்கலாம் தவிர கெட்ட கிரகத்தின் கோளாறினால் வறுமை வழக்கு வம்பு கைப்பொருள் விரையமும் அடைந்திருக்கின்றாய் அதனால் மனதும் கலக்கமுற்றிருக்கின்றாய் இருந்தாலும் தைரியத்தை விடாதே இன்னும் 10-வாரம்போக நன்மையுண்டாகும் ஆனால் கோரிய எண்ணம் இப்பொழுது முடியாது மத்திமம்.

## 4—3—2

*அகற்றுவாய் துஷ்டர்நேசம் அனைத்திலும் உனக்கேலாபம்*
*திகட்டாத செல்வத்தோடு தீதின்றி தொழிலுமோங்கும்*
*பகட்டான வாழ்க்கையுண்டாம் பலபேர்களுதவியுண்டாம்*
*மகத்தான சுற்றத்தோடு மக்களை யீன்றிடாயே*

உரை:- 4-3-2 உதயமானதால் எந்த காரியத்திலும் உனக்குதான் ஜெயமுண்டாகும் லாபமும் அடைவாய் வியாபார விர்த்தியும் செல்வச்சிரப்பும் சிரப்பான வாழ்க்கையும் பலபேர்களின் உதவியும் பந்துக்களின் ஒற்றுமையும் புத்திரவுற்பத்தியும் உண்டாகும் ஆனால் துஷ்டர்களின் உறவை அறவே நீக்கு இது உத்தமம்.

## 4—3—3

*ஈன்றிட்ட மாடும்கன்றும் ஈடேரமார்க்கமில்லை*
*தான்கொண்டஎண்ணமெல்லாம் தடைப்படும்கவலையாலே*
*மேன்மையும் அழியும்மக்கள் மனைவியும் உனைவெறுப்பார்*
*ஆன்றோர்கள்பொருளும்போகும் அனைத்துமேபின்னமாமே*

உரை:- 4-3-3 உதயமானதால் எண்ணம் ஈடேராது மாடு கன்று நஷ்டம் பெரியோரின் பொருள்விரையம் தனது கௌரவத்திற்கே பின்னமேற்படும் மனைவிமக்களையும் விட்டுப்பிரிவாய்

அலேச்சல் திரிச்சலேற்படும் வந்தநோய் சந்தேகத்திற்கு இடங் கொடுக்கும் ஆனுல் இந்த மாதம்போக சுகமுண்டு மத்திபம்.

## 4—3—4

பின்னமு மேற்படாது பலகலேவிர்த்தியாகும்
மன்னன்போல் வாழலாகும் மாநோயும் மருந்தால்நீங்கும்
கன்னிகை உறவினுலே கனத்தசெல்வாக்குமோங்கும்
அன்புடன் கூடிச்செய்யும் அருந்தொழில் விருத்தியாமே

உரை:— 4–3–4 உதயமானதால் எக்காரியத்திலும் உனக்கு ஒருவிதமான தடங்களும் ஏற்படாது எவ்வித தொழிலே கற்ருலும் மேலுக்குமேல் ஓங்கும் நோய்நீங்கும் புதிதாக சிலநாளில் ஓர் கன்னிகையின் உறவு கூடும் அன்னவளால் அனேக செல்வச் சிரப்புண்டாகி அரசனேப்போல் வாழ்வாய் ஒருவருடன் கூடிச்செய்யும் வியாபாரத்தில் ஒற்றுமையும் லாபகரமும் உண்டாம் உத்தமம்.

## 4—3—5

விருத்தியில்லா குடும்பம் விருதாவில் க்ஷீணமாச்சு
கருத்தினில் நிணேத்ததெல்லாம் கவலேயே கைமேலாச்சு
பொருத்தமில்லாததாரம் போராட்டம் அதிகமாச்சு
மருத்துனே வஞ்சிப்பார்கள் மாராட்டம் கொண்டிடாதே

உரை:— 4–3–5 உதயமானதால் உன் எண்ணத்தில் நிணேத்ததெல்லாம் கவலேயாகவே முடியும் தவிர இதுவரையில் உனது பெயருக்கு பொருத்தமில்லாத மனேவியை மணர்ந்ததாலும் உன் கெட்ட கிரகத்தினுலும் சுமார் 7-வருடங்களாக கஷ்ட நஷ்டங்களுடன் உன் குடும்பமே க்ஷீணித்து வருகின்றது அதிலும் சிலர் உனே வஞ்சிக்கவும் நிணேப்பார்கள் எவ்வித கஷ்டங்கள் வரினும் தைரியத்தை விடாதே மத்திபம்.

## 4—3—10

கொண்டதோர் கவலேபோகும் குடும்பத்தில் வதுவையாகும்
மண்டலம் மதிக்கலாகும் மருந்தினுல் மாநோய் நீங்கும்
உண்டுகாண் தொழிலில்லாபம் உரைசொல்லு முறுதியாகும்
அண்டினேர்க் குதவிநேரும் ஆயுளின் அமைப்புண்டாமே

உரை:- 4-3-10 உதயமானதால் உன்மனதிலுள்ள கவலை கள் விலகும் சுபகாரியம் நடக்கும் யாரும் மதிக்கத்தக்க வாழ்கை யுண்டாகும் நோய் நீங்கும் வியாபாரத்தில் அளவற்ற லாபததை யும் வாய்மொழி வுறுதியும் வாஞ்சையும் அண்டினோரை ஆதரிக்கும் அமைப்பும் காரியத்தில் ஜெயமும் உண்டாம்.

## 4—4—1

*அமைப்புடன் ஆஸ்திசேரும் அதிகாரத் தொழிலுண்டாகும்*
*இமையிலே இடருந்தீரும் எண்ணமும் கைமேல்கூடும்*
*தமையரும் தம்பிசுற்றம் தழைத்திட செல்வாக்குண்டாம்*
*உமையவள் நாதன்வாக்கு ஓரனுவும் பிசகிடாதே*

உரை:- 4-4-1 ஆருடமானதால் அமைப்பான அந்தஸ்தும் ஆஸ்தி பூஸ்தியின் சிறப்பும் அரசாங்க அதிகாரத்தொழிலில் அரும் படியான பாக்கியமும் எத்தகைய சங்கடங்களும் நீங்கலும் அண் ணன் தம்பிகளின் ஆதரவும் அனுகூலமான லாபங்களும் யாருக் கும் அஞ்சாத ஆண்மையும் காரியத்தில் ஜெயமும் உண்டாம் உத்தமம்.

## 4—4—2

*பிசகான காரியத்தை பேசிடிலிடருண்டாகும்*
*வசமான தொழிலும்போகும் வஞ்சியர் கலகத்தாலே*
*நிசமாக பேசினாலும் நீசில முனைபழிக்கும்*
*திசைவிட்டும் மாறச்செய்யும் தீதுக ளதிகமாமே*

உரை:- 4-4-2 ஆருடமானதால் எதைப்பற்றி பேசிடினும் இடருண்டாகும் ஓர் கன்னிகையின் கலகத்தாலோ சூழ்ச்சியாலோ கனத்த தொழில்முறையும் போகும் நீஉண்மையைப் பேசினாலும் உலகம் உனை உதாசனிக்கும் குடும்பத்தின் கவலையால் பரதேசி யாய்ப் போகவும் மனம்கொடுக்கும் மற்றும்பல மனக்கசிவுகளு முண்டாகும் இது மத்திபம்.

## 4—4—3

*அதிகமாய் குணமுண்டாகும் ஆண்டவன் செயலுண்டாகும்*
*மதியுள்ளோர்சினேகம்கூடும் மனையுடன்புதையல்கிட்டும்*

*சதிபதி பிரிந்திடாத சந்தோஷ வாழ்க்கையுண்டாம்*
*பதினன்கு நாட்கள் சென்ருல் பாலகி தோன்றுவாளே*

உரை:– 4–4–3 உதயமானதால் உனை குணத்தில் மிகுந்த குபேந்திரனெனவும் கூறலாம் உனக்குகடவுள் சகாயமுண்டு இது வரையில் சிலநாள் கவலைகளை யடைந்திருந்தாலும் இனி மகிழ்ச்சி யுண்டாகும் நல்ல சினேகமும் நானுவித தொழில் விர்த்தியும் சொந்தமான வீடு கிடைத்தலும் அதிர்ஷ்ட வசமான பொருளும் கிட்டும் சதிபதிகள் பிரியாத வாழ்க்கையும் மனையில் பெண் குழந் தையும் பிறக்கும் உத்தமம்.

## 4—4—4

*தோன்ற மும்முறையும் நான்கு துடர்புடன் விழுந்ததாலே*
*சான்ரோர்கள் பகையுமாவார் சகலமும் நஷ்டமாகும்*
*ஆன்ரோர்கள் சாபம்நேரும் ஆபத்து மிகவுண்டாகும்*
*ஈன்ரோர்க்கும் இடரேசெய்ய இடந்தரும் கிரகந்தானே*

உரை:– 4–4–4 ஆருடமானதால் தன்னைச் சேர்ந்தோரும் சினேகிதரும் பகையாவதுடன் பலஇடர்களையும் விளைவிப்பார்கள் பல நஷ்டம் பெரியோர்களின் கோபத்திற் குள்ளாகவும் பெற்ரோர் களுக்கு ஆபத்து விளைவிக்கவும் மனங்கொடுக்கும் வியாகூல மான ஆபத்துகளையும் தரும் காரியம் பின்னமாம் மத்திபம்.

## 4—4—5

*கிரகங்கள் நல்லதாச்சு கியாதியு முனக்குண்டாச்சு*
*சிரமத்தையளித்தநோயும் சிகிச்சையில் சுகமுண்டாகும்*
*பரத்தைய ருறவும்போகும் பலவித தொழிலுண்டாகும்*
*உரத்தமாய் ஒருவருக்கு உரைத்தது உருதியாமே*

உரை:– 4–4–5 உதயமானதால் உலகில் உனை நல்லவனென புகழ்வார்கள் நோய் நீங்கும் பல காதல் மங்கைகளின் உறவும் அறவே ஒழியும் தொழில் விர்த்தியும் வாய்ச்சாதுர்யமும் வல்லமை யும் வாய்மொழி உருதியும் உன்கிரக நன்மையால் காரியசித்தியும் கலகநிவர்த்தியும் உண்டாம் இது உத்தமம்.

## 4—4—10

*உருதியே கொண்டயெண்ணம் ஓட்டாண்டியாக்குமப்பா*
*கருதிய கருமங்கூடா கைப்பொருள் விறையமாகும்*
*திருதிய குமாரனுலே தீங்குண்டு குடும்பத்திற்கே*
*பருதியுமெட்டில்நின்ருன்பகைப்புடன்திகைப்புண்டாமே*

உரை:– 4–4–10 உதயமாகியதாலும் சூரியன் எட்டாவது வீட்டில் அமர்ந்திருப்பதாலும் எண்ணிய எண்ணத்திற்கு இடையூறு ஏற்படும் கைப்பொருள் விறையமாக்கும் 'உள்ளபொருளுமழிந்து ஓட்டாண்டியாக்கும் உனது 3-வது குமாரனுல் சில சினேகிதசச்சரவும் சங்கடமும் சம்பவிக்கும் மத்திபம்.

## 4—5—1

*திகைப்புடன் பழிப்புநேரும் திசைதப்பி திக்குமாற்றும்*
*பகைப்பவர்தன்னைக்காண பதுங்கியே ஒடுங்கச்செய்யும்*
*வகையின்றி பொருளைத்தந்து வாதுசூதாக்கிவைக்கும்*
*நகைத்திட உடலெடுத்து நாட்டினில் திரிகுவாயே*

உரை:– 4–5–1 உதயமானதால் திடீரென திகைப்பும் உலகப்பழிப்பும் திசைப்போகவும் நேரிடும் பகைவர்களுக்கு அஞ்சும்படியுமிருக்கும் உன்னுடைய பொருளே உன்னை விரோதியாக்கி அதனுல் வாதுசூது ஏற்படும் பலபேர் வசைபேச பெயரெடுப்பாய் எண்ணிய எண்ணமும் முடியாது இது மத்திபம்.

## 4—5—2

*திரிபுரமெரித்தநாதன் தெரிவித்த ஆரூடத்தை*
*மரித்தவரொருவரில்லை மகிழ்வுடன் நினைத்ததெல்லாம்*
*உரித்தமாய் வந்துகூடும் உடன்பிறந்தோரால் நன்மை*
*பரிசுத்தமா யுனக்கு பலகலை சிறக்குமன்றே*

உரை:– 4–5–2 உதயமானதால் மனதில் நினைத்த எண்ணம் முடியும் சகோதரர்களின் ஒற்றுமையும் உதவியும் சகலபிணி நீங்கலும் பாலர்களுக்கு ஞானம்கல்வி மேலோங்கலும் ஏற்படும் இது பஞ்சமூர்த்தியின் ஆரூடமானதால் இதை நம்பிய பேர்களுக்கு பலகலைகளும் சிறக்கு மென்பதாம் இது உத்தமம்.

A 864
N57

## 4—5—3

*சிறப்பது அழிவதற்கு ஜென்மத்தில் சனியும்நின்றுன்*
*பிறப்பது பெண்குழந்தை பிசருண்டு அதனுல்கஷ்டம்*
*உரைத்துட னிருந்தபேரும் உந்தனை தூஷிப்பார்கள்*
*திறத்துடன் செய்வியாபாரம் க்ஷீணிக்கும் நஷ்டந்தானே*

உரை:- 4-5-3 உதயமானதால் உன் குடும்பச்செழிப்பும் உனது மதிப்பும் கெட்டுபோகும் தவிர உனக்கு ஜென்மத்தில் சனியிருப்பதால் இப்பொழுது மனையில் தரித்திருப்பது பெண் குழந்தை அந்தக் குழந்தையினுல் சிலதுகாலம் கஷ்டப்பட நேரி டும் பந்துக்களுக்கும் விரோதியாவாய் தொழிலும் க்ஷீணிக்கும் இது மத்திபம்.

## 4—5—4

*நஷ்டமு மில்லையப்பா நன்மார்க்க மதிகமுண்டு*
*கஷ்டங்க ளனைத்தும் தீர்ந்து கனதன செல்வமோங்கும்*
*இஷ்டர்களுதவியுண்டு இனந்தனில் விவாகம்கூடும்*
*அஷ்டலக்ஷிமி கடாக்ஷம் ஆதரவளிக்கும் காணே*

உரை:- 4-5-4 உதயமானதால் எத்தொழிலைச் செய்யினும் நஷ்டமேற்படாது நன்மார்க்கமுள்ள சினேகிதர்களின் சவகாச முண்டாகும் குடும்ப கஷ்டங்கள் தீரும் செல்வமோங்கும் சினே கித உதவியும் சொந்தத்தில் விவாகம் கூடலும் நோய்நீங்கலும் அஷ்ட லக்ஷிமியின் கடாக்ஷமும் அநுகூலமான காரியசித்தியும் உண்டாகும் உத்தமம்.

## 4—5—5

*அளிக்குமே துயரந்தன்னை அபவாதபெயரளிக்கும்*
*களிக்கவே யிருந்தசெல்வம் கரைந்திடும் பனிநீர்போலே*
*துளிர்த்திட மார்க்கமில்லை துணையுனக்கொருவரில்லை*
*ஒளிந்திடமனங்கொடுக்கும் உண்டப்பா தொல்லைதானே*

உரை:- 4-5-5 உதயமானதால் அளவிலாத துயரத்தைத் தரும் கெடுதலான பெயரெடுக்கும் குறையாத செல்வமிருப்பினும் பனிநீர்போல கறைந்துபோம் கடன்காரர் தொல்லையால் தீமைமறை

102324

வாகத்திரியச்செய்யும் இப்போது உனக்கு நல்லகாலமில்லை பந்துகளின் துணையுமில்லை விர்த்தியடைய வேலையில்லை ஆனால் நாளுக்குநாள்தான் நன்மை யுண்டாகும் இது மத்திபம்.

## 4—5—10

*தொல்லைகள் விலகிப்போகும் தோகையின் சகாயத்தாலே*
*பல்லவர் சினேகம்கூடும் பகைவரும் நடுங்குவார்கள்*
*அல்லலை யளிக்கவந்த அரும்பிணி யகன்றுபோகும்*
*இல்லைகா ணிடருனக்கு ஈரைந்தில் புதன்நின்றானே*

உரை:- 4–5–10 உதயமானதாலும் பத்தாவதுவீட்டில் புதன் அமர்ந்திருப்பதாலும் உன்குடும்பத் தொல்லைகளும் கொடுக்கல் வாங்கலின் வம்புவழக்குகளும் விலகும் ஒரு கன்னியால் சகாயமுண்டு பலபேர்களின் சினேகம் கூடும் பகைவர்கள் அஞ்சுதலும் நோய்விலகலும் உண்டாகும் காரியம் ஜெயமாகும் உத்தமம்.

## 4—10—1

*நின்றானே ஆறில்ராகு நிதானித்து எதையும் செய்வாய்*
*ஒன்றாலும் குறைவராது உனக்கொரு நஷ்டமில்லை*
*கன்றோடு காலிசேரும் கனத்ததோர் தொழிலுமுண்டாகும்*
*இன்றோடு உனைதுடர்ந்த இடரெலா மொழிந்துபோமே*

உரை:- 4–10–1 உதயமாகியதாலும் ஆறாமிடத்தில் ராகு அமர்ந்ததாலும் நல்ல அதிர்ஷ்ட வசங்களுண்டு ஆனால் எதையும் நிதானித்துச் செய்யவேண்டும் நஷ்டமேற்படாது மாடுமனை கொள்ளலாம் நல்லதொழில் கிடைக்கும் ஒரு குறைவில்லாமல் வாழ்வாய் இது உத்தமம்.

## 4—10—2

*ஒழிந்தது துயரமென்று உன்மனம் பூரிக்காதே*
*கழிந்திட எட்டுவாரம் கருத்தினி கவலைநீங்கும்*
*அழிந்திடும் பொருளிப்போது ஆபத்தில் சிக்கவைக்கும்*
*கொழிந்திடும் மனதுமாறும் கோபத்தால் கவலைதானே*

உரை:- 4–10–2 உதயமானதால் இப்பொழுது உனக்கு கொஞ்சம் கெட்டகாலம் தான் ஆதலால் துயரமெல்லாம் ஒழிந்தது

என்று எண்ணுதே கைப்பொருள் விரையப்படும் ஆபத்தில் அகப் படச்செய்யும் பழைய குணம் மாறும் கோபத்தால் கொடுமை விளை விக்கும் இருந்தாலும் எட்டுவாரம் கழிய சுகமுண்டு மத்திபம்.

## 4—10—3

*கவலேயும் விலகிப்போகும் கனதனம் மிகவுண்டாகும்*
*அவலமாய் போனயெண்ணம் அன்னியராலே கூடும்*
*குவலயத்தில் நீசெய்யும் குணத்தொழில் மிகவுமோங்கும்*
*எவைதனைத் தொட்டபோதும் இணையிலா தங்கமாமே*

உரை:- 4–10–3 உதயமானதால் உன்கவலைகள் விலகும் படி தனம் பெருகும் கினவிலும் கூடாதென்று நினைத்த யெண் ணம் அடுத்த மனிதர்களால் கூடும் தொழில்விர்த்தியும் மண்ணைத் தொட்டாலும் பொன்னுகமாறும் எத்தகைய காரியமும் இடையூறு ஏற்படாது வடமேற்கு திசையிலிருந்து நன்மையான சங்கதிவரும் இது உத்தமம்.

## 4—10—4

*தங்கமாம் பொருள்களெல்லாம் தவிட்டுக்கு மாறலாகும்*
*பங்கமே மிகவும்நேரும் பாவையால் விரையமாகும்*
*அங்கத்தில் பழுதுண்டாகும் அதிகார நிந்தைநேரும்*
*துங்கமாய் நவக்கிரத்தை துதித்திட தனியலாமே*

உரை:- 4–10–4 உதயமானதால் உனது தரித்திர திசை யானது தங்கத்தையும் தவிட்டுக்கு மாற்றச்செய்யும் புதிய ஓர் பெண்ணினுல் பொருள் விரையமும் பலவித அவமானங்களும் தொழிலில் அதிகாரம் தவருதலும் தேகத்தில் பிணி துடருதலும் உண்டாகும் ஆனுல் நவக்கிரகத்தை ஒன்பது நாளைக்கு பூஜை செய்துவர நாளுக்குநாள் உனது தரித்திரதிசை தணியும் கோரிய எண்ணம் இப்பொழுது முடியாது இது மத்திபம்.

## 4—10—5

*தணிந்திடும் துன்பமெல்லாம் தற்பரனருளாலப்பா*
*துணிந்துநீஎதைச்செய்தாலும் ஜெயமதுவடைவாயப்பா*
*இனிமீதுன் வாழ்க்கையெல்லாம் இன்பத்தில் சேர்க்கையாகும்*
*மணிபோன்ற புத்ரராலே மகிழ்வுற்று வாழலாமே*

உரை:- 4-10-5 ஆரூடமானதால் இனி உனது கஷ்டங்களெல்லாம் நாளுக்குநாள் குறையும் எதிலும் ஜெயமுண்டு சதிபதியும் சஞ்சலமுமில்லாத வாழ்க்கை நடத்துவார்கள் புத்தியிற்சிறந்த புத்திரர்கள் உற்பவிப்பார்கள் அம்மைந்தர்களால் மனமகிழ்வும் குடும்பவிர்த்தியும் ஏற்படும் எண்ணமும் கூடும் உத்தமம்.

## 4—10—10

*ஆமென நான்கும்பத்தும் அடுத்ததும் பத்தும் வீழ்ந்தால்*
*தாமதமாகுமெண்ணம் தாள்செய்யும்தொழிலும்நஷ்டம்*
*க்ஷேமத்தை கெடுத்துவைக்கும் சினேகிதர் பகையுண்டாகும்*
*குடும்பத்தை மறக்கச்செய்யும் நியாயமும் தவரும்பாரே*

உரை:- 4-10-10 விழவும் தான் எண்ணிய எண்ணம் தாமதமும் தடமாட்டமாகத் தானிருக்கும் 'வியாபாரத்தில் வீண்வம்புகள் நஷ்டம் செல்வாக்கு குறையும் சினேகிதநிந்தை விரோதம் நியாயத்தையும் தரும் இன்னும்பல இடையூறுகளையும் ஏற்படுத்தும் மனதில் சதா கவலையே குடிகொண்டிருக்கும் ஆனல் சிலநாள் போகவேண்டும் இது மத்திபம்.

## 5—1—1

*தவராக எண்ணிடாதே தற்பரன் சகாயமுண்டு*
*எவராலும் முடிந்திடாது எதிர்த்துனை பகைக்கவப்பா*
*அவதூராய்நினைத்தோர்மாய்வார்அதிகாரத்தொழில்கிடைக்கும்*
*நவநாயகர்கள் தன்னை நம்பிநீ தொழுதிடாயே*

உரை:- 5-1-1 உதயமானதால் எதிரில்லாத வாழ்க்கையும் இறைவனின் சகாயமும் உனக்காக புரம்பேசுவோர்க்கு பொல்லாங்கும் அதிகாரமான அரசாங்கச் சேர்க்கையான தொழிலும் கிடைக்கும் அதனல் உனக்கு கௌரவமும் மேன்மையும் அதிர்ஷ்டவசமான அம்சங்களும் ஏற்படும் எண்ணிய எண்ணமும் முடியும் ஒருவிதமான இடைஞ்சலுமில்லை இது உத்தமம்.

## 5—1—2

*தொழுதாலும் பயன்படாது தொல்லைகளுனைவிடாது*
*அழுதாலும் குறைதீராது யாதொன்றும் கைகூடாது*

*பழுதாகும் எடுத்தவேலை பகையாகும் நேசராலே*
*கழுகாகும் நோயாம்கெண்டம் கஷ்டமுமிதமாகாதே*

உரை:– 5–1–2 விழவும் எக்காரியத்திலும் இக்கட்டுகளே சம்பவிக்கும் பலநாட்களாக வருத்தும் கவலைகள் இன்னும் சில காலம் இருந்தே தீரும். அதனால் கவலைபட்டும் சுகமில்லை ஆரம்பித்த தொழிலில் அனேக இடையூரு நஷ்டம் அடுத்தவர்களின் விரோதம் காட்டும் ரோகத்தினால் மனம்நோகும் எந்த எண்ணமும் இன்னலாகவே தான் முடியும் இது மத்திபம்.

## 5—1—3

*மிதமிலா அதிர்ஷ்டமுண்டு மூன்றிலே செவ்வாய்நின்றான்*
*அதமமாய் நடந்தபோதும் அடைகுவாய் மிகவேலாபம்*
*விதவித பூஷணங்கள் விகசித உடைகள்சேரும்.*
*குதற்கமின்றி குடும்பம் கொழித்திடும் குணமிதாமே*

உரை:– 5–1–3 உதயமானதாலும் அங்காரகன் மூன்றுமிடத்தில் அமர்ந்திருப்பதால் நல்ல அதிர்ஷ்டவசமான லாபங்களுண்டாம் எவ்விதமான இடைஞ்சலான காரியத்தில் பிரவேசித்தாலும் லாபமே கிடைக்கும் பொன்பூஷண ஆடையாபரணச் சிரப்பும் குடும்பத்தில் குழப்பமில்லாது செழிப்பும் அமையும் கோரிய எண்ணமும் ஜெயமடையும் இது உத்தமம்.

## 5—1—4

*குணமாக பேசியுந்தன் தனமதை கொள்ளைகொள்வார்*
*மணங்கூடிதட்டிப்போகும் மணர்ந்தாலும்இடையூருண்டு*
*திணரிப்போம் சிலவினங்கள் சம்சார தொல்லையாக்கும்*
*கணத்தினில் பிரிவுண்டாகும் கருத்ததை மாற்றும்பாரே*

உரை:– 5–1–4 உதயமானதால் உன் தரித்திர திசையே எக்காரியத்திலும் தடமாட்டமாக முடியும் சில மோசக்காரர்கள் நயமாகபேசி உன்னிடமுள்ள பொருள்களை அபகரிப்பார்கள் கூடிய விவாகம் தடைப்படும் அப்படி விவாகம் நடந்தாலும் அதனால் பல இடர் சம்பவிக்கும் அளவிலாத சிலவுகள் ஏற்படும் சம்சாரத் தொல்லை சஞ்சலமாக முடியும் புத்திகலையும் குடும்பத்தில் பிரிவு ஏற்படும் இது மத்திபம்.

## 5—1—5

மாற்றிடும் துன்பந்தன்னை மன்னன்போல் வாழவைக்கும்
சாற்றிடும் குற்றமெல்லாம் சமாளிக்க வழியுண்டாகும்
தூற்றுவோர் உறவுநீங்கும் துலைதூரம் செய்திதோன்றும்
போற்றியே பெரியோர்தன்னை புகழ்மிக பெருகுவாயே

உரை:- 5–1–5 உதயமானதால் எத்தகைய கவலைகளையும் மாற்றிவைக்கும் குற்றங்களெதுவாயினும் தப்புவிக்க வழியுண்டாகும் உனைக்காட்டிக் கொடுக்கும் கயவர்கள் கூட்டம் விலகும் வெளியூர் சங்கதியினால் வேண்டிய சந்தோஷமும் லாபமும் உண்டாகும் ஆனால் புத்தியுள்ள பெரியோர்களை பணிந்து அவர்களின் ஆசிபெற்று வாழ்வாய் எண்ணமும் முடியும் இது உத்தமம்.

## 5—1—10

பெருகுமே கவலைமெத்த பேய்பிடித் தாட்டிவைக்கும்
சிறுமையால் சினமுண்டாகும் சீரதுகுலைத்துவைக்கும்
வருகுவார் பகைவர்கூட்டம் வகைமோசம் நேரலாகும்
திருவது அழியலாகும் திருடன்போல் பதுங்குவாயே

உரை:- 5–1–10 உதயமானதால் மிகக்கவலை பேய் பிசாசு தொடர்பும் கூட கொஞ்சநாளில் ஏற்படும் பொல்லாத கிரகத்தினால் போக்கிரிகளின் சவகாசமும் கோபாக்கினையும் அதனால் சில சங்கடங்களும் நேரும் அழகு குன்றும் தேகமினைக்கும் திருட்டுப் பார்வையாக்கும் திசைதப்பி பல இடங்களில் மாற்றும் எண்ணமும் இடஞ்சலாகும் மத்திபம்.

## 5—2—1

பதுங்கினும் உனைவிடாது பகையாளி கூட்டமப்பா
பொதுவாக நடந்திட்டாலும் பொறுமை யதிகமாகும்
வதுவையும் செய்தபெண்டீர் வாதுக்கு உனையிழுப்பாள்
எதுவந்த போதிலும்நீ இறைவனை மறந்திடாதே

உரை:- 5–2–1 உதயமானதால் பகையாளிக்குப் பயந்து ஒளிந்தாலும் உன்கெட்டகிரகம் உனைக்காட்டியே கொடுக்கும் யாருக்கும் பொதுவாக நடந்துக்கொண்டாலும் உன்மீது பொறுமை

பேசுவார்கள் கலியாண காரியமும் தடங்கலாகும் சிலகாலம்சென்று மணம் கூடினாலும் மணமகளினால் வியாஜியம் நடக்கும் இருந்தாலும் ஏதுவாயினும் அஞ்சாதே கோரிய காரியமும் தடங்கலாகும் மத்திபம்.

## 5—2—2

*மறக்காதே தெய்வந்தன்னை மண்மீது புண்யமுண்டு*
*சிறப்பான வாழ்க்கையுண்டு சினேகித சகாயமுண்டு*
*உறமான நோயும்நீங்கும் வியாபாரம் வலுத்தமாகும்*
*சுறப்பாகும் கேணிதோண்ட சுதனாலே வியாதியாமே*

உரை:– 5–2–2 உதயமானதால் நீ கோரிய எண்ணம் முடிவதுடன் கொடுக்கல் வாங்கலில் லாபமுண்டாகும் வியாபாரம் வலுத்தமாகும் சினேகித சகாயமுண்டு சீரழித்தநோயும் மருந்தால் நீங்கும் மாடுமனை கொள்ளவும் கிணறு தோண்டவும் விர்த்திகரமாகும் புத்திரர்களால் பெருமையுண்டாகும் சுகஜீவியாக வாழ்வாய் இருந்தாலும் தெய்வத்தை மறவாதே இது உத்தமம்.

## 5—2—3

*வியாதியை யழிப்பதற்கு குருவுனக் காரில்நின்றுன்*
*நியாயமும் தவரிப்போகும் நிஷ்டூர மாக்கிவைக்கும்*
*வியாதியு மணுகலாகும் வீண்சில வதிகமாகும்*
*வாயார உரைத்தவாக்கால் வம்புகள் மிகவுண்டாமே*

உரை:– 5–2–3 உதயமானதால் குடும்பத்திலே பலவித வம்புவழக்குகளை யுண்டாக்கும் நல்லபெயர் கெடும் நியாயம் தவரும் நிஷ்டூரமான பெயரமையும் நோய்நொடிக்கு மாளாக்கும் வீண் விபரீதமான சிலவினங்களும் பலவிதமான கவலைகளும் பகைவர்களின் பயங்கரமான வாழ்க்கையும் பலபொருள் நஷ்டமும் காரிய பின்னமுமாகும் மத்திபம்.

## 5—2—4

*மிகமிக நன்மையுண்டு மிதமிலா செல்வாக்குண்டு*
*அகமது களிப்புமுண்டு அடுத்தவர் உதவியுண்டு*

*நிகழுமோர் மணமுமுண்டு நியாயத்தில் ஜெயமுமுண்டு*
*சுகமது பெருகும்ரெண்டு வருஷமே யதிர்ஷ்டமுண்டாம்*

உரை:- 5-2-4 உதயமானதால் சிலநாளில் அளவிலாத செல்வாக்கும் அதிர்ஷ்டவசமான வாழ்க்கையும் ஆனந்தமான மணமும் அடுத்தபேர்களின் உதவியும் உண்டாம் தவிர மனையில் சுபகாரியம் நடக்கும் வியாஜ்யத்தில் உன்பக்கமே ஜெயமும் சுகமான தேகசௌக்கியமும் உண்டாகும் இந்த ராசி இரண்டு வருஷத்திற்கு குறையாமலிருக்கும் அதுவரையில் எந்தகாரியமும் ஜெயமாகும் இது உத்தமம்

## 5—2—5

*அதிர்ஷ்டமா யிருந்தவாழ்க்கை அடக்கமு மொடுக்கமாச்சு*
*கொதித்திடபேசுவார்கள் கொடுத்ததை கேட்பாயானல்*
*சதிசெய்ய நோயுண்டாகும் சகலமும் நஷ்டமாகும்*
*பதினெட்டு வாரம்போக பலனது கொஞ்சமாமே*

உரை:- 5-2-5 உதயமானதால் அஷ்டலக்ஷிமிகளும் தாண்டவமாடிய உன் குடும்பம் மிகவும் க்ஷீணதிசையடைய காலம் நேரிட்டது பொருளை கொடுக்கவோ வாங்கவோ வம்புவழக்குகளும் கொடுத்ததைக் கேட்டால் விரோதமும் நோயின் கவலையும் பல பொருள் விரையமும் காரியபங்கமும் உண்டாகும் இந்த கவலைகள் விலக 18-வாரம் போகவேண்டும் இது மத்திபம்.

## 5—2—10

*கொஞ்சநாள் போனபின்பு குடும்பமே செழித்துஓங்கும்*
*பஞ்சையாயிருந்தநீயும் பணக்காரனெனப் பேராகும்*
*சஞ்சலமொழியலாகும் சாதித்த எண்ணம்கூடும்*
*வஞ்சிக்கநினைத்தமூடர் வகைகெட்டு மாய்குவாரே*

உரை:- 5-2-10 உதயமானதால் சிலகாலத்திற்குள் உன் குடும்பம் மேன்மையான அந்தஸ்தில் அமைதியாகும் செல்வத்திற் சிறந்த சீமானகத் தோனுவாய் குடும்ப சஞ்சலங்கள் விலகும் உனை வஞ்சிக்க எண்ணிய வம்பர்கள் கெட்டழிவார்கள் சாதித்த எண்ணமும் தடங்களின்றி கூடும் இது உத்தமம்

## 5—3—1

*மாயமாய் வந்தநோயும் மாறகம் செய்திடாது*
*உபாயமாய்நடந்துக்கொண்டால்வேண்டியலாபங்கிட்டும்*
*நேயமாய் நல்லசெய்தி நெடுந்தூர மிருந்துதோன்றும்*
*வியாபாரம் வலுத்தமாகும் வியாகூலம் ஏற்படாதே*

உரை:- 5-3-1 உதயமானதால் எத்தகைய கவலையாய் இருந்தாலும் சூரியனைக்கண்ட இருள்போல் விலகும் எத்தகைய நோய் நொடியாயினும் குடும்பத்தில் யாரையும் மாறகம் செய்யாது தொழில் முகாந்திரத்திலும் கொடுக்கல் வாங்கலிலும் வேண்டிய லாபமுண்டு வெளிநாட்டிலிருந்து சந்தோஷகரமான சங்கதி கேள்விப்படலாகும் எந்த வழியிலும் ஒருவிதமான துயரமும் ஏற்படாது உத்தமம்.

## 5—3—2

*ஏற்பட்ட கவலையாலே இடர்மிக சம்பவிக்கும்*
*தோற்றமும் மழுங்கலாகும் துயரான நோயுண்டாகும்*
*ஆற்றலை அமைதியாக்கும் ஆத்திரத்தாலே நஷ்டம்*
*நாற்பதுநாட்குபின்னே நன்மையுண் டென்னலாமே*

உரை:- 5-3-2 உதயமானதால் தற்போது உன் குடும்பத்திலே ஏற்பட்டிருக்கும் கவலையால் மிதமில்லாத கஷ்டத்தையும் கண்பார்வைமங்களும் துயரமானநோயும் எவ்விதமான அவசரமான காரியத்தையும் அடியோடு ஒழித்துக்கட்டவேண்டி நேரிடும் ஆனல் நாற்பதுநாள் போக நாளுக்குநாள் நன்மையுண்டாகும் இது மத்திபம்.

## 5—3—3

*என்னதான் இடர்வந்தாலும் எளிதிலேநீங்குமப்பா*
*உன்னதமொழிலும்செய்வாய்உனக்கொருவர்உதவியாவார்*
*தன்னல மதிகமாகும் தானிய விளைவுண்டாகும்*
*இன்னலில்லாமல் எண்ணம் இகத்திலீடேறும்பாரே*

உரை:- 5-3-3 உதயமானதாலும் உன்கிரகங்களின் நன்மையாலும் எவ்வளவு இடர்வந்தாலும் சுலபத்திலே நீங்கி சுகம்பெருவாய் உலகில்யாரும் செய்யாத தொழில் செய்ய நேரிடும் ஒரு

பெரியமனிதரால் உதவியேற்படும் தனக்குதானே திடகாத்திரனுக வாழ்வாய் பூமிவளையும் எண்ணிய எண்ணமும் ஈடேரும் உத்தமம்

## 5—3—4

*ஈடேரமார்க்கமில்லை எட்டிலே ரவியும் நின்ருன்*
*நாடோர்க்கும் பகைவனுக்கும் நல்லவருறவுநீங்கும்*
*காடேகிபதுங்கச் செய்யும் கனதொழில் நஷ்டமாகும்*
*மாடோடு கன்றும்சாரும் மனைவியும் வெறுப்பாளன்ரே*

உரை:– 5–3–4 உதயமானதாலும் எட்டாவது வீட்டில் ரவி யானவன் அமர்ந்திருப்பதாலும் எதைச்செய்தாலும் நீ ஈடேறுவ தற்கு வழிகிடையாது கனமான தொழிலாயினும் குணமானது நீங்கி கஷ்டமேற்படும் கடன்காரர்கள் தொல்லையால் காட்டிற்குள் கள்ளன்போல் பதுங்கும்படி இருக்கும் மாடுகன்று நஷ்டம் மனைவி மக்களின் மனவியாகூலம் முதலியன உண்டாம் இது மத்திபம்.

## 5—3—5

*வெறுத்துமே ஏகினேரும் வருகுவார் லாபத்தோடு*
*கருத்ததோர் மனிதனலே களவது வெளியதாகும்*
*திருத்தமும் அதிகமாகும் சேயர்க்கு நலியும்நீங்கும்*
*ஒருத்தர்க்கு மெதிரில்லாத உத்தமனுகுவாயே*

உரை:– 5–3–5 உதயமானதால் குடும்பத்தை வெறுத்து வெளிதாண்டியபேர்களும் விரைவில் லாபத்துடன் வந்து சேரு வார்கள் சிலநாளைக்குமுன் களவுபோன பொருளாயினும் ஓர் கருத்த மனிதனுல் தன்னையு மறியாமல் மர்மம் வெளியாகும் குடும் பம் சீர்த்திருத்தமாக இருக்கும் மனையில் மைந்தர்களுக்கு தோஷம் பிணி நீங்கும் எதிரில்லாத இன்பத்தை யுண்டாக்கும் எண்ணிய எண்ணமும் முடியும் உத்தமம்.

## 5—3—10

*உத்தமனென்றபேச்சு உறுதியு மொழியலாச்சு*
*சத்தியம் மாறலாச்சு சினத்தினர் சதிக்குள்ளாச்சு*
*சித்தமும் கலங்கலாச்சு செய்தொழில் நஷ்டமாச்சு*
*மொத்தமும் அழியலாச்சு மூடர்களுறவுண்டாச்சே*

உரை:– 5–3–10 உதயமானதால் இதுவரை நீயடைந்த நல்ல பெயரானது அழிந்து உனது வார்த்தையின் உறுதியும் ஒழியும் வாக்கு உண்மை நீங்கும் பகையாளிகளின் கொடுமைகளும் உண்டாகும் செய்தொழில் நஷ்டமும் அதனுல் மனக்கலக்கமும் தன் கைப்பொருள் பலவழியில் நஷ்டமும் புத்தியீனர்களின் உறவும் அதனுல் பல சங்கடங்களும் ஏற்படும் எண்ணிய எண்ணம் முடியாது இது மத்திபம்.

## 5—4—1

*உறவுகொண் டுனைவஞ்சிப்பார் உந்தனின் சினேகரப்பா*
*துறவறமாகபோக துணிவுடன் மனம்கொடுக்கும்*
*மறைவுட னிருந்தபோதும் மாற்ருனின் சதிக்குள்ளாக்கும்*
*குறையென்ன வந்தபோதும் கோரிக்கைதனை தள்ளாதே*

உரை:– 5–4–1 உதயமாகியதால் எவ்வளவு தான் ஆப்த நண்பராயினும் உனைவஞ்சிக்கவே முனைவார்கள் தலைமறைவாக இருந்தாலும் கூட விரோதிகளால் உனக்கு கெடுதல் விளையக் கூடும் குடும்பத்தை வெறுத்து பரதேசியாகவும் போக மனங் கொடுக்கும் எவ்வளவு கவலைகள் உனக்கு வந்தபோதிலும் உன் குலதெய்வங்களை மறவாமல் வாரத்திற்கொருநாள் பூஜைசெய்து வந்தால் உன் கஷ்டங்களெல்லாம் நீங்கும் இது மத்திபம்.

## 5—4—2

*தள்ளாதே பரமன்வாக்கை தனலாபம் கூடிவாழ்வாய்*
*கொள்ளாதே கவலையப்பா கொடுத்தது வந்துசேரும்*
*விள்ளாதே வருமைகொண்டு வந்தது நல்லகாலம்*
*உள்ளதோர்நோயும்நீங்கும்உன்னெண்ணம்திண்ணமாமே*

உரை:- 5-4-2 உதயமானதால் கைவிட்டுப்போன பொருளோ ஜீவனே தொழிலோ இன்னும் 8-தினத்தில் கிடைக்கும் தவிற இப்பொழுது உனக்கு நல்லதிசை ஏற்பட்டிருப்பதாலும் எதிலும் உனக்கே வெற்றியாகும் நோய்நீங்கும் எண்ணமும் திண்ணமாக முடியும் இது உத்தமம்.

## 5—4—3

*திண்ணமாய் ஐந்தாம்வீட்டில் தீதுள்ள கேதமர்ந்தான்*
*எண்ணத்திற்கிடையூறுகும்எடுத்ததோர்தொழிலும்நஷ்டம்*
*கண்ணுன மனைவிமக்கள் கடிந்துனை விரட்டுவார்கள்*
*மண்ணுளும் அரசராலே மானமும் பங்கமாமே*

உரை:– 5–4–3 விழுந்ததால் உன் எண்ணத்திற்கு இடையூறு உண்டாகும் தொழிலும் நஷ்டம் மனைவிமக்களுக்கும் விரோதப்பட்டு நீ பரதேசியாக போகவும் நேரிடும் அரசபகையும் அதனுல் அவமானமும் ஏற்படலாம் இதுகளெல்லாம் உனக்கு கேது ஐந்தாவது வீட்டில் அமர்ந்திருப்பதால் பல இடைஞ்சல்களேற்படக்கூடும் எதையும் கவனித்துச்செய் அவசரப்படாதே மத்திபம்

## 5—4—4

*பங்கமும் ஏற்படாது பலித்திடும் வடக்கேலாபம்*
*பொங்கமாய் மனையும்கோல புகழது மிகுத்துஓங்கும்*
*தங்கநாணயங்கள் சேரும் தனவந்த னுக்கிவைக்கும்*
*இங்கது இரண்டுவாரம் ஏகபின் பலனுண்டாமே*

உரை:– 5–4–4 உதயமானதால் உனக்கு காரிய பங்கம் ஏற்படாது வடக்குதிசையில் லாபமுண்டு மாடாடு கொள்ளவும் மனைகோலவும் குடும்பம் விர்த்திகரமாகவும் நகை நாணயங்கள்சேரும் பணக்காரனென்ற பெயருண்டாகும் இன்னும் இரண்டு வாரத்திற்கு பிறகு அளவிலாத அஷ்டஐஸ்வரியங்களும் உண்டாகும் இது உத்தமம்.

## 5—4—5

*பலனுண்டு என்றபாக்யம் பறந்துமே நாளேமூச்சு*
*குலக்கேடுவிளைக்கவீட்டில் கோதையாளொருத்தியுண்டு*
*புலன்கண்டு நயமாய்பேசி பொருள்பரித்துனை வஞ்சிப்பார்*
*நிலபலம் குன்றலாகும் நிஷ்டூர னுகுவாயே*

உரை:– 5–4–5 உதயமானதால் எதிலும் பாக்கியச் சிறப்பைத்தரும் இன்பமான கிரகங்கள் விலகி 7-நாளாகின்றது உன் குலத்தைக் கெடுக்கவும் உன்பொருளை யபகரிக்கவும் ஒரு பெண்

வசமாவாள் அவளால் பலவிதமான சதிகேடுகளும் விளையக் கூடும் நிலப்லமும் முண்டாகாது உலகில் கெட்டவனென பெய ரெடுப்பாய் மத்திபம்.

## 5—4—10

*நிஷ்டூரமேற்படாது நிந்தையு மணுகிடாது*
*கஷ்டங்கள் துலேந்துபோகும் கங்கணபிராப்தம் கூடும்*
*இஷ்டர்கள் சகாயமுண்டு இனிதுள்ள தொழில்நிலேக்கும்*
*துஷ்டர்கள் சினேகம்நீங்கும் துலேதூர செய்தியுண்டாம்*

உரை:- 5-4-10 உதயமாகியதால் சினேக விஷயத்தில் நிஷ் டூர மேற்படாது தொழிலில் நிர்தையு முண்டாகாது குடும்ப கஷ் டங்கள் துலேயும் மனேயில் சுபகாரியம் கூடும் அடுத்தபேர்களின் சகாயமுண்டு தொழிலானது நிலேக்கும் துஷ்டர்களின் சவகாசம் நீங்கும் துலேதூர சங்கதியினுல் ச ந் தோ ஷ மேற்படும் கோரிய எண்ணமும் முடியும் இது உத்தமம்.

## 5—5—1

*செய்தியால் லாபமுண்டாம் சிதரிய பொருளும் சேரும்*
*நொய்திடும் நோயும்நீங்கும் நோக்கியதொழிலும்கிட்டும்*
*வையகம் தனிலுன்னெண்ணம் வகையுடன் கூடலாகும்*
*ஐயமில்லாமல் வாழ்வாய் ஐஸ்வரிய மிகவுண்டாமே*

உரை:- 5-5-1 உதயமானதால் பலவழியிலும் சிதரிப்போன பொருள்கள் நாளுக்குநாள் வந்துசேரும் வெளிநாட்டு சங்கதியால் வேண்டிய லாபங்களே யடைவாய் நோய்நீங்கும் கோரிய தொழில் கிடைக்கும் அஷ்டஐஸ்வரியம் பொருந்த வாழ்வாய் உன் எண்ண மும் தடையின்றி பலிதமாகும் உத்தமம்.

## 5—5—2

*உண்டாகும் கவலேயாலே ஊரைவிட்டோட்டிவைக்கும்*
*பெண்டான துணேவியாலேபழிப்புடன்இழிப்புண்டாகும்*
*கண்டாரும் கேலிசெய்வார் கபடத்தால் நிந்தையாகும்*
*வண்டாரும் வையகத்தில் வாதுசூதாகும்தானே*

உரை:– 5-5-2 உதயமாகியதால் குடும்பத்தில் மனச்சலிப் புண்டாகும் அதனல் வீட்டைவிட்டு வெளியேறவும் செய்யும் கொண்ட மனைவியால் சில குரும்புகள் நேரிடலாம் அதனல் பலர் கேலிசெய்யவும் நேரும் உன் விஷயத்தில் நீ எங்கு சென்ருலும் வாதுகளும் வம்புகளும் ஏற்படும் எண்ணமும் முடியாது மத்திபம்.

## 5-5-3

*சூதாரேனர் நேசமெல்லாம் சூக்ஷமா யொழியலாகும்*
*வாதாடும் வியாஜ்ய முந்தன்பக்கமே ஜெயமுண்டாகும்*
*மூதாக்கள்பொருளும்சேரும்மனையில் ஆண்குழந்தைதோன்றும்*
*நாதாக்க ளுரைத்தவாக்கு நம்பினேர்க்குறைவேயில்லை*

உரை:– 5-5-3 உதயமானதால் வாதுசூது வைத்துவஞ்சித் தோர்களின் உறவு ஒழியும் வியாஜ்யம் கெலிக்கும் பெரியோர்கள் பொருள் சேரும் மனையில் ஆண்குழந்தை தரிக்கும் அக்குழந்தை யால் குடும்பம் சீர்திருத்தம் பெற்ருேங்கும் கோரிய எண்ணமும் முடியும் உத்தமம்.

## 5-5-4

*இல்லைதா னுனக்கிப்போது ஈசனின் கடாக்ஷமப்பா*
*தொல்லைதானதிகமாகும் தோகையருரவினலே*
*கல்லைபோல் மனதுண்டாகும் கபடமும் செய்யநேரும்*
*அல்லலு மகலுதற்கு ஐரெண்டு திங்களாகும்*

உரை:– 5-5-4 உதயமாகியதால் கிரகராசியுமில்லை தெய்வ பலமுமில்லை ஆதலால் குடும்பத்தில் ஒரு பெண்மணியால் அதிக மான தொல்லைகளுண்டாகும் கிரகக் கோளாரினல் உன்னை கல் நெஞ்சனுக்கி பலவிதமான கபடங்களையும் செய்யும்படிகுணத்தை மாற்றும் ஆனல் இந்த கஷ்டங்களெல்லாம் தீருவதற்கு 10-மாதம் போகவேண்டும் கோரிய காரியம்முடியாது மத்திபம்.

## 5-5-5

*திங்களின் கிழமைதன்னில் சிவபூஜை செய்துவந்தால்*
*மங்களம் மனையில்கூடும் மைந்தனென்றுற்பவிக்கும்*
*பொங்கமாய் மனையும்கோல பூரிப்பும் புகழுமோங்கும்*
*இங்கிர்த தொழிலும்விர்த்தி இழிநோயுமேகும்பாரே*

உரை:– 5–5–5 உதயமானதால் கோரிய எண்ணம் முடியும் மனையில் கலியாணம் நடக்கும் ஆண் குழந்தை தரிக்கும் மனை கோலவும் கிணறு தோண்டவும் குடும்பம் செழிக்கும் தொழில் விர்த்தியாகும் நோய்நீங்கும் ஆனால் சோமவாரத்தில் சாக்ஷாத்சோம சேகரனை துதித்துவர நன்மையுண்டாகும் இது உத்தமம்.

## 5—5—10

*ஏகாதே இடத்தைவிட்டு இடர்மிக சம்பவிக்கும்*
*போகாதேவெளியூர்மார்க்கம்பொன்பொருள்விரையமாகும்*
*நோகாதே மனதுமெத்த நோயினால் மனந்திகைக்கும்*
*வாகான திங்களொன்று வழுத்தினேன் கழிக்கவேணும்*

உரை:– 5–5–10 உதயமானதால் இவ்விடத்தை விட்டு நீ எங்கும் போகக்கூடாது அதனால் பலவித இடர்களை விளைவிக்கும் வெளியூருக்குப் போனாலும் கள்ளர்களாலேயோ அல்லது பல நஷ்டங்களினாலேயோ கைப்பொருள் விரையப்படும் நோயின் கவலையும் நெஞ்சத்தை வாட்டும் இருந்தாலும் இன்னும் 1-மாதம் கழிந்தால் நன்மை ஏற்படலாம் அதுவரையில் அதிஜாக்கிரதையுட னிருக்கவும் எண்ணம் முடியாது மத்திபம்.

## 5—10—1

*வேணுமென்றுனைகெடுக்க வீணர்கள் உறவுகூடும்*
*தோணுமுன்னெண்ணமெல்லாம்தொந்தரைக்குள்ளதாகும்*
*காணுமுன் தொழிலும்போகும் கைப்பொருள்விறையமாகும்*
*ஆணும்பெண்ணும்சேர்ந்துன்னை அவனியில்சதிசெய்வாரே*

உரை:– 5–10–1 உதயமானதால் உனைகெடுக்க வீணர்கள் பலர் சேர்வார்கள் தொழிலிலும் நிந்தையுண்டு கைப்பொருள் விறையமாகும் உன் குடும்பத்தைச்சேர்ந்த ஆண் பெண் இருவர் கள் உனைகெடுக்க சதிநினைக்கலாம் மனதில் கோரிய எண்ணமும் கைகூடாது பலவித சேதங்களேற்படும் மத்திபம்.

## 5—10—2

*சதிசெய்ய யோசித்தாலும் சமாளிக்க கிரகமுண்டு*
*அதிபதிபோலேவாழ அம்சங்கள் பலவுண்டாகும்*
*மதியுள்ள பெரியோராலே மகிழ்வுற மணமேகூடும்*
*நீதியது தவரிடாதே நிமலனை மனதில்வேண்டே*

உரை:- 5–10–2 உதயமாகியதால் பலபேர்கள் கூடி உனை சதிசெய்ய நினைத்தாலும் அதிலிருந்து தப்புவிக்க வழியுண்டு சில நாளில் அரசனைப்போல் அம்சம் பொருந்தும் ஓர்பெரிய மனிதரி னுதவியால் மனையில் திருமண காரியம் ஒன்றுகூடும் ஆகுல் அனு தினமும் நமைப்படைத்த ஆண்டவனை மறவாமல் பூஜிக்கவும் உத்தமம்.

## 5—10—3

*வேண்டினும் லாபமில்லை வினைகளும் அகலுதில்லை*
*ஆண்டிப்போ லலையச்செய்ய ஆறிலேகுருவுமுண்டு*
*பூண்டவுன் விரதம்போகும் பேய்பிடித்தாட்டிவைக்கும்*
*தூண்டியின் மீனைப்போலே துடிதுடித்தொடுங்குவாயே*

உரை: 5–10–3 உதயமானதாலும் ஆறில் குருஅமர்ந்திருப்ப தாலும் நீ எண்ணதான் தெய்வத்தை தொழுதாலும் பயனில்லை உன்னுடைய கவலைகளும் விலகை வழியில்லை உலகில் பைத்தியக் காரன்போல் பித்தங்கொண்டு அலையச்செய்யும் குடும்பத்தை விட்டு பரதேசிகோலமும் கொள்ள எண்ணம்தரும் இருந்தாலும் நவக்கிரகத்தை பூஜை செய்துவர நாளுக்குநாள் நன்மையுண்டா கும் இது மத்திபம்.

## 5—10—4

*ஒடுங்கவே செய்தநோயும் விலகிட காலமாச்சு*
*நடுங்கவே மிறட்டும் துஷ்டர் நாசமாய் போகலாச்சு*
*நெடுங்கவே ஆயுளுண்டாம் நேசராலுதவியாச்சு*
*கடுங்காவலான கஷ்டம் கதிபெறதீரலாச்சே*

உரை:- 5–10–4 உதயமாகியதால் உனை பலநாட்களாக பாதித்துவந்த நோய்விலகும் உனைமிறட்டி பொருள்பரிக்கும் வஞ் சகர்களின் கூட்டம் பூண்டோடொழியும் ஆயுள் அற்பமாகாது

சினேகிதருதவியும் பந்துக்களின் ஒத்தாசைகளும் உண்டாகும் கடுமையான கஷ்டங்களாயினும் நீங்கும் கோரிய எண்ணமும் பலிதமாகும் இது உத்தமம்.

## 5—10—5

*தீராதுதீராதப்பா தீவினையதிகமாகும்*
*போராட்டம் குடும்பத்தன்னில் புத்திரர்களாலே நேரும்*
*சீராட்டம் குலையலாகும் செய்தொழில் சிதரிப்போகும்*
*மாராட்ட புத்தியாக்கும் மனைவிக்கும் பீடைதானே*

உரை:– 5–10–5 உதயமானதால் நீ இப்பொழுது அடைந்துள்ள கவலைகள் சீக்கிரத்தில் நீங்காது குடும்பத்தில் கஷ்டம் அதிகரிக்கும் சண்டைசச்சரவுகள் பிள்ளைகளால் ஏற்படும் உன்னுடைய அந்தஸ்து குலையும் நீசெய்யும் தொழில் இன்னொருவருக்கு கிடைக்கும் புத்தியை பேதனப்படுத்தும் மனைவிக்கு ஏதேனும் ஓர் பலமானநோயும் காட்டும் அதனுல் பணச்சிலவும் சஞ்சலமும் தரும் காரியம் முடியாது மத்திபம்.

## 5—10—10

*பீடைகள் பறந்துபோகும் பிணியது நீங்கலாகும்*
*ஆடையா பரணங்கள்சேரும் அடுத்தவருதவியாகும்*
*மேடையும் மாடியுண்டாம் மகப்பேரு மிகவுண்டாகும்*
*நீடவே ஆயுளுண்டு நிகரிலா வாழ்வுண்டாமே*

உரை:– 5–10–10 விழவும் நோய்நீங்கி தேகப்பீடைகள் பறந்துபோகும் ஓர் அன்னிய பெண்மணியினுதவியால் ஆடையாபரணங்கள் சேரும் அடுத்தபேர்களால் ஆருதலுண்டாகும் இன்னும் ஓராண்டிற்குள் சொந்தமான மாடிவீடுகட்டும் அம்சமும் உண்டாகும் மனையில் பெண்குழந்தை தரிக்கும் அதற்கு ஆயுள் அற்பமின்றி இருக்கும் இன்பமான வாழ்க்கையுண்டாம் உத்தமம்.

## 10—1—1

*வாழ்வுண்டு என்றுநீயும் வளம்பெற யோசித்தாலும்*
*தாழ்த்திட சனியும்பத்தில் சஞ்சாரம் செய்யலானுன்*
*கேழ்வியின் வார்த்தையாலே கொடுமையும் பகையுண்டாகும்*
*பாழ்பட குணத்தைமாற்றும் பதமுடன் நடந்திடாயே*

உரை:- 10-1-1 விழ எதை நினைத்தாலும் இடைஞ்சல் எதைச் செய்தாலும் ஏகமான நஷ்டமாக்கும் கேளாவார்த்தை மீளாபகையுண்டுபண்ணும் குணத்தை மாற்றி பணத்தை விறைய மாக்கும் இதுகளுக்கு காரணம் சனிபகவான் பத்தாவது விட்டில் சஞ்சரிக்கின்ருன் அதனுல் இன்னும் கூட பலவிதமான சதிகளும் நேரிடலாம் ஆனுல் நவநாயகர்களை பூஜைசெய்ய நாளுக்குநாள் நன்மையுண்டு மத்திபம்.

## 10—1—2

*நடந்ததோர்கொடுமையெல்லாம் நஷ்டத்திலொழிந்துபோச்சு*
*துடர்ந்துநீ எடுத்தவேலை துணைவரால் விர்த்தியாச்சு*
*இடந்தனில் புதையல்கிட்டும் எழில்மிகும் காலமாச்சு*
*கடந்ததோர் மாதத்தோடே கஷ்டமும் விலகலாச்சு*

உரை:- 10-1-2 உதயமானதால் இதுவரையில் யேடைந்த கஷ்டங்களெல்லாம் கைப்பொருள் விரையத்தில் முடிந்தது இனி உனக்கு நல்லயோக மேற்பட்டிருப்பதால் இப்பொழுதுநீ ஆரம் பித்திருக்கும் காரியம் உன்நண்பர் ஒருவரால் முன்னுக்குவரும் சிலநாள்போனுல் மனையில் பொருள்கிடைக்கும் உன்னுடைய கவ லைகளெல்லாம் போய் ஒருமாதமாகின்றது இனி எதுவும் உனக்கு எளிதில் கைகூடும் உத்தமம்.

## 10—1—3

*ஆச்சப்பா ஏழாம்வீட்டில் அரும்புதன் பகையுமாச்சு*
*காய்ச்சலும் தலைநோய்காணும் கபடமும் தோஷமுண்டு*
*போச்சப்பா நன்மையெல்லாம் புகழது அழியலாச்சு*
*தாழ்ச்சியே நேரலாகும் தடமாட்ட மதிகமாமே*

உரை:- 10-1-3 உதயமானதால் சமயத்திற்குத் தகுந்தபடி குணபேதகத்தைக் காட்டும் தலைவலி காய்ச்சல் ஜன்னி நோயுண்டு பண்ணும் குடும்பத்தில் சிறுபாலர்களுக்கு பலவிதமான தோஷங் களும் காட்டும் உன் பிரக்யாதியெல்லாம் ஒழிந்துபோகும் அவ மதிப்பு உண்டாகும் தடமாட்டத்தினுல் தனவிறையம் நேரும் இது மத்திபம்.

## 10—1—4

*மதியிலார் கூட்டத்தாலே மாதமைந்தாகநீயும்*
*பதியிழந்தாய் பொருளிழந்தாய் பரதேசிபோல்திரிந்தாய்*
*நீதியான தொழிலும்போச்சு நிஷ்டூரம்நேரலாச்சு*
*சதியொன்றும்இனிமேலில்லை சாதிக்கும்உன்கொள்கைதானே*

உரை:– 10–1–4 உதயமானதால் சுமார் ஐந்துமாத காலமாக உன்கெட்ட கிரகதிசையினால் பொல்லாதவர்களின் கூட்டத்தில் கலந்து அல்லலையடைந்தாய் குடும்பத்தையும் வெறுத்தாய் கைப் பொருளையு மிழந்தாய் திக்கற்று நிரபராதியாகவும் திரிந்தாய் இந்த கலவரத்தினால் தொழிலும் போச்சு உலகில் நிந்தையுள்ள பெயரு மெடுத்தாய் ஆனால் அந்த கெட்டகிரகம் நீங்கி 3-நாளாகின்றது இனி உன் எண்ணமெல்லாம் கைகூடும் இது உத்தமம்.

## 10—1—5

*கொள்கையும் கூடாதப்பா குலக்கேடு விளையலாகும்*
*கள்ளமும் கபடம்நேரும் கைப்பொருள் விறையமாகும்*
*விள்ளவே முடியாவாழ்க்கை வெறுப்புற்று கலைந்துபோகும்*
*சள்ளையால் சஞ்சலங்கள் சகலமும் துன்பமாமே*

உரை:– 10–1–5 உதயமாகியதால் உன் எண்ணம் கூடாது குடும்பத்திற்கேஅவகேடுவிளைவிக்கும்படியான கிரகங்களமையும் சிநேகிதர்களால் கபட வஞ்சனைகளுண்டாகும் கைப்பொருள் விறையப்படும் என்றும் அழியாக் குடும்பமானது அல்லல்பட்டு கலையும் தரித்திரதிசையினால் பலவித சஞ்சலங்களுண்டாகும் சகல காரியமும் துன்பமாகவே முடியுமே தவிர இன்பமேற்படாது இது மத்திபம்.

## 10—1—10

*துன்பத்தால் கலங்கிடாதே தோகையர் சகாயமுண்டு*
*மன்னவன்போலே வாழ்வாய் மாடுடன் கன்றுசேரும்*
*சென்றவர் மீள்வாரப்பா ஜென்மத்தின் வியாதிநீங்கும்*
*இன்றுடன் பீடையெல்லாம் ஏகிடும் ஈசன்சாக்ஷி*

உரை:– 10–1–10 உதயமானதால் இனி உனக்கு ஒருகவலை களுமில்லை ஒரு கன்னிகையினாலே கனமான சகாயங்களெல்லாம்

ஏற்படும் குபேந்திர வாழ்க்கையும் மாடுகன்று சேர்க்கையும் பால் பாக்கியமும் பெருகும் கோபத்தினுல் வெகுநாளைக்குமுன் பிரிந் தவர்களும் இச்சமயத்தில் வந்துசேருவார்கள் தேகபிணி நீங்கும் இனி எக்காரியத்தை நினைத்தாலும் முடியும் பரமன் சாக்ஷியாக இது பழுதாகாது உத்தமம்.

## 10—2—1

*ஈசனின் சாக்ஷியாக எண்ணிய எண்ணம்கூடும்*
*பேசுமுன் வாக்கினுலே பணமது குவியலாகும்*
*நேசர்க ளுதவியாகும் நெடுந்தூரம் சென்ருேர்மீள்வார்*
*பேசவே ஞானம்கல்வி பாலர்க்கு மேன்மையாமே*

உரை:– 10–2–1 உதயமானதால் பரமேஸ்வரன் ஆணையாக எண்ணமானது கூடும் உன்னுடைய வாய்ச்சாதுர்யத்தினுல் வேண்டிய தனலாபமுண்டாகும் சினேகிதர்களுதவியுண்டாம் திசைமாரியபேர்களும் வந்து சேர்வார்கள் குடும்பத்தில் பிள்ளை களுக்கு ஞானம் கல்வி அதிகரிக்கும் சகலதோஷமும் நிவர்த்தி யாகும் இது உத்தமம்.

## 10—2—2

*மேன்மையா யிருந்தவாழ்க்கை மெலிந்திட காலமாச்சு*
*தான்செயும்தொழிலும்போச்சுதரித்திரதிசையுண்டாச்சு*
*கான்படும் கன்னிதன்னில் மான்படுங்கவலைபோலே*
*ஆண்மையும் ஒடுங்கலாச்சு அபலமாய் யாவும்போச்சு*

உரை:– 10–2–2 உதயமானதால் மேன்மைதங்கிய குடும்பம் க்ஷீணிக்க காலமேற்பட்டுள்ளது தொழிலும் நஷ்டம் தரித்திர திசை யதிகரிக்கும் நாளுக்குநாள் உன்கவலையின் மிகுதியால் காண்படுங் கன்னியில் மான் அகப்பட்டு அவதியுறுவது உன் திடகாத்திரமும் நாளுக்குநாள் ஒடுங்கும் இருந்தாலும் நவக்கிரகத்தை 27-நாளைக்கு பூஜைசெய்து வந்தால் படிப்படியாக கவலைகள் நீங்கும் இது மத்திபம்.

## 10—2—3

*போச்சப்பா கவலையெல்லாம் புகழ்பெற காலமாச்சு*
*ஆச்சப்பா ஜெயமேகூட அனைத்திலும் லாபமாச்சு*

பேச்சளவில் நீசொன்ன பெரும்பொருள் சேரலாச்சு
தாச்சன்ய மின்றிவாழ சுக்கிரன் ஆக்ஷியாச்சே

உரை:– 10–2–3 உதயமானதால் மனதில் கோரிய எண்ணம் கூடும் இன்றுடன் உன் கவலைகள் விலகியது இனிநல்ல புகழும் நாணயமும் எதிலும் நல்லலாபமும் பேச்சுறுதியும் பெரியோர் பொருள் சேர்க்கையும் தாக்ஷண்யமில்லாத வாழ்க்கையும் உண்டாகும் உனக்கு சுக்கிரன் ஆக்ஷியாக இருப்பதால் எந்தமுகம் போனலும் தங்கமுகமாகும் உத்தமம்.

## 10—2—4

ஆக்ஷியாம் கிரகமெல்லாம் அனைத்துமே நீச்சமாச்சு
காக்ஷியாய் கண்டதெல்லாம் கவலையும் நஷ்டமாச்சு
மாக்ஷிசேர் தொழிலும்போச்சு மாநோயும் வருத்தலாச்சு
சூக்ஷியாய் நவக்கிரகத்தை துணிந்துநீ பூஜைசெய்யே

உரை:– 10–2–4 உதயமானதாலும் நல்ல கிரகங்களெல்லாம் நீச்சமானதாலும் கையினல் தொட்டதெல்லாம் நஷ்டமாகும் அதனல் கவலையே அதிகரிக்கும் தொழிலும் நஷ்டம் வந்திருக்கும் நோயும் பாதிக்கும் குடும்பத்தில் கெடுதலான செய்திகளையே காதாரக்கேட்பாய் எண்ணமும் பின்னமாகும் மத்திபம்.

## 10—2—5

துணிந்துநீ எதைச்செய்தாலும் தொகையுள்ள லாபங்கிட்டும்
தணிவுடன் தெற்குதிக்கில் சந்தோஷ செய்திதோன்றும்
அணிபணி பொருளும்சேரும் அருமனைகோலலாகும்
பணிவுடன் வாரத்தோர்நாள் பக்தர்க்கு அமுதளிப்பாய்

உரை:– 10–2–5 உதயமானதால் எதைச்செய்தாலும் அளவிலாத லாபங்கிடைக்கும் தெற்கு திசையிலிருந்து நன்மையான சங்கதிவரும் அதனல் சந்தோஷமும் வெகுலாபமும் கிடைக்கும் பணியணிகளெல்லாம் சேரும் மனைகோல நல்லசுக க்ஷேமத்தையளிக்கும் இருந்தாலும் வாரத்திற்கோர்நாள் ஆண்டிகளுக்கு அமுதளிக்க மேன்மையளிக்கும் இது உத்தமம்.

## 10—2—10

அமுதுநீ யளித்தபோதும் ஆதிநாள் வினைபோகாது
தமதிட வினையிருக்க தெய்வத்தை நோகொணுது
கமழுமுன் எண்ணமெல்லாம் கஷ்டத்தில் முடிவுகாட்டும்
சமமுடன் மூன்றுதிங்கள் தணிந்திட துன்பம்போமே

உரை:– 10–2–10 உதயமாகியதால் எவ்வளவுதான் தர்மத்தைச் செய்தாலும் அதர்மமே நேரும் உன்னுடைய எண்ணங்களெல்லாம் கஷ்டமான நிலையிலேயே முடியும் பலவித துன்பத்தினுல் பங்கம் நேரிடும் நீ ஆதிநாளில் செய்த வினையிருக்க தெய்வத்தை நோகாதே இருந்தாலும் மூன்று திங்கள் கழிக்க உனது துன்பங்கள் நீங்கும் மத்திபம்.

## 10—3—1

போமென துன்பமெல்லாம் பகல்கினு காணவேண்டாம்
தாமத மாகுமெண்ணம் தடைப்படும் நினைத்தவேலை
ஆமென சிலபேராலே அபாண்டமாய் பழியும்நேரும்
க்ஷேமத்தை கெடுத்துவைக்கும் சீர்கெட்டு அலைகுவாயே

உரை:– 10–3–1 உதயமாகியதால் உனது துன்பங்களெல்லாம் இப்பொழுது தீராது உன் எண்ணங்களும் தடைப்படும் நினைத்து எடுத்த வேலையிலும் நஷ்டமடையக்கூடும் சிலபேர்களால் அபாண்டமான பழிகளை யுண்டாக்கும் இன்பமான உனது வாழ்க்கை துன்பத்தில் மாறும் அதனுல் மனசஞ்சலமடைந்து திரிய நேரிடும் இது மத்திபம்.

## 10—3—2

சீர்கெட்ட உன்குடும்பம் சிறப்புற்று தழைக்கலாச்சு
யார்உனை யெதிர்த்தபோதும் அநுகூலம் உன்னுதாச்சு
நேர்மையாய் நிலம்செழிக்கும் நோய்கெண்டம் நீங்கலாச்சு
பார்மீது மனையில்நன்மை பாக்கியம் மிகவுண்டாச்சே

உரை:– 10–3–2 உதயமானதால் இவ்வளவு காலம் எத்தகைய கஷ்டங்களை யனுபவித்திருந்தபோதும் இனிமேல் உன் குடும்பம் தழைத்தோங்கும் யாரைநீ எதிர்க்கினும் ஜெயம் உன்

னுடையதே நோய்நொடி நீங்கும் நிலம் செழித்து பயிர்விளையும் மனையில் ஓர் திருமண காரியம் நடக்கும் குடும்பம் மிகவும் செழிப் புற்றிருக்கும் இது உத்தமம்.

## 10—3—3

*உண்டப்பா கவலைமெத்த உன்கிரக கோளாராலே*
*கண்டவர் வெறுக்கலாச்சு கலகத்தால் சிறுமையாச்சு*
*நன்மையைச் செய்தபோதும் துன்மையே நேரலாச்சு*
*கொண்டாடும்உந்தன்தெய்வம் கொடுமையேபுரியலாச்சே*

உரை:– 10–3–3 உதயமானதால் உன் கிரகங்களெல்லாம் கோளாராக இருக்கின்றது அதின் கொடுமையால் உனக்கு கவலை யதிகரிக்கும் உனை பார்த்தபேர்களுக்கு விஷம்போல் தெரியும் குடும்பத்தில் கலகமுண்டாகும் நன்மையைச் செய்தாலும் நன்றி ஏற்படாது உன் குலதெய்வங்களும் உனை கஷ்டத்திற்குள்ளாக்கும் மத்திபம்.

## 10—3—4

*புரியவே துணையுமுண்டு பெண்மணி மடிந்தவள்தான்*
*சொரியுமே ஐஸ்வரியங்கள் சுபகாரியம் நடக்கும்*
*பரிவுள்ள மனையும்கோல பாங்குடன் மனைசெழிக்கும்*
*அறிவுள்ள ஆண்குழந்தை ஆண்டிற்குள் தரிக்கும்பாரே*

உரை:– 10–3–4 உதயமாகியதால் அஷ்டலக்ஷிமிகளும் உன் அரண்மனையில் தங்கியிருப்பார்கள் அதனால் ஐஸ்வரியம் மிகுக்கும் சுபம் நடக்கும் மாடாடு கொள்ளவும் பால்பாக்கியமும் மனைகோல சுகக்ஷேமத்தைதரும் இந்த வருஷ முடிவிற்குள் மனையில் ஓர் அறி வுள்ள ஆண்குழந்தை தரிக்கும் உன்மனையில் மடிந்த ஓர் மாங் கல்ய ஸ்திரீ துணையிருப்பாள் உத்தமம்.

## 10—3—5

*தரிக்குமோர் சிசுவினாலே தரித்திர மனையிலுண்டாம்*
*எரிக்குமே மனையைகூட ஏகமாய் நஷ்டமாகும்*
*சிரிப்புக்கு இடமேயாகும் சீரது அழியலாகும்*
*மரித்தவர் தன்னைவேண்ட மனக்கிலேசம்போகுந்தானே*

உரை:- 10-3-5 உதயமாகியதால் மனையில் ஓர் குழந்தை தரிக்கும் அக்குழந்தை கெர்பத்திலேயே கேதுதிசை யடைந்திருப்பதால் தரித்திர திசையுண்டாக்கும் குடியிருக்கும் மனையில் ஓர் புரம் தீப்பிடிக்கும் அதனல் கஷ்டமும் நஷ்டமும் உண்டுபண்ணும் உன்வாழ்க்கை நகைப்புக்கிடமாக்கும் ஆனல் உன்வீட்டில் மடிந்த குலதெய்வங்களை வெள்ளிக்கிழமை பூஜைசெய்ய நன்மையுண்டாகும் மத்திபம்.

## 10—3—10

*போகுமே கவலையெல்லாம் புந்தியும் பத்தில்நின்ருன்*
*ஆகுமே மனையில்நன்மை அண்டிடுனல் ஆதரிப்பார்*
*சாகுமே பகையோர்கூட்டம் சகலமும் சித்தியாகும்*
*ஏகுமே வெளியூர்போக இடரில்லை வெற்றியாமே*

உரை:- 10-3-10 உதயமானதால் கவலைதீரும் மனையில் நன்மையாகும் உனை ஒருவர் ஆதரிப்பார் அவரால் வேண்டிய லாபமுண்டாகும் பகைவர்கள் கூட்டம் ஒழியும் சகல காரியமும் சித்தியாகும் சிலநாளில் வெளியூர்போக நண்மையுண்டாகும் உனக்கு பத்தாம் வீட்டில் புதன் இருப்பதால் சுகமுண்டாம் உத்தமம்.

## 10—4—1

*வெற்றியே உனக்குண்டாகும் விபரீத வழக்குவெல்லும்*
*பற்றற்று பங்குபாகம் பாக்கியமடையப்போராய்*
*அற்றதுன் துன்பமெல்லாம் அப்பனே மேற்கேலாபம்*
*உற்றபேர் துணையுமாவார் உடல்நலியற்றுபோமே*

உரை:- 10-4-1 உதயமாகியதால் எதிலும் ஜெயமடைவாய் வழக்குகெலிக்கும் கூடிய சீக்கிரத்தில் உன் தாயாதிகளின் பொருள் பங்குபாகம் கிடைக்கும் அதனல் பாக்கியவானக தோன்றுவாய் மேற்கு திசையில் ஓர்லாபமுண்டாகும் உடந்தையான சினேகிதர் ஒருவரால் உனக்கு வேண்டிய உதவியெல்லாம் ஏற்படும் நோய் நீங்கும் உத்தமம்.

## 10—4—2

*அற்றதுன் கவலையென்று ஆனந்தம் கொள்ளவேண்டாம்*
*குற்றமே புரியராகு கொடூரமாய் ஏழில்நின்ருன்*

*உற்றவர் பகையுமாவார் உபகாரம் செய்யதீதாம்*
*மற்றதைச் சொல்லப்போனல் மனங்கசிந்துருகுவாயே*

உரை:– 10–4–2 உதயமானதால் இன்னும் உன்கவலை விலக வில்லை நீ சுமார் 5வருடமாக கவலையடைந்து வருகிறாய் இப்போது உனக்கு ராகு ஏழாவது வீட்டில் வந்திருப்பதால் பந்துக்களும் சினேகிதர்களும் உனக்கு விரோதமாவார்கள் ஒருவருக்கு நீ உப காரம் செய்தாலும் அபகாரம் உண்டாகும் இன்னும் சிலநாளைக்கு நீபடவேண்டிய கஷ்டங்களும் சிலதுண்டு அதைசொல்ல மனக் கவலையடைவாய் மத்திபம்.

## 10—4—3

*உருகவே வாய்த்தநோயும் ஒழிந்திடும் ஆயுள்நீடும்*
*குருகிய மனிதனலே கொடுமையும் நீங்கலாகும்*
*பெருமையும் புகழும்லாபம் பூமியும் விளைவுகாணும்*
*கருதியே ஒருவருக்கு கடமைபட்டிருக்காய் நீயே*

உரை:– 10–4–3 உதயமானதால் பலநாட்களாக பாதித்து வந்த நோயானது நீங்கும் குள்ளமான ஓர் மனிதனல் உனது கஷ் டங்களனைத்தும் நீங்கலாகும் பெருமையும் புகழுமுண்டாகும் நில வளம் பெருகும் அதனல் வேண்டிய லாபங்கள் பெருகும் ஒரு வருக்குக் கீழ்ப்படிந்து நடக்க உனக்கு கிரகமில்லை எக்காரியத் திலும் எதிரில்லாத ஜெயம் கிடைக்கும் இது உத்தமம்.

## 10—4—4

*இருக்கவே மூன்றும்வீட்டில் இனிபுதன் நீச்சமானன்*
*ஒருத்தரும் உதவியாகார் ஒன்றுபட்டழியலாகும்*
*பெருக்குமோர் வியாபாரத்தில் பெருநஷ்டம் பிணியுண்டாகும்*
*வருத்தமே அதிகமாகும் வருமையும் சொல்லொணுதே*

உரை:– 10–4–4 உதயமாகியதால் நீ எவ்வளவுதான் வறுமை யை யடைந்தாலும் உனக்கு ஒருவரும் உதவிசெய்ய முன்வர மாட் டார்கள் மிச்சப்பட்டுள்ள பொருளும் சிலசச்சரவினல் ஒழியும் தொழிலில் அளவிலாத நஷ்டத்தை யுண்டுபண்ணும் நோயுண்டா கும் வருத்தம் அதிகரிக்கும் மூன்றாவது வீட்டில் புதன் நீசசப்பட்

டுள்ளதால் வறுமையைத்தரும் எண்ணம் இடைஞ்சலாகும் மத்திபம்.

## 10—4—5

*சொல்லவே நன்மையுண்டு செல்வரையீன்றுவாழ்வாய்*
*அல்லலுமொழிந்துநல்ல அந்தஸ்து பெருகுமப்பா*
*பொல்லாப்பு நினைத்தபேர்கள் போவார்கள் நாசமாக*
*நல்லோர்கள் உறவுகூடும் நாட்டினில் மழையுண்டாமே*

உரை:— 10—4—5 உதயமாகியதால் வெகுநன்மையுண்டாகும் மனையில் புத்திரோர்ப்பத்தியுண்டு கவலைகள் நீங்கி கனமான வாழ்க்கை யுண்டாதும் உன்னைக்கெடுக்க உத்தேசித்தவர்கள் நாசமாவார்கள் நல்ல பெரியோர்களின் சினேக முண்டாகும் நாட்டில் மழைபொழிந்து வெளாண்மை பெருகும் கோரிய எண்ணமும் முடியும் உத்தமம்.

## 10—4—10

*நாட்டினில் உனைகெடுக்க நயவஞ்சகர்களுண்டு*
*காட்டியேகொடுப்பாரப்பா கள்ளனுக்கொப்பாய்செய்யும்*
*தாட்டிக மழிந்துபோகும் தலைவலி ஜன்னியுண்டாம்*
*சேட்டைகள் அதிகமாகும் ஜீவிக்கவழிதோணாதே*

உரை:— 10—4—10 உதயமானதால் உனைகெடுக்க பகையாளிகள் அநேகருண்டு அவர்களால் பலவிதமான குரும்புகளும் கெடுதலும் சம்பவிக்கலாம் உலகில் கள்ளனுக் கொப்பாகவும் திகைக்கும்படியாகவுமிருக்கும் தைரியத்தைக் குறைக்கும் பலவிதமான ஜன்னி தலை முதலிய நோய்களையும் காட்டும் கிரகசேஷ்டையினால் பிழைக்கவும் வழிதோணாமல் பரதவிப்பாய் இது மத்திபம்.

## 10—5—1

*வழியது தோணாதப்பா வகைமோசம் வருகலாகும்*
*இழிவானதொழிலுண்டாக்கும் இனம்விட்டுநீக்கிவைக்கும்*
*அழியுமே பொருள்கள் முற்றும் அவகேடு நேரலாகும்*
*பழியேது வந்தபோதும் பரமனை போற்றிடாயே*

உரை:— 10—5—1 உதயமானதால் உன் கவலைகள்தீர ஒரு மார்க்கமும் தோணாது பலவிதமான படுமோசங்கள் நேரும் பங்

துக்களை விட்டு நீக்கிவைக்கும் பலவித இழித்தொழிலும் ஈடுபடுத்தும் கைப்பொருள் அழியும் கெட்டபெயர் உண்டாகும் உலகில் உன் விஷயத்தில் நிந்தனையுண்டாகும் ஆனால் எவ்வளவு கஷ்டமேற்பட்டாலும் கடவுளை மறவாதே மத்திபம்.

## 10—5—2

*போற்றவே புண்யமுண்டு புத்திரவிர்த்தியுண்டு*
*ஆற்றிட துணையுமுண்டு ஆதரவதிகமுண்டு*
*தூற்றிய பேர்களெல்லாம் தொந்தார்த்த மடைவதுண்டு*
*மாற்றிட கவலையெல்லாம் மகாதேவன் கருணையுண்டாம்*

உரை:- 10-5-2 உதயமானதால் புண்ணியம் பெற்று புகமுடன் வாழ்வாய் புத்திரலாபமுண்டு கஷ்டத்தை நீக்க தனவான்கள் சகாயமுண்டு பந்துமித்திரர்களின் ஆதரவுமுண்டு உனை வஞ்சிக்க நினைத்த பஞ்சர்சள் கூட்டம் சஞ்சலத்திலாழ்ந்துவார்கள் மனக்கவலை நீங்தும் பாமனிட கருணையால் மனநிம்மதியடையும் எண்ணமும் கூடும் உத்தமம்.

## 10—5—3

*கருணையு மில்லாதாலே கபடமாய் வழக்குநேரும்*
*பெருமைசேர் வாழ்க்கைமாறும் பிரபல்யமழியலாகும்*
*வறுமையால் பொருள்கள்நாசம் வாய்மொழி வம்புநேரும்*
*கருமையாம் மனிதனாலே களவது காணும்பாரே*

உரை:- 10-5-3 உதயமானதால் உனக்கு மனித உதவியுமில்லை தெய்வபலமுமில்லை கிரகங்களின் கோளாறு உண்டு ஆனதால் உனைகபடம்செய்து வழக்காடுவார்கள் சுகமான வாழ்க்கை மிக கவலையாகமாறும் நல்லபெயர்கெடும் பொன்பொருள் நாசமாகும் வாய்மொழியினால் வம்புசண்டைகள் நேரும் ஒரு கருத்த மனிதனால் களவு ஏற்படும் இது மத்திபம்.

## 10—5—4

*காணுமே வெகுவாய்லாபம் கபட வஞ்சகமும்போகும்*
*தோணுமே இன்பவாழ்க்கை துணைவியும் ஒருத்திசேர்வாள்*

*பூணுமே பூஷணங்கள் புகழ்மிகும் தொழிலில்லாபம்*
*வேணுமென் றுனைவஞ்சித்த வீணர்கள் மாய்குவாரே*

உரை:- 10-5-4 உதயமானதால் எத்தொழிலைச் செய்யினும் நல்லலாபம் கிடைக்கும் கபடம் புரியும் கயவர்கள் கூட்டம் விலகும் இன்பமான வாழ்க்கை யுண்டாகும் மற்றோர் தாரமும் கிடைக்கும் பொன்பூஷணச்சிறப்புண்டாகும் தொழிலில் லாபமுண்டாம் உனைவெகுநாளாக வஞ்சித்து வந்த பஞ்சர்களின் கூட்டம் அடியோடொழியும் இது உத்தமம்.

## 10—5—5

*மாயுமே நாற்கால்ஜீவன் மாதினால் கலகம்நேரும்*
*பேயுமே கிரகதோஷ பித்தத்தின் சுரமுண்டாகும்*
*சேயுடன் மனைவிசுற்றம் சீரியே சினந்துநிற்பார்*
*பாயுமோர் அம்புபோலே பலவித பேச்சுண்டாமே*

உரை:- 10-5-5 உதயமானதால் உனக்கு கெட்ட கிரகமாக இருப்பதால் மனைக்கோலவும் மழையினால் நஷ்டம் வாகனாதிகள் கொள்ளவும் விர்த்திகர மிருக்காது ஓர் சிவந்த நிற பெண்ணினால் கலகமுண்டாம் பேய்பிசாசு வைப்பு பில்லி சூனியம் முதலானவை துடரும் பித்தமேலிட்டின் சுரம்காணும் மனைவிமக்களும் உனை பகைப்பார்கள் வில்லம்பைவிட சொல்லம்பான பேச்சுகளாலும் பாதிக்கப்படுவாய் எண்ணமும் இடஞ்சலாகும் மத்திபம்.

## 10—5—10

*பேச்சளவானதெல்லாம் பெருலாபமாககாணும்*
*ஆச்சென்றால்யாவுமாகும்அதிர்ஷ்டமாய்பொருள்கிடைக்கும்*
*போச்சென நோயும்தீரும் பொல்லாத சினேகம்போகும்*
*தாக்ஷண்ய மின்றிவாழ்வாய் தனவந்தனாகுவாயே*

உரை:- 10-5-10 உதயமானதால் ஒருவருடன் கண்டு கலந்து பேசியபேச்சு உறுதியாகும் அதனால் வெகு லாபம்காணும் கோரிய எண்ணமும் கூடும் அதிர்ஷ்ட வசமான பொருள்களும் கிடைக்கும் நோய்நீங்கும் கபடமானவர்களின் சினேகம் விலகும் தாக்ஷண்யமில்லாத வாழ்க்கையும் தனவந்தனெனும் பெயரும் ஏற்படும் இது உத்தமம்.

## 10—10—1

*வாயவே வறுமையெல்லாம் வந்ததோர் வழியேபோகும்*
*தூயமாய் துணிந்துசெய்த தொழிலது விர்த்தியாகும்*
*காயமே பழிக்கவந்த கெண்டமும் நீங்கலாகும்*
*சேயர்கள் தன்னுல்வேண சீருடன் சிரப்புண்டாமே*

உரை:– 10–10–1 உதயமானதால் இதுவரையில் உனே வருத்திவரும் வருமைகள் வந்தவழி தெரியாமலோடும் தொழில் விர்த்தியாகும் உனேக்கொல்லவந்த பலவிதமான கெண்டங்களெல்லாம் நீங்கும் பூரண ஆயுள் பலத்தைத்தரும் புத்திரர்களால் மனேயில் புகழானது ஜொலிக்கும் மனக்கவலேகள் மங்கலாகும் நீ சோரிய எண்ணமும் கைகூடும் இது உத்தமம்.

## 10—10—2

*சிரப்புடன் செய்வியாபாரம் சிலவினத்தாலே நஷ்டம்*
*பரபரப்பதிகமாகும் பலபேர்கள் விரோதமுண்டாம்*
*விரதமே இருந்ததெய்வம் விலகிருந் துணேகொடுக்கும்*
*கிரகத்தின் தோஷத்தாலே கீர்த்தியும் மங்கலாமே*

உரை:– 10–10–2 உதயமாகியதால் நீ செய்யும் வியாபாரத்தில் வீண்சிலவதிகரிக்கும் நஷ்டமுண்டு அலேச்சலும் திரிச்சலும் அகாலபோஜனமும் கைப்பொருள் விரையமும் பலபேர்களின் விரோதமும் கெடுதல்களேயு முண்டாக்கும் நீ தினமும் பூஜிக்கும் தெய்வங்களும் உன்கிரகத்தின் கோளாராலே விலகியிருந்து உன் காரியங்களே கெடுக்கும் கீர்த்தியுமழியும் மத்திபம்.

## 10—10—3

*மங்கியே போனவாழ்க்கை மக்களால் மேலுக்கோங்கும்*
*இங்கிர்த மணமும்கூடும் இடரொன்று மேற்படாது*
*சிங்கம்போல் பெயர்விளங்கும் செல்வாக்கு அதிகமாகும்*
*பங்கமில்லாமல் செய்யும் பலதொழில் முன்னுக்காமே*

உரை:– 10–10–3 உதயமானதால் வெகுநாளாக க்ஷீணிக்கப்பட்டுள்ள உன் குடும்பமானது உனது மைந்தர்களால் செப்புற்ற வாழ்க்கையாக இருக்கும் புதல்வர்களுக்கு இந்த வருஷத்தில் விவாகம் நடக்கும் எதிலும் இடர்சம்பவிக்காது மங்காதப்ராசியாதி

யாகும் செல்வாக்குண்டு எந்தத்தொழிலேச் செய்யினும் இனிதான லாபமே அடையக்கூடும் கோரிய எண்ணமும் முடியும் உத்தமம்.

## 10—10—4

*முன்னுக்குவர உனக்கு மைந்தனே ராசியில்லே*
*பின்னுக்குப்போக சுக்ரன் பேதமாய் நீச்சப்பட்டான்*
*தன்னுளம் நோகநீயும் தனிமரமாக நிற்பாய்*
*உன்னததொழில்செய்தாலும்உனக்கொன்றும்பயனுகாதே*

உரை:- 10-10-4 உதயமானதால் நீ முன்னுக்குவர மார்க்கமில்லே எதிலும் பின்னுக்கு தானடைவாய் மனம்நொந்து சுடும்பத்தை விட்டு தனிமரமாகவும் நிற்பாய் என்னதொழில் செய்தபோதும் ஈடேர முடியாது மத்திபம்.

## 10—10—5

*ஆகாத காரியமெல்லாம் ஆகவேகிரகமுண்டு*
*போகாத இடம்போனுலும் பூரிப்பும் லாபமுண்டாம்*
*யோகாதியோகனுவாய் உடன்பிறந்தோரால் நன்மை*
*ஏகாத கவலேயெல்லாம் ஏகிடும் ஏங்கிடாதே*

உரை:- 10-10-5 உதயமாகியதால் ஆகாத காரியமெல்லாம் எதிர்பார்க்காத விதத்தில் ஜெயமாகும் போகாத இடத்திற்து மயங்கி சென்றுலும் அதில் ஆபத்து ஏற்படாது யோகதிசையுண்டாகும் சகோதரர்களால் நன்மையுண்டு கவலேகள் நீங்கும் உத்தமம்

## 10—10—10

*ஏங்க மும்முறையும்பத்து இனிதுடன் விழுந்ததாலே*
*சோங்கிட வந்தநோயும் சுகமாகும் மருந்திஞலே*
*தாங்கிடா கஷ்டமேறும் தடைப்பட உதவியுண்டு*
*பாங்குடன் தியாகராஜன் பதமது பொய்யாகாதே*

உரை:- 10-10-10 உதயமானதால் பலத்த நோயாயினும் மருந்திஞலோ அல்லது தெய்வப்பிராத்தனேயிஞலோ குணமாகும் எவ்வளவு கஷ்டதிசையாயினும் அதைத்தவிர்க்க சினேகிதர்களுதவியுண்டு ஆதலால் இந்த பலகரை சாஸ்திரம் பரமனின் மொழியானதாலும் அதை இந்நூலாகியன் பிரித்துரைத்ததாலும் இதுபழுதாகாது உத்தமம்.

பலகறை சாஸ்திரம் முற்றிற்று.

# ராசியின் பலாபலன்

## ராசி சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| மீனம் | லக்கினப்பலன் | | சிம்மம் |
| கும்பம் | | | கன்னி |
| மகரம் | தனுசு | விருசிகம் | துலாம் |

### மேஷராசியின் பலன்

கேளப்பா கெடுதியில்லை கெண்டமில்லை
கிருபையுடன் மேஷமது உதயமானால்
மீளப்பா ஓர் பெண்மணியால் சகாயமுண்டு
முன்னேற்ற மாகும்தொழில் மேற்கேலாபம்

*கேளப்பா கலகத்தால் பிரிந்தபேரும்*
*கொடுமையின்றி லாபத்துடன் வந்துசேர்வார்*
*தாளப்பா ஒருவருக்கு சொன்னவாக்கு*
*தட்டாது ஐந்துநாள் கழித்திடாயே*

உரை:- பேஷராசி உதயமானதினுல் இனி உனக்கு ஒருவித கவலையும் கஷ்டமும் ஏற்படாது கெண்டமும் நோயும் நீங்கும் சொந்தமானஓர் பெண்ணினுல்வேண்டிய உதவியுண்டாகும் தொழிலில் முன்னேற்ற மடையக்கூடும் சிலநாளில் மேற்குதிசையில் லாபமுண்டாகும் குடும்பத்தில் கலகப்பட்டு பிரிந்த பேர்களும் வெகுலாபத்துடன் வந்துசேர்வார்கள் நீ ஒருவருக்கு சொன்ன வாக்கு தவராமல் நடந்துக்கொள்ளும் யோக்கியாதாம்சம் உண்டாகும் ஐந்து நாளேக்குப்பின் இந்த ராசி வெகு அனுகூலத்தைத் தரும் உத்தமம்.

## ரிஷபராசியின் பலன்

*கழித்திடவே ரிஷபமது உதயமானல்*
*களிப்புறவே பலபொருளும் வந்துசேரும்*
*பழித்தவர்கள் பார்க்கபய னற்றுபோவார்*
*பகைத்தவரின் கூட்டமும் பற்றறுந்துபோகும்*
*வழித்தவரி போனஜீவன் வந்துசேரும்*
*வம்புகளும் வழக்குகளும் விலகிப்போகும்*
*செழிப்புறவே குடும்பமதில் பெண்குழந்தை*
*சிலநாளில் உற்பவிக்கும் தகைமைதானே*

உரை:- ரிஷபராசி உதயமானதால் இதுவரையில் எவ்வளவோ கவலைகளே அடைந்து வந்திருக்கிருய் இந்த கவலைகளெல்லாம் இந்த வாரம்போனுல் நீங்கி நல்லயோகத்தைத்தரும் உனேபழிப்புற்று பேசியவரின் கூட்டம் பாழாகும் பகையாளர்களின் கூட்டம் ஒழியும் சில நாளேக்குமுன் தேடியும் காணுத-ஜீவன் இன்னும் 10-நாளில் வந்துசேரும் குடும்பத்திலுள்ள வம்புகளும் வழக்குகளும் விலகும் குடும்பத்தில் அழகிற்சிறந்த ஓர் பெண்குழந்தை உற்பவிக்கும் தொழிலில் நல்லலாபத்தைத்தரும் மனதில் கோரிய எண்ணம் முடியும் இது உத்தமம்.

## மிதுனராசியின் பலன்

*தகைமையாய் மிதுனமது உதித்ததாலே*
*தரித்திரத்தால் மூன்ருண்டாய் கவலைப்பட்டாய்*
*பகையாச்சு பொன்பொருளும் பலவும்போச்சு*
*பராமரிப்பால் தொழில்முறையில் நஷ்டமாச்சு*
*வகையின்றி கைப்பொருளும் விறையமாச்சு*
*வம்பர்களின் உறவாலே சுகமும்போச்சு*
*மிகமேன்மையுண்டாகும் ஒருவாரத்தில்*
*மிச்சமுண்டு கஷ்டமதை கழிப்பாயின்னும்*

உரை:– மிதுனராசி உதயமானதால் சுமார் 3-வருடங்களாக கவலையின் மிகுதியினுல் கலங்கி வாடுகின்ருய் அதின் காரணத்தினுல் தொழில் முறையிலும் குடும்ப காரியங்களிலும் கஷ்டமும் கைப்பொருள் நஷ்டமும் பந்துக்களின் நிஷ்ரேமும் சினேகிதர்களின் நம்பிக்கை துரோகமும் மற்றும்பல கவலைகளும் ஏற்பட்டிருக்கலாம் சிலபேர்களின் கலகத்தினுல் கஷ்டதிசை மேலிட்டு இடம்விட்டு வேரிடம் மாறியுமிருக்கலாம் நோயின் கவலையே நெஞ்சத்தை வாட்டியுமிருக்கலாம் இருந்தாலும் ஒருவாரம் கழிக்க உன் இடைஞ்சல் ஒழிந்து இன்பத்தை யளிக்கும் உத்தமம்.

## கடகராசியின் பலன்

*இன்னலப்பா உதித்ததொரு கடகத்தாலே*
*ஈரேழுவாரம்வரை கவலையுண்டு*
*எண்ணிய எண்ணத்திற்கு இடைஞ்சலாகும்*
*இக்கட்டு பலவிதமாய் ஏற்பாடாகும்*
*உன்னுடைய வார்த்தையது விஷம்போலாகும்*
*உடந்தையுள்ள பந்துக்களும் உதாசிப்பார்கள்*
*பொன்பொருளும் நஷ்டமுண்டு புகழ்கெடுக்கும்*
*புத்தியது ஒருநிலையில் பொருந்திடாதே*

உரை:– உனக்கு கடகராசி உதயமாகியிருப்பதால் 14-வாரம் வரையில் பலவிதமான கவலைகளுண்டு தவிர ஆனந்தமாக நினைத்த எண்ணம் அபலமாகும் சினேகிதர்களால் அபாயமும் நேரிடலாம் உன்வாக்கு பிறருக்கு விஷப்பாம்பின் சீரல்போலிருக்

கும் சொந்த பந்துக்களுக்கும் நீ நிந்தனையாளனுக நிற்பாய் சில காரியங்களின் இடைஞ்சலால் கைப்பொருளும் விரையமாகும் உத்தமனெனும் பெயரொழிந்து சத்தியமாரியெனும் பெயரெடுப் பாய் சுயபுத்தியைத் தவிர்க்கும் ஆனுல் 27-நாளேக்கு நவநாயகர் களை நம்பிச்கையுடன் கும்பிட்டுவர கஷ்டங்கள் கொஞ்சம் தடங்க லாகும் ஆனுல் கோரிக்கை முடியாது இது மத்திபம்.

### சிம்மராசியின் பலன்

*பொருந்தவே ஆருடம் சிம்மமானுல்*
*பொன்பொருளும் மண்மனையும் புகழுமுண்டு*
*வருந்தவே வாய்ந்தபிணி பறந்துபோகும்*
*வலுத்தமுடன் நினைப்பதெல்லாம் ஜெயமுண்டாகும்*
*திருந்தமனம் கூடுமப்பா தென்கிழக்கில்*
*தனலாபம் தொழில்முறையில் தீதுயில்லை*
*குருந்ததொரு மனிதனுல் நன்மையுண்டு*
*குடும்பமது விருத்தியுண்டு பொருத்திடாயே*

உரை:– சிம்மாசி உதயமானதால் பொன்பூஷணச்சிறப்பும் மணமனையும் புகழுமுண்டாகும் பொல்லாத ஓர் நோயாயினும் மணி மந்திர ஔடதத்தினுல் நீங்கலாகும் மனையில் பிறந்த பிள்ளை களுக்கு திருமணம் நடக்கும் தென்கிழக்கு திசையில் சிலநாளில் ஓர்லாபம் கிடைக்கும் தொழில் முகாந்திரத்தில் தனமானது பெரு கும் ஒரு குருகிய மனிதனுல் வெகு நன்மையுண்டாக்கும் குடும்பம் மென்மேலும் விர்த்திகரமேற்படும் மனதில் கோரிய எண்ணங்க ளெல்லாம் திடமாகமுடியும் இது உத்தமம்.

### கன்னியாராசியின் பலன்

*பொருப்பதால் புண்யமுண்டு புகழுமுண்டு*
*புனிதமுடன் கன்னியது உதயமானுல்*
*கருப்புநிற முள்ளதொரு மனிதனுலே*
*களவது போனபொருள் புலன்கிடைக்கும்*
*உருபடா குடும்பமது ஓங்குமப்பா*
*உன்மனையில் மணங்கூடும் மகப்பேராகும்*
*இருபத்தியோர் நாளில் வேணநன்மை*
*இனிதுபெற உதவிபலர் சேருவாரே*

உரை:- கன்னியாராசி உதயமானதால் பூர்வ புண்ய வசத்தினுல் நல்லபுகழும் குடும்பத்திலே அதிக செல்வாக்கு முண்டாகும் சிலநாளைக்கு முன் கையிலகப்படாத பொருளாயிருந்தாலும் ஒரு கருத்த மனிதனுல் புலன்கிடைக்கும் இதுவரையில் கவலையால் மெலிந்த குடும்பமாயினும் களிப்புற்று மேன்மையான அந்தஸ்து உண்டாகும் மனையில் திருமணம் நடக்கும் புத்திரசம்பத்துண்டாகும் இன்னும் 21-நாள் போனபிறகு வெகுநன்மையுண்டாகும் கோரிய எண்ணமும் கூடும் இது உத்தமம்.

### துலாம்ராசியின் பலன்

*சேருவா ருன்குடிகெடுக்க சிலபேரப்பா*
*சீரான ராசிதுலாம் உதயத்தாலே*
*யாருக்கும் ஆகாது உன்னைகண்டால்*
*அபாண்டமாய் பழிசுமத்தி நிந்திப்பார்கள்*
*நேருக்குநேர் பொருளை தந்தபோதும்*
*நிச்சயமாய் இல்லையென்று மோசம்செய்வார்*
*சீருள்ள குடும்பமதா யிருந்திட்டாலும்*
*சிதருமப்பா மாதம்மூன்றில் பாக்கியமுண்டாம்*

உரை:- உனக்கு துலாம்ராசி உதயமானதால் உன்குடியை கெடுக்க சிலபேர் ஒன்று சேர்வார்கள் தவிர உன்னைக் கண்டில் எதிரிக்கு விஷப்பாம்புபோல் தோன்றும் அதனுலே உன்மீது அபாண்டமான பழிகளையெல்லாம் சுமத்துவார்கள் கொடுத்த பொருளை கேட்பாயானுல் அதனுல் விரோதமும் மோசமும் நேரிடும் சிறந்த குடும்பத்தில் நீ பிறந்திருந்தாலும் சிலநாளில் பலவிதத்திலும் குடும்பம் சிதரிப்போகும் அதனுல் 12-வாரம்போக பல துன்பங்களும் பற்றருந்துப்போகும் மத்திபம்.

### விருச்சிகராசியின் பலன்

*பாக்கியவானுனுலும் பலனே ஓது*
*பாலகனே விருக்ஷிகந்தான் மிகவும்தீது*
*சிலாக்கியமாய் செய்யும்தொழில் விர்த்தியேது*
*சினேகிதத்தை வெறுக்கவைப்பாள் கருத்தமாது*

நோக்கமுள்ள குடும்பத்தில் சுகமாகாது
நோய்கவலை யுன்னைவிட்டு நீங்கிடாது
போக்கான பொருளுனக்கு கிடைத்திடாது
புண்ணியனே வாரமைந்தில் நன்மையாமே

உரை:- விருச்சிகராசி உதயமானதால் ஒருலாபமும் கிடையாது தொழிலும் விர்த்தியாகாது ஒரு கருத்தபெண் உனக்கு உன் சினேகிதனுக்கும் கலகத்தை மூட்டுவாள் உனக்கு குடும்பத்திலும் மனது நிம்மதியிருக்காது பலநாட்களாக உனைவருத்தும் நோய் சீக்கிரத்தில் நீங்காது தேடிப்போகும் பொருளோ ஜீவனோ உனக்கு கிடைக்காது பலவிதமான கவலைகளும் கஷ்டங்களும் கடன்காரர்களின் தொல்லையும் பாதிக்கும் கோரிய எண்ணமும் முடியாது இது மத்திபம்.

## தனுசுராசியின் பலன்

நன்மையுண்டு தனுர்ராசி உதயமானால்
நம்பிய தொழில்முறையில் கிடைக்கும் லாபம்
உண்மையுடன் உனதுஎண்ணம் உருதியாகும்
உடன்பிறந்தோர் சினேகிதரும் உதவிசெய்வார்
அன்புபெற ஆண்குழந்தை மனையில்தோன்றும்
அயலூரின் செய்தியினல் அடைவாய் இன்பம்
பண்டையநாள் பொருள்சேரும் பகையோரெல்லாம்
பணிந்திடுவார் உனைக்கண்டால் நடுங்குவாரே

உரை:- தனுசுராசி உதயமானதால் தொழில் முறையில் லாபமுண்டாகும் உன்னுடைய எண்ணமும் பலிதமாகும் சகோதரர்களின் உதவியும் அடுத்தபேர்களின் ஆதரவும் மனையில் ஆண் குழந்தையும் தரிக்கும் தவிரவும் தெற்குதிசையிலிருந்து நன்மையான சங்கதி தோன்றுதலும் அதனல் அதிக சந்தோஷத்தையும் அளிக்கும் பெரியோர்களின் பொருள் சேர்க்கையுண்டாம் பகைவர்களும் உனைக்கண்டால் பயந்து நடுங்குவார்கள் இது உத்தமம்

## மகரராசியின் பலன்

நடுங்கவே மகரமது உதயமாச்சு
நம்பிக்கையும் நாணயமும் தவரலாச்சு

*ஒடுங்கவந்த நோயால் நஷ்டமாச்சு*
*உறவினரும் சினேகிதரும் விரோதமாச்சு*
*கொடுத்ததை கேட்டாலே கொடுமையாச்சு*
*கோபத்தால் இடத்தைவிட்டு மாறலாச்சு*
*அடுத்த பேராலுனக்கு கெடுதலாச்சு*
*அப்பனே மூன்றுதிங்கள் அகற்றிடாயே*

உரை:- மகரராசி உதயமானதால் உன்கெட்ட கிரகங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பகைபெற்றிருக்கின்றது அதனால் உனது நம்பிக்கையும் நாணயமும் தவரிப்போதும் வாய்த்த நோயினால் பொருள் நஷ்டமடையும் பந்துகளுக்கும் சினேகிதர்களுக்கும் பகைவனுக்கி வைக்கும் தவிற கொடுத்த பொருளைக்கேட்டால் அடுத்தாற்போல் விரோத முண்டாகும் இரவு ஓர் சிந்தனை பகலில் ஓர் நினைவு தொட்டதெல்லாம் நஷ்டம் இடம்விட்டு மாற்றும் அடுத்தோர்களால் ஆபத்து ஆனால் மூன்றுமாதம் கழியநன்மையுண்டாம் மத்திபம்.

## கும்பராசியின் பலன்

*அகற்றுவாய் கும்பமது உதயமானால்*
*அமைதியுடன் கோரியது கிடைக்குமப்பா*
*பகைகொண்டு உந்தனை சிலதுபேர்கள்*
*பலவிதமாய் கெடுத்திடவே எண்ணமிட்டார்*
*ஜெகத்திலவர் நினைந்தபடி நடந்திடாது*
*சித்தமதில் நித்தம்சிவ பூஜைசெய்வாய்*
*தகத்துடனே வாழ்ந்திடுவாய் தனமேசேரும்*
*தன்மையுடன் உண்மையிதை நம்புவாயே*

உரை:- கும்பராசியின் உதயமானது குடும்பத்தின் கவலைகள் நீங்கும் கோரிய எண்ணம் முடியும் கெடுவஞ்சகமுள்ள சில பேர்கள் உனைகெடுக்க பலவிதமான சூழ்ச்சிகள் செய்திருக்கலாம் ஆனால் உனது நல்ல கிரகங்களின் வறுமையினால் உனை கெடுக்க முடியாது குடும்பக்கவலையும் தேகபீடையும் துஷ்டர்களின் உறவும் நீங்கும் ஆனாலும் இன்றுமுதல் அனுதினமும் மறவாமல் பரமேஸ்வரனை பூஜைசெய்துவர உன்கஷ்டங்கள் விலகும் இது உத்தமம்.

## மீனராசியின் பலன்

*நம்புவாய் மீனமது உதயமாகில்*
*நங்கையரின் உறவாலே தனம்கிடைக்கும்*
*வெம்பவே செய்தகஷ்டம் விலகுமப்பா*
*வெளியூர்க்கு பிரயாணம் செய்யலாகும்*
*அம்பலமாய் விட்டோர்கள் ஆதரிப்பார்*
*அனுகூலம் செய்தொழிலும் நீடித்தோங்கும்*
*தென்புடனே மாடுமனை கொள்ளநன்றும்*
*திடமடைவாய் பரமன்மொழி பொய்த்திடாதே*

உரை:– மீனராசி உதயமானதால் சிலநாளில் ஒரு பெண்ணின் உறவு கூடும் அப்பெண்ணினுல் வேண்டிய தனலாபங்களும் கிடைக்கும் இதுவரையில் இருந்த கஷ்டங்கள் விலகும் வெளி யூருக்கு பிரயாணம் செய்ய எண்ணமுண்டு அதனுல் வேண்டிய லாபம் கிடைக்கும் சிலநாளைக்குமுன் கைவிட்டோர்களும் உனை ஆதரிப்பார்கள் தொழிலானது நீடித்திருக்கும் அதனுல் குடும்பத் தில் க்ஷேமமிருக்கும் தவிற மாடுமனை கொள்ளவும் மேன்மை யுண்டு கோரிய எண்ணமும் கூடும் இது பரமனுடைய வாக்கான தால் எள்ளளவும் பொய்யாகாது உத்தமம்.

இராசி பலன் முற்றிற்று.

# கிரகநிலையோக சக்கரம்

| | | |
|---|---|---|
| சூரியன் | சந்திரன் | அங்காரகன் |
| புதன் | குரு | சுக்கிரன் |
| சனி | ராகு | கேது |

## சூரியனின் பலன்

அப்பனே ஆதித்தன் உதயமானால்
அலைச்சலும் திரிச்சலுண்டு அமோக நஷ்டம்
ஒப்பாது உன்வாக்கு ஒருவருக்கும்
ஊரைவிட்டும் ஓட்டிவைக்கும் உறவைநீக்கும்
தப்பாது கவலைமிக உனக்கேயுண்டு
தரித்திரத்தால் மனைவிமக்கள் பிரியநேரும்
இப்போது செய்யும்தொழில் இடைஞ்சலாகும்
இனிதுடனே சூரியனை பூஜைசெய்யே

உரை:- சூரியன் உதயமாகியதால் சொல்லொணாத கவலையும் அலைச்சலும் திரிச்சலும் அமோகமான நஷ்டமும் இடம்விட்டு மாறுதலும் பந்துக்களின் உறவும் நீக்கும் அதனால் மனக்கவலை அதிகரிக்கும் மனைவி மக்களையும் பிரியநேரிடும் செய்தொழிலிலும் பலவிதமான இடைஞ்சலுண்டாகும் உன்னுடைய வாக்கு பிறருக்கு விஷம்போல் தோன்றும் இருந்தாலும் தைரியத்தைக் கை

விடாமல் தினமும் அதிகாலையில் எழுந்து சூரியபூஜை செய்துவர நாளுக்குநாள் நன்மையேற்படும் மத்திபம்.

## சந்திரனின் பலன்

*பூசிக்க சந்திரனும் உதயமானால்*
*பொன்பொருளும் மண்மனையும் புகழுமுண்டாம்*
*ஆசித்த பெண்ணுனக்கே விவாகம்கூடும்*
*அதனாலே குடும்பமது விர்த்தியாகும்*
*நேசித்த பெரியோரால் உதவிகாண்பாய்*
*நேர்மேற்கு திசையில்நல்ல செய்திதோணும்*
*ஏசிய துரோகிகளும் நாசமாவார்*
*எத்தொழிலை செய்தாலும் சித்தியாமே*

உரை:– சந்திரன் ஆருடமானதால் குடும்பம் மென்மேலும் விர்த்தியாகும் பொன்பூஷணச்சிறப்பும் ஆடையாபரண அலங்காரமும் நிலவளவும் மனைகோல மகாநன்மையும் புகழும் கீர்த்தியும் புனிதமான பக்தியும் பெரியோர் உதவியும் மேற்குதிசையில் சில நாளில் நல்ல லாபகரமும் முண்டாகும் நீ பிரியப்பட்ட கன்னிகையையே விவாகம் முடிப்பாய் உனைமோசம் செய்ய யோசிக்கும் பாவிகள் நாசமாவார்கள் தவிர எத்தொழிலைச் செய்யினும் எதிரில்லாத லாபகரமடைவாய் உத்தமம்.

## அங்காரகனின் பலன்

*சித்தியே யடைந்திடவும் வழியுமேது*
*செவ்வாயும் உதயமாகில் குறைதீராது*
*புத்தியது ஒருநிலையி லிருந்திடாது*
*புகழுடனே எத்தொழிலு மீடேராது*
*உத்தமனாய் நடந்தாலும் உண்மையேது*
*உடன்பிறந்தோர் சினேகிதரால் வருகும்தீது*
*இத்ததினி கொடுத்தபொருள் கேட்கொணாது*
*எவ்விதமாய் நடந்தாலும் வினைபோகாதே*

உரை:– அங்காரகன் உதயமானதால் நீ எவ்விதமான நல்லமுறையில் நடந்தாலும் உனக்கு நற்பெயர் ஏற்படாது செய்வழி

லும் மேன்மையாகாது உன் புத்தியானது ஒரு நிலையிலிருக்காது எந்த காரியமும் ஈடேராது நீ ஒருவருக்கு கொடுத்த பொருளை கேட்கொணுது சினேகிதர்களாலும் பந்துக்களாலும் சிலகொடுமை களும் நேரக்கூடும் அதற்கும் ஜாக்கிரதை வேண்டும் இருந்தாலும் நவக்கிரகங்களை பூஜைசெய்துவர நாளுக்குநாள் உன் வினையகலும் இது மத்திபம்.

### புதனின் பலன்

*போகமுண்டு அரசனைப்போல் புதனுனக்கு*
*புகழ்பெறவே உதயமது ஆனதாலே*
*யோகமுண்டு எதைச்செய்யினும் நஷ்டமில்லை*
*உதவியுண்டு அடுத்தவரா லமையுஞ்செல்வம்*
*சோகமுடன் மனையைவிட்டு போனோர் மீள்வார்*
*சுபம்நடக்கும் மனைவியர்க்கு கர்ப்பமுண்டு*
*ஆகமத்தின் வழிகண்டு சொன்னவாக்கு*
*ஆருடம் பொய்யானல் தீயில்போடு*

உரை:- புதன் உதயமானதால் அரசனைப்போன்ற ராஜ போகம் கிடைக்கும் எந்த தொழில் செய்யினும் உனது யோகத் தின் காரணத்தினுல் நஷ்டமேற்படாது அடுத்த பேர்களால் ஆதர வும் செல்வத்தின் அமைப்பும் உண்டாகும் கவலையின் மிகுதியால் பதிவிட்டகன்றோர்களும் சீக்கிரத்தில் க்ஷேமத்துடனே வந்துசேர் கள் மனையில் சுபகாரியமும் பாரியாளுக்கு ஆண்குழந்தையும் தரிக் கும் பலவித கவலைகளும் நோயும் விலகும் எக்காரியத்திலும் ஜெய மடையும் உத்தமம்

### குருவின் பலன்

*தீயர்கள் உறவதும் தீதும் நீங்கும்*
*திரமுடன் குருவுனக்கு உதயமானுல்*
*நேயர்களின் உதவியுண்டு நேர்வடக்கே*
*நிகழ்ந்திடுமே லாபமது தொழிலுமோங்கும்*
*சேயர்களால் உன்குடும்பம் சிரப்புற்றோங்கும்*
*சினந்தவரின் உறவுபெறும் தீரும்நோயும்*
*தாயமுடன் துணிந்துநீ எதைச்செய்தாலும்*
*தொந்தரையும் நிந்தனையும் நிகழ்ந்திடாதே*

உரை:- குரு ஆருடமானதால் உன் தீதுள்ள செய்கைகள் நீங்கும் தீயர்களின் உறவும் போகும் ஆப்த நண்பர்களின் அனுகூலமும் வடக்கு திசையில் லாபமும் தொழில் மேன்மையும் மைந்தர்களால் மனமகிழ்ச்சியும் சீரும் சிறப்பும் பெருகும் பகைவர்களின் உறவுகூடும் நோய்நீங்கும் மனந்துணிந்து நீ எக்காரியத்தி லீடுபட்டாலும் ஒருவித நிந்தனையும் தொந்தரையும் ஏற்படாது தடைபடாமல் காரியம் ஜெயமாகும் இது உத்தமம்.

**சுக்ரனின் பலன்**

*நிகழவே சுக்கிரனும் உதயமானால்*
*நிகரின்றி வாழ்ந்திடவே யோகமுண்டாம்*
*புகழவே தானதர்மம் மிகசெழிக்கும்*
*புண்ணிய வானெனவே பெயருமோங்கும்*
*அகமகிழ அண்டினோரை ஆதரிப்பாய்*
*அபலமாய் போனபொருள் கைமேல்கிட்டும்*
*சுகவாழ்வும் மகப்பேரும் சுயமாய்வேண*
*சொத்துரிமை பெற்றுலகில் ஜீவிப்பாயோ*

உரை:- சுக்கிரன் ஆருடமானதால் உனக்கு சிலநாளில் அளவிலாத யோகதிசை யுண்டாகும் தானதர்மத்தில் சிறந்துவாழ்வாய் உலகில் புண்ணியவானெனும் பெயர் சிறக்கும் தவிர அண்டினபேர்களை அன்புடன் ஆதரிக்கும் அமைப்பும் அபாரமான தனலாபமும் பெருகும் தவரிப்போன பொருளும் கிடைக்கலாம் மனையில் புத்திரசம்பத்து பெருகும் வேண்டிய மாடமாளிகைகளும் வாங்கலாகும் இது உத்தமம்.

**சனியின் பலன்**

*ஜீவிக்கும் தொழிலதுவும் சிதரிப்போகும்*
*சீரான சனியுனக்கு உதயமானல்*
*பாவிகளின் கூட்டத்திற்கு பகையோனவாய்*
*பேதனம்போல் குணங்கெட்டு அலையச்செய்யும்*
*சேவிக்கும் குலதெய்வம் சினந்துநிற்கும்*
*சேயர்களால் பலவிதத்தில் நஷ்டமாகும்*
*ஆவிதா னெடுங்கிடினு மஞ்சிடாதே*
*அப்பனே மண்டலமே கழித்திடாயே*

உரை:- சனி ஆருடமானதால் நீ செய்யும் தொழில் கெட்டுப் போகும் வாதிகளின் கூட்டம் உன்னை சதிசெய்ய சோதிப்பார்கள் தவிர குணம்மாறி பைத்தியங் கொண்டவன்போல் அலையநேரிடும் குடும்பத்தில் பிள்ளைகளால் பலவித நஷ்டமுண்டாம் கடன்காரர் களின் தொல்லையும் கைப்பொருள் விரையமும் ஏற்படும் வீட்டில் மடிந்தவர்களை நீ நினையாத காரணத்தினுல் அவர்களாலும் சில கஷ்டங்கள் சம்பவிக்கும் இருந்தால் இன்னும் 40-நாள் போக வேண்டும் மத்திபம்.

## ராகுவின் பலன்

*கழிப்பான ராகுனக்கு உதயமானுல்*
*கடும்பகையும் கலகங்களும் கஷ்டம்நேரும்*
*இழிவாக உந்தனையே ஏசுவார்கள்*
*இனத்தோர்க்கும் குணத்தோர்க்கும் பகையைமூட்டும்*
*விழிப்பாக்கும் திகைப்பாக்கும் வியாபாரம்தான்*
*வியாதிமிகும் கியாதியில்லை வழக்குதோர்க்கும்*
*அழிவாகும் பொருளுனக்கு அலைச்சலாகும்*
*அசடர்களின் சேஷ்டையுனக்கதிகமாகும்*

உரை:- இராகு ஆருடமானதால் குடும்பத்தில் கலகங்களும் கஷ்டமும் கடுமையான பகையுமுண்டாகும் கண்டவர்கள் உனை இழிவாக பேசுவார்கள் பந்துக்களும் பகையாவார்கள் நல்லவர் களை கண்டாலும் உனக்கு பொல்லாதவராக தோன்றும் வியா பாரத்தில் நஷ்டத்தின் மேலிட்டினுல் திகைப்பையளிக்கும் நோயுண் டாகும் கெடுதலான பெயரைத்தரும் வியாஜ்யமாடினுலும் அல்லது குடும்ப வழக்கானுலும் உன்பக்கம் ஜெயமாகாது கைப்பொருளும் நாளுக்குநாள் அழிவுவுண்டாகும் குரும்பான சேஷ்டைகளையும் உண்டுபண்ணும் இது மத்திபம்.

## கேதுவின் பலன்

*அதிகரிக்கும் தரித்திரந்தான் அவதிகாட்டும்*
*ஆதரவு அற்றவனுய் அலையச்செய்யும்*
*மதிப்புகெடும் தொழில்நஷ்டம் துணைவியாலே*
*மனவருத்தம் கேதுனக்கு உதித்ததாலே*

சதிநேரும் சினேகிதத்தில் சலிப்புண்டாக்கும்
சஞ்சலத்தால் பேய்பிடித்து ஆட்டிவைக்கும்
விதிப்பயன்போல் நடக்கும் அஞ்சிடாதே
விண்ணுலகில் முன்னோர்கள் வாக்யமீதே

உரை:- கேது ஆருடமானதால் பலவிதமான கெடுதல்களையே காட்டும் தரித்திரதிசை ஏற்படும் பந்துக்களையும் மனைவிமக்களையும் வெருத்து நிரபாாதியாக்கும் தன்மதிப்பை கெடுக்கும் மனைவியால் மனவருத்த மளிக்கும் சினேகிதரால் சதிஏற்படவும் நியாயமுண்டு மனச்சலிப்பேற்படும் சஞ்சலத்தால் பலவிகாரம் கொண்டு திரியச் செய்யும் இருந்தாலும் நவக்கிரக பூஜைசெய்ய நன்மையுண்டாகும் இது முன்னோர்களின் வாக்கியமாதலால் பிசகிடாது மத்திபம்.

## வாழி விருத்தம்

ஆகமத்தின் கலையுணர்ந்தோர் அறிஞர்வாழி
அகிலமதில் கவிபாடும் புலவர் வாழி
சோகமே அகலுதற்கு நன்மைதீமை
சுகமுடனே இதைகொண்டு உணர்ந்தோர் வாழி
தியாகனும் இசைத்த செந்தமிழும் வாழி
தீமையிலா முன்னோர்கள் செழித்து வாழி
பாகமாய் இந்நூலை பதிப்புசெய்த
பாலகிருஷ்ணன் உலகினிலே வாழி வாழி

கிரகங்களின் பலாபலன்

முற்றிற்று.

கலைமகள் அச்சகம் காலாடிப்பேட்டை சென்னை 19.

அநேக வைத்தியர்கள் கையாண்டு வரும்

## புரையோடிய இரணத்திற்கும்
## ஆராத புண்களுக்கும்

# வைத்தியம்

இந்நூல் அநேக வருஷங்களாக ஏட்டுப்பிரதிகளில் மறைவாக இருந்து இப்போதுதான் நம்மவர்களின் நன்மைக்காக அச்சிடப்பட்டுள்ளது இந்த அருமையான புரையோடிய இரணத்திற்கும் ஆராத புண்களுக்கும் வைத்தியம் என்னும் சாஸ்திரம் படிப்போருக்கு நன்கு புலனுகும்படி எளிய நடையில் தெளிவாக வரையப்பட்டுள்ளது வெட்டுக்காயம், குத்துக்காயம் கண்டமாலை, பவுத்திரமூலம், கன்னப்புற்று, முதலிய புற்று ரோகங்கள், அரையாப்பு முதலிய ஸ்திரீ ரோகங்கள், ஆருத புண்கள், புரையோடும் இரணங்கள், கரப்பான், சொறிசிரங்கு, முதலிய சகல இரணங்களையும் இப்புத்தகத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளன வைத்தியர் உதவியின்றி இதை படிப்போரே சிகிச்சை செய்து கொள்ளலாம் மேற்குறித்த ரணங்களை ஆற்ற வல்ல பிளாஸ்திரி, களிப்பு, லிண்டு, லோஷன் பற்றுகள் முதலியவற்றை இலகுவாய் அனைவரும் செய்து கொள்ளலாம் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று இரண்டு மாத காலத்தில் ஆற்றிக்கொள்ளக்கூடிய இரணங்களை இப்புத்தக சிகிச்சைப் பிரயோகத்தினுல் 10-தினங்களில் ஆற்றிக்கொள்ளலாகும் இதில் எவ்வித ரணங்களையும் கத்தியின்றி சிகிச்சை செய்யும் அரிய முறைகள் உண்டு இப்புத்தகம் வைத்திருப்பவர்கள் வைத்திய சாலைக்குச் செல்லவேண்டியதில்லை.

தபால் சிலவு அணு 12 விலை ரூபா 1—4—0

# அகஸ்தியர் ஆரூடம்

## இதனுடன்

### பாய்ச்சிகை சாஸ்திரமும் நக்ஷத்திரயோக சக்கரமும் அடங்கியது

இதில் 27-நட்சத்திரங்களின் ஆரூடமும் உத்தம மத்திபம் அறியும் ஆரூடமும் அவரவர்கள் கிரகங்களின் உத்தம மத்திபம் அறியும் ஆரூடமும் பாய்ச்சிகையை உருட்டி அதனுல் வரும் லக்கத்தின் உத்தம மத்திபம் அடங்கியுள்ளது ஆரூடம் சொல்லும் சாஸ்திர நிபணர்களுக்கு உயிர்தோழனுக அவசியம் உபயோகம் ஆகும் என்று பல அரிய பெரிய சாஸ்திரம் சொல்பவரை கொண்டு எழுதப்பெற்றது நண்பர்களே இதன் பெருமையை பார்க்க வேண்டுமானுல் ஒருமுறை வாங்கிபடித்து பாருங்கள் அப்போதுதான் உண்மை தெரியும் சாஸ்திரம் தெரிந்தவரும் சாஸ்திரம் தெரியாதவரும் வாங்கி ஷை கண்ட புஸ்தகத்தில் எழுதபெற்று இருக்கிறபடி உபயோகித்தால் சாஸ்திரம் பார்ப்பவரிடம் போக வேண்டியதில்லை தாமாகவே அவரவர் நன்மை தீமை தெரிந்துக்கொள்ளலாம்.

தபால் சிலவு அணு 12 விலை ரூபா 1—4—0

964
N57
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 102324
MADRAS

கிடைக்குமிடம்:—

டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்

நெ-2, எழுத்துக்காரன் தெரு, வண்ணாரப்பேட்டை, சென்னை 19.